கல்கி



KALKI மே 16, 1954 **4** அணா

கல்கி பொருளடக்கம்

மலர் 13 இதழ் 42 | 1954 மே 16 | ஜய வருஷம் வைகாசி 3

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 13 } தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார் இதழ் 42

'குளவிக் கூட்டைக் கலைத்தார்!'

கிழக்கு பாகிஸ்தானின் முடிசூடா மன்னராக விளங்கும் ஜனுப் பஸ்லுல் ஹக் சில தினங்களுக்கு முன் கல்கத்தாவுக்கு வந்தார்; வெகு அருமையாகப் பேசினார்; கல்கத்தா வாசிகளையும் இந்திய மகா ஜனங்களையும் ஆச்சரியத்தில் மூழ்கும்படி செய்தார்.

அதே சமயம் அவரது நேர்மையான பேச்சு, வகுப்பு வெறி பிடித்த பாகிஸ்தான் தலைவர்களிடையே ஆத்திரமும் ஆவேசமும் பொங்கும்படி செய்து விட்டது.

மேற்கு வங்காளத்துக்கு விஜயம் செய்த பழுத்த பாகிஸ்தானியும் கிழக்கு வங்காளப் பிரதமருமான ஜனுப் பஸ்லுல் ஹக் அங்கு ஒரு வாரம் வரையில் தங்கினார்; பல இடங்களில் பிரசங்கமாரி பொழிந்தார்; இந்தியாவின் இரு தவப் புதல்வர்களான சரத் சந்திர போஸ், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இவர்களிட மிருந்தே தாம் தாய்நாட்டுக்குத் தன்னலமற்ற தொண்டு செய்யும் ஆற்றல் பெற்றதாகப் பரவசம் அடைந்தார்; தமது நீண்டகால நண்பரும் மேற்கு வங்காளப் பிரதமருமான டாக்டர் ராய் முதலிய மற்றத் தலைவர்களுடன் அளவளாவினார்.

இதை யெல்லாம் அரசியல் நியதிக்குப் புறம்பான, நியாயமற்ற காரியம் என்று யாரும் கூற முடியாது.

ஜனுப் பஸ்லுல் ஹக் கல்கத்தாவில் பேசியபோது, மக்களின் க்ஷேமமே இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள தலைவர்களின் பொதுவான லட்சியமாக இருக்க வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் முஸ்லிம்கள் தாங்கள் மேக மண்டலத்திலிருந்து நேராகக் குதித்தவர்கள், அடுத்துள்ள இந்தியாவுடன் எவ்வித சம்பந்தமும் இல்லாதவர்கள் என்று எண்ணிக் கொள்ளக் கூடாது என்று புத்திமதி கூறினார்.

வங்காளம், பீஹார், பாகிஸ்தான் முதலிய பல்வேறு பிரதேசங்களிலே உள்ளவர்களும் பரஸ்பரம் சகோதரர்களாகக் கருத வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்தியாவில் உள்ளவர்களும் சரி, பாகிஸ்தானில் வாழ்பவர்களும் சரி, குறுகிய மனப்பான்மையுடன் இருக்கக் கூடாது. கட்சி, சமூக, மத, மாகாண உணர்ச்சிகளுக்குச் சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது என்று வற்புறுத்தினார்.

பாகிஸ்தானில் உள்ள பாமர மக்கள் இந்தியாவில் உள்ளவர்களைச் சகோதரர்களாகவே கருதுகிறார்கள் என்ற உண்மையையும் எடுத்துக் கூறினார்.

ஆண்டவன் தந்தை, மானிடர்கள் எல்லாரும் சகோதரர்கள் என்பதே இஸ்லாம் மதத்தின் அடிப்படைத் தத்துவம்.

எனவே, அரசியல் ரீதியாகப் பார்த்தாலும், மத ரீதியாகப் பார்த்தாலும், பாகிஸ்தான் தலைவர்களுள் மிகப் பெரியவரும் அரசியலில் அறுபது வருஷ கால அநுபவம் உள்ளவருமான ஜனுப் பஸ்லுல் ஹக்கின் பொன் மொழிகளில் குற்றம் குறை கூறுவதற்கில்லை.

அப்படி யிருந்தும் பஸ்லுல் ஹக்கின் போற்றத் தக்க பிரசங்கம், குளவிக் கூட்டைக் கலைத்த கதையாக முடிந்திருக்கிறது என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

அதாவது ஜனுப் ஹக்கின் பிரசங்கம் பாகிஸ்தான் தலைமை சர்க்கார் பீடமான கராச்சியில் மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கி யிருக்கிறதாம்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நீடித்த நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் உண்டாக்கக் கூடிய ஜனுப் ஹக்கின் பொன் மொழிகள் பாகிஸ்தான் தலைவர்களிடையே ஆத்திரத்தை உண்டு பண்ணக் காரணம் என்ன என்பதைப் பார்க்கலாம்.

* * * *

மதம், மாற்சரியம், பகை, துவேஷம் முதலியவைதான் தேசபக்தியின் சின்னங்கள் என்று முஸ்லிம் லீக் தலைவர்கள் கருதினார்கள்; அவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் இந்தியாவைப் பிளக்க வேண்டிய நிலைமையை உண்டாக்கினார்கள்; தங்களுக்கென்று தனி நாட்டை, பாகிஸ்தானை உருவாக்கிக் கொண்டார்கள்.

அத்துடன் முஸ்லிம் லீகர்கள் தங்களுடைய விபரீத குணங்களை விட்டு ஒழிக்கவில்லை.

அவற்றை அடிப்படையாகக் கொண்டே பாகிஸ்தான் சர்க்கார் நிர்வாக மாளிகையையும் அமைக்கத் தொடங்கினார்கள்.

எனவே, மத, மாகாண வெறியும், பகைமையும், துவேஷமும் கூடாது என்று ஜனாப் ஹக் கூறியிருப்பதைக் கண்டு பாகிஸ்தான் தலைவர்களுக்குக் கோபம் உண்டாகியிருப்பது இயல்பே அல்லவா!

பாகிஸ்தான் தலைவர்களுக்கு, ஜனாப் பஸ்லுல் ஹக் மீது கோபம் பொங்கி வருவதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது.

சமீபத்திலே நிகழ்ந்த கிழக்குப் பாகிஸ்தான் தேர்தலில் முஸ்லிம் லீக் படுதோல்வி அடையும்படி ஜனாப் ஹக் செய்து விட்டார் அல்லவா!

மேற்படி தோல்வி காரணமாகப் பாகிஸ்தான் தலைமை, சர்க்காரின் நிலைமை கலகலத்திருக்கிறது; மிகவும் ஆட்டம் கண்டிருக்கிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபை இருப்பதா, அல்லது இறப்பதா என்ற கேள்வியையும் எழுப்பி விட்டிருக்கிறது.

அத்தகைய அரசியல் புரட்சிக்கும் பூகம்பத்துக்கும் காரண கர்த்தாவான ஜனாப் ஹக் மீது ஆத்திரம் கொண்டுள்ள பாகிஸ்தான் தலைவர்கள், அவரது பிரசங்கங்களைத் திரித்துக் கூற முற்பட்டிருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

இச் சந்தர்ப்பத்தைப் பாகிஸ்தான் தலைவர்கள் தங்களுக்குச் சாதகமாக உபயோகிக்க முற்படலாம்; ஜனாப் ஹக் தலைமையில் நிறுவப்பட்டுள்ள கிழக்கு வங்காள சர்க்காரைக் கவிழ்ப்பதற்குப் பெரு முயற்சி செய்யலாம்.

** ** **

இந்தியாவும் பாகிஸ்தானும் விரோத பாவத்துடன் இருக்கக் கூடாது; இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் சகோதர பாவத்துடனும் ஒற்றுமையுடனும் இருக்க வேண்டும் என்றுதான் ஜனாப் ஹக் கூறியிருக்கிறார்.

அவ்விதம் இருப்பதுதான் இரு நாடுகளுக்கும் க்ஷேமம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

பாகிஸ்தானின் விஷமக் கூற்றுக்குப் பதில் அளித்துள்ள ஜனாப் ஹக், பாகிஸ்தானிடம் தமக்குள்ள பற்றுதலும் விசுவாசமும் எந்த முஸ்லிம் லீகருக்கும் குறைந்ததல்ல என்று ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்.

என்ன அநியாயம்! பாகிஸ்தானும் இந்தியாவும் சிநேக பாவத்துடன் இருக்க வேண்டும் என்று கூறுவது குற்றமா! இரு தேச ஜனங்களிடையும் நல்லெண்ணமும் நெருங்கிய தொடர்பும் ஏற்படுவதற்குற்ற முயற்சியை முஸ்லிம் லீகர்கள் ஏன் தடுக்க வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார்.

தேச பக்தியும், நேர்மையும், கண்ணியமுமே உருவெடுத்த எல்லை காந்தி கான் அப்துல் கபார் கான் மீதே பழி சுமத்த அஞ்சாத பாகிஸ்தான் தலைவர்கள் முஸ்லிம் லீகின் படுதோல்விக்குக் காரண புருஷரான ஜனாப் ஹக்கை அவ்வளவு இலகுவில் விட்டு விடுவார்களா!

** ** **

பாகிஸ்தானுடன் நட்புடனும் ஒற்றுமையுடனும் இருப்பதுதான் தங்கள் கொள்கையேயன்றி, பாகிஸ்தானும் இந்தியாவும் மறுபடியும் இணைய வேண்டும் என்பது தங்கள் நோக்கமல்ல என்பதை ஜவாஹர்லால்ஜி பல தடவை வற்புறுத்திக் கூறியுள்ளார்.

அப்படியிருந்தும் பாகிஸ்தான் தலைவர்கள் பகை உணர்ச்சியையும் துவேஷ புத்தியையும் விட்டதாகத் தெரியவில்லை.

அவர்கள் அதை விட்டிருந்தால், ஜனாப் ஹக்கின் தர்ம நியாயமான பேச்சைக் கண்டு ஆத்திரம் அடைய மாட்டார்கள்.

ஜனாப் ஹக், கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள தொண்ணூறு சதவிகித மக்களுக்கு மேற்பட்ட ஜனங்களின் ஆதரவு பெற்றுப் பதவிக்கு வந்தவர்.

எனவே, அவரது பொன் மொழிகளின் கருத்தை ஆய்ந்தோய்ந்து பார்க்காமல் பாகிஸ்தான் மக்கள் தங்கள் தலைவர்களின், பத்திரிகைகளின் துஷ்பிரசாரத்தைக் கண்டு ஏமாந்துவிட மாட்டார்கள் என நம்பலாம்.

பகை உணர்ச்சியையும் துவேஷப் பிரசாரத்தையும் தங்களுடைய அரசியல் கருவிகளாகக் கொண்ட பாகிஸ்தான் தலைவர்கள் பாகிஸ்தான் மக்களில் பலரைச் சிறிது காலம் ஏமாற்றலாம்; சிலரை வெகு காலம் ஏமாற்றலாம்; ஆனால், எல்லோரையும் எக்காலத்திலும் ஏமாற்றி வர முடியாது அல்லவா!

டூப்ளே பிரபுவின் ஆவி!

வெகு காலமாகப் புதுச்சேரியைச் சுற்றிக் கொண்டிருந்த டூப்ளே என்ற பிரஞ்சுப் பிரமுகரின் ஆவி சில தினங்களுக்கு முன்தான் அங்கிருந்து ஓடி மறைந்தது. இனி தனக்குப் புதுச்சேரியில் எவ்வித வேலையும் இல்லை என்று அந்த ஆவி எண்ணியிருக்கலாம்; பிரஞ்சுக் கப்பலில் ஏறித் தன் சொந்த நாட்டுக்குச் சென்றிருக்கலாம்!


இருநூறு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் பிரஞ்சு ஆதிக்கத்துக்கு அஸ்திவாரம் அமைத்தவர் டூப்ளே என்ற பிரஞ்சுக்காரர் என்பதைச் சரித்திரம் படித்த எல்லோரும் அறிவர். அவர் அக்காலத்தில் புதுச்சேரி கவர்னர் ஜெனரலாக இருந்து பிரஞ்சு ஆதிக்கத்தை நிலைநிறுத்தினார்.

அவரது ஞாபகார்த்தமாக, புதுச் சேரியில் டூப்ளே தெரு என்று ஒரு வீதி இருக்கிறது. அந்த வீதிதான் புதுச்சேரியின் இருதய ஸ்தானம் என்று சொல்லலாம். சில தினங்களுக்கு முன்பு அந்த இடத்திலும் அங்குள்ள தேச பக்தர்கள் முதல் தடவையாகத் தாயின் மணிக்கொடியைப் பறக்க விட்டார்கள். அதைக் கண்டு, புதுச்சேரியைச் சுற்றிக் கொண்டிருந்த டூப்ளேயின் ஆவி நடு நடுங்கிப் பறந்தோடியிருக்கும் அல்லவா!

** ** **

இந்தியாவில் உள்ள புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் இந்த நாலு பிரஞ்சு நிட்டுப் பிரதேசங்களும் இந்தியாவுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தேசபக்தர்கள் ஆரம்பித்த சத்தியாக்கிரக இயக்கம் நாளுக்குநாள் மகத்தான வெற்றி பெற்று வருகிறது. இரண்டு மாதங்களுக்கு முன் வரையில் பிரஞ்சு இந்திய மந்திரியாக இருந்தவரும் சோஷலிஸ்ட் கட்சித் தலைவருமான ஸ்ரீ குபேர், பிரஞ்சு இந்திய சட்ட சபை அங்கத்தினர் ஸ்ரீ முத்து வெங்கடப்ப ரெட்டியார் முதலிய பிரமுகர்களின் தலைமையில் பிரஞ்சு

சமரசப் பேச்சு!



பிரஞ்சு சர்க்காரும் இந்திய சர்க்காரும் பாரிஸில் கூடிப் பிரஞ்சிந்தியப் பிரச்னையை விவாதிக்கிறார்கள்.

இந்தியாவைச் சேர்ந்த கிராமங்கள் ஒவ்வொன்றாக விடுதலை பெற்று வருகின்றன. பல இடங்களில் போலீசார் போலீஸ் ஸ்டேஷன்களைப் பொது மக்களிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறி யுள்ளனர். விடுதலை பெற்ற இடங்களில் பொது மக்களே நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள்.

பிரஞ்சு இந்தியாவைச் சேர்ந்த பிரதேசங்களில் சற்றேறக் குறைய பாதிக்கு மேல், அதாவது எழுபத்தைந்து சதுர மைல்களுக்கு மேல், அவ்வாறு பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று விட்டதெனில், சத்தியாக்கிரகத்தின் வெற்றியை ஊகித்துக் கொள்ளலாம்.

பிரஞ்சு இந்திய அதிகாரிகள் தங்களுடைய அடக்குமுறைகளை எல்லாம் பிரயோகித்துப் பார்த்தார்கள். நூற்றுக்கணக்கான சத்தியாக்கிரகத் தொண்டர்களைக் கைது செய்தார்கள். பலரைத் துப்பாக்கியால் சுட்டார்கள். மற்றும் பலரை மிரட்டிப் பார்த்தார்கள். வேறு பலருக்கு ஆசை வார்த்தைகளைக் கூறினர். ஆனால், அவர்களுடைய நய வஞ்சகம், சூழ்ச்சி, ஆர்ப்பாட்டம் எதுவும் இணைப்பு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள தொண்டர்களிடம் பலிக்கவில்லை.

* * *

பிரஞ்சு இந்தியாவின் எதிர்கால அரசியல் விஷயமாக, பிரஞ்சு இந்திய மக்களும் பிரதிநிதிகளும் தங்கள் முடிவைச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிவித்து விட்டார்கள். எனவே, அவ்விஷயமாக இனி பொதுஜன வாக்கு எடுப்பது அர்த்தமற்ற காரியம் என்றும், அதற்குத் தாங்கள் இணங்க முடியாது என்றும் இந்திய சர்க்கார் பிரஞ்சு சர்க்காருக்குக் கண்டிப்பாக அறிவித்து விட்டார்கள்.

எனவே, நிலைமை மிதமிஞ்சி விட்டதை உணர்ந்த பிரஞ்சு சர்க்கார் உச்சாணிக் கிளையிலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். பிரஞ்சு இந்திய விஷயமாக இந்திய சர்க்காருடன் சமரசப் பேச்சு நடத்தத் தயார் என்று அறிவித்தார்கள்.

அதன் பலனாக, இருதேச சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் மே மாதம் பதினாலாம் தேதியிலிருந்து பிரான்ஸ் தலை நகரில் சமரசப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகின்றன.

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் தற்போது ஏற்பட்டுள்ள புரட்சியைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகப் படுத்திக் கொள்ள இந்திய சர்க்கார் முற்பட்டிருக்கலாம். விடுதலை பெற்ற பிரஞ்சிந்தியப் பிரதேசங்களை, பிரஞ்சு சர்க்காரின் அனுமதி யின்றியே இந்தியாவுடன் எளிதில் இணைத்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால், இந்திய சர்க்கார் சர்வ தேச சம்பிரதாயங்களுக்கும் விதிகளுக்கும் விரோதமாக எதுவும் செய்ய முற்படவில்லை. பிரஞ்சு சர்க்காரின் கௌரவத்தைக் குலைக்க விரும்பவில்லை.

எனவே, இந்திய சர்க்காரின் நேர்மையையும் பெருந் தன்மையையும் பிரஞ்சு சர்க்கார் பிரதிநிதிகள் நன்கு உணர்ந்து, இந்தக் கடைசி நேரத்திலாவது பாரிஸில் நடக்கும் பேச்சில் சமரசமான முடிவுக்கு வர முற்படுவார்கள் என நம்புகிறோம்.

புதிய உத்தரவின் லட்சியம்

கொழும்பு, மே மீ 8உ

ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து இந்திய அரசாங்கம் விஸா முறையை அமுலுக்குக் கொண்டு வரத் தீர்மானித்துள்ளதாக இங்குள்ள இந்திய ஹை கமிஷன் உத்தியோக தோரணையில் அறிவித்திருக்கிறது. இலங்கை அரசாங்கம் 1949–ம் வருடம் இமிகிரேஷன் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்த நாள் முதல் இந்தியாவிலிருந்து இங்கு யார் வருவதாயிருப்பினும் இலங்கை அரசாங்கத்தினிடம் விஸா வாங்க வேண்டியதாயுள்ளது. இலங்கை அரசாங்கம் சென்ற நான்கு வருடங்களாகச் செய்து வந்த காரியத்தையே இந்திய அரசாங்கம் இப்பொழுது செய்கின்றது. இவ்வளவு காலமும் இலங்கையிலிருந்து வருவோருக்கு இந்தியாவின் கதவு திறந்திருந்தது. இப்பொழுதும் கூட இவர்கள் இந்தியாவுக்கு வந்து போவதில் டில்லி அரசாங்கத்துக்கு ஆட்சேபமில்லை. இலங்கையையே தாயகமாகக் கொண்ட லட்சக்கணக்கான இந்திய வம்சா வழியினருக்கு நியாயமாகப் பிரஜா வுரிமை வழங்க வேண்டியிருக்க, அவர்களை இந்தியாவுக்குப் பார்சல் செய்து அனுப்பிவிட முயற்சிகள் நடப்பதை உத்தேசித்தே இந்தியாவின் வாசற் கதவில் ஒரு காவல்காரனை வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் டில்லி சர்க்காருக்கு ஏற்பட்டது.

இந்தியப் பிரஜைகளென்று தங்களைப் பிரகடனப்படுத்தி, இந்தியா பாஸ்போர்ட் பெற்றவர்கள் இந்தியாவுக்குத் தங்கு தடையில்லாமல் வரலாம். அவர்களுக்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை. ஆனால் இலங்கைப் பிரஜைகள், இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்ட இந்திய வம்சா வழியினர், இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுக் கொடுத்து தற்சமயம் ராஜ்யமற்ற நிலைமையிலிருப்பவர்கள் ஆகியவர்களெல்லாம் இங்குள்ள இந்திய ஹை கமிஷனிடம் விஸா பெற்றால் மட்டுமே இந்திய பூமியில் அடி எடுத்து வைக்கலாம். இது தான் புதிய சட்டத்தின் சாராம்சம்.

ராஜ்யமற்ற நிலைமையிலிருப்பவர்கள் எப்படியும் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புதான் என்பதை வலியுறுத்தவே இந்தியா புதிய சட்டத்தைக் கொண்டு வந்துள்ளதென்று கூறினால் பிழையாகாது. ராஜ்யமற்றவர்களுக்கு இதுவரையில் பிரயாண தஸ்தாவேஜுகளை வழங்கி வந்த இலங்கை அரசாங்கம் சென்ற மார்ச் மாதத்திலிருந்து திடீரென்று இதை நிறுத்திக் கொண்டிருக்கிறது. மறுபடி முன்போல இலங்கை பிரயாண தஸ்தாவேஜுகளை வழங்க முன் வந்தாலொழிய இவர்கள் இந்தியாவை எட்டிப் பார்க்கவும் முடியாது. இலங்கையில் நிலைத்துப் போகும் இவர்களுக்குப் பிரஜாவுரிமை யளிக்க வேண்டிய இந்த நாட்டு அரசாங்கத்துக்கு இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியை உண்டு பண்ணுவதுதான் டில்லி பிறப்பித்திருக்கும் புதிய உத்தரவின் அந்தரங்க இலட்சியமாகும்.

விநோத வியாக்கியானம்

கொழும்பில் நடந்து முடிவடைந்திருக்கும் ஆசியாப் பிரதமர்களின் மகாநாடு எவ்வளவு பெரிய கேலிக் கூத்து என்பதை நிரூபணம் செய்யும் சில சம்பவங்கள் இவ்வாரம் நிகழ்ந்திருக்கின்றன. ஆசியப் பிரதமர்களுடைய மகாநாடு ஆரம்பிப்பதற்கு ஓரிரண்டு தினங்களுக்கு முன்னால் இந்து சீனத்தில் போர் புரியும் ஏகாதிபத்திய வெறியர்களுக்குப் படை உதவிகள் போக இலங்கை உடந்தையாயிருந்தது. அந்தச் சூழ்நிலையில் ஆரம்பித்த ஆசியப் பிரதமர்கள் மகாநாடு வெறும் கேலிக் கூத்தாகி விடுமோ என்று பலரும் அஞ்சினார்கள். மகாநாடு நடந்து முடிந்த ஒரு வாரத்துக்குள்ளாக இந்து சீனத்தில் போர் புரியும் ஏகாதிபத்திய வெறியர்களுக்குப் படை உதவிகள் போக இலங்கை இப்பொழுது மீண்டும் உதவி புரிந்திருப்பது அரசியல் வட்டாரங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. நேற்று அனேகம் அமெரிக்க விமானங்கள் பிரஞ்சு பாரசூட் துருப்புகளுடன் இலங்கையில் இறங்கிப் பெட்ரோல் நிரப்பிக் கொண்டு போய் இருக்கின்றன.

"படைகள் போவதற்கு வழி விடமுடியாதென இந்தியாவும் பர்மாவும் மறுத்திருக்கையில் இலங்கை மாத்திரம் ஏன் ஆக்ரமிப்புக்கு உடந்தையாயிருக்க வேண்டும்!" என்று பார்லிமெண்டில் கேட்டதற்கு, "என்னுடைய யோசனையைக் கேட்டால் இந்தியாவும் பர்மாவும் என்னைப் பின்பற்றி நடக்கும்" என்று பிரதமர் ஸர் ஜான் பதிலளித்தார். இந்து சீனத்தில் யுத்தம் நின்ற பிறகுதான் மறுபடி அங்கு யுத்தம் நடக்கப் படை உதவிகள் போகப்படாதாம். யுத்த நிறுத்தம் ஏற்படும் வரை பிரஞ்சுப் படைகளுக்கு உதவிகள் போவதைத் தடுப்பது நியாயமில்லையாம். கம்யூனிஸ்டுகளை எதிர்த்துப் பிசாசுகள் போராடினால் கூட, அந்தப் பிசாசுகளின் பக்கத்தில்தான் நான் சேருவேன் என்றார் ஸர் ஜான்.

ஆசியாவின் சரித்திரத்திலேயே முதன் முறையாகக் கொழும்பில் கூடிய அதிமுக்கியமான மகாநாட்டின் தீர்மானத்துக்கு இலங்கைப் பிரதமர் அளிக்கும் வியாக்கியானம் இதுதான்.

கமிட்டியின் சிபார்சுகள்

நீர்க்க, டில்லியில் கைச்சாத்திட்ட இலங்கை – இந்தியா ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கு வழி வகைகள் செய்வதற்காக நியமிக்கப்பட்ட மந்திரி சபை உபகமிட்டியின் சிபார்சுகளை மந்திரி சபை இவ்வாரம் ஆமோதித்து விட்டதாயும் அதன்படி இமிகிரேஷன் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட விருப்பதாயும் தெரிய வருகிறது. மந்திரி சபை கீழ்க்கண்ட தீர்மானங்களைச் செய்திருக்கிறதாம் :—

1. இலங்கையிலுள்ள இந்தியர்களுக்கு வாச பர்மிட் கொடுப்பதை அறவே ஒழித்து விஸாவில் தான் இந்தியர்கள் இலங்கைக்கு வரலாமென்றும் இலங்கையில் தங்கியிருக்கலாமென்றும் செய்வது.

2. இலங்கைப் பிரஜைகள், இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுக் கொடுத்திருப்பவர்கள், இந்தியப் பிரஜைகளென்று தங்களைப் பிரகடனப்படுத்தி இந்திய பாஸ்போர்ட்டும் அதில் விஸாவும் வாங்கிக் கொண்டிருப்பவர்கள், இந்திய ஹை கமிஷனிடம் இந்தியப் பிரஜைகளாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டவர்கள் ஆகியவர்களைத் தவிர மற்றவர்களை எவரும் வேலையில் வைத்திருக்கப்படாதென்று தடை செய்தல்.

மேற்படி தீர்மானங்களை அனுசரித்து இமிகிரேஷன் சட்டம் திருத்தப்பட விருக்கிறதாம். இவற்றின் விளைவுகள் எப்படியிருக்குமென்பது இனித்தான் தெரிய வேண்டும். — ரஜனி



அத்தியாயம் 91

மலர் உதிர்ந்தது!

வந்தியத் தேவன் ஓலையை வாங்கிக் கொண்டு வானதியைப் பார்த்து, "இளவரசி! என்னைத் தங்களுக்கு நினைவிருக்கிறதா? அடியோடு மறந்து விட்டீர்கள் என்றல்லவோ நினைத்தேன்?" என்றான்.

"ஐயா! தங்களை எவ்வாறு நான் மறக்க முடியும்? எனக்கும் என் கணவருக்கும் தாங்கள் செய்துள்ள உதவிகளைத்தான் எப்படி மறக்க முடியும்?" என்றாள் வானதி.

"அதனாலேதான் நான் இல்லாத சமயம் பார்த்துத் தங்கள் திருமணத்தை நடத்திக் கொண்டீர்களாக்கும்!" என்றான்.

வானதி குறும்புப் புன்னகையுடன், "ஆமாம்; தாங்கள் இருந்திருந்தால் பொன்னியின் செல்வரின் மகுடாபிஷேகத்தைப்போல் திருமணமும் நடந்திருக்கலாம் அல்லவா? தாங்கள் என்ன சூழ்ச்சி செய்திருப்பீர்களோ, என்னமோ, அதை யார் கண்டது?" என்றாள்.

கல்கி

"நானா பொன்னியின் செல்வருக்கு மகுடாபிஷேகம் நடக்காதபடி செய்தேன்? பூங்குழலியிடம் போட்டி போட்டுக் கொண்டு தாங்கள் 'சிங்காதனம் ஏறுவதில்லை' என்று செய்த சபதம் அல்லவா அதற்குக் காரணம்? படகுக்காரப் பெண்ணுக்கு அதிர்ஷ்டம் அடித்தது! என் மீது குறைப்பட்டு என்ன பயன்?" என்றான் வந்தியத்தேவன்.

"அவளே அந்த அதிர்ஷ்டத்தை அநுபவிக்கட்டும்! அதற்காக அவள் பேரிலும் எனக்குக் குறை இல்லை; தங்கள் பேரிலும் குறை இல்லை. மகிழ்ச்சிதான். ஆனால் தங்களுடைய திருமணத்துக்கு நாள் குறிப்பிடும்போது மட்டும் நல்ல சோதிடராகப் பார்த்து நாள் குறிப்பிடச் செய்யுங்கள்!" என்றாள்.

"குடந்தை சோதிடரையே நான் வைக்கச் சொன்னால் போகிறது! தங்களுக்கெல்லாம் அவரிடத்திலே தானே

நம்பிக்கை!'' என்று வானதியைப் பார்த்துச் சொன்னான் வந்தியத் தேவன்.

வானதி கலீர் என்று சிரித்து விட்டு இளைய பிராட்டியை நோக்கி, ''அக்கா! இவர் குடந்தை சோதிடரைப் பற்றிச் சொன்னதும் ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது!'' என்று சொல்லி விட்டு மறுபடியும் கலகலவென்று சிரித்தாள்.

''எதை நினைத்துக் கொண்டு சிரிக்கிறாய், வானதி! 'உன் வயிற்றிலே பிறக்கப் போகிற பிள்ளை மூன்று உலகத்தையும் ஆளப் போகிறான்' என்று அந்த ஜோசியர் உளறினாரே. அதை எண்ணிச் சிரிக்கிறாயா?'' என்றாள் குந்தவை.

''அதை ஏன் உளறல் என்கிறீர்கள், தேவி? அந்த ஜோசியம் பலிக்கப் போகிறது!'' என்றான் வந்தியத் தேவன்.

வானதி தன்னை யறியாமல் ஏற்பட்ட கூச்சத்தில் சிரிப்பை அடக்கிக் கொண்டாள். பிறகு, ''அக்கா! நான் ஒன்று சொல்ல வந்தால், தாங்கள் பேச்சை வேறு பக்கம் திருப்புகிறீர்களே? குடந்தை சோதிடரிடம் நான் 'இளைய பிராட்டிக்குத் தகுந்த கணவர் எங்கிருந்து வரப் போகிறார்?' என்று கேட்டேன். 'இந்த நிமிஷமே ஆகாசத்திலிருந்து வந்து குதித்தாலும் குதிப்பார்!' என்றார் ஜோசியர். மறுநிமிடம் இவர் ஜோசியருடைய சீடனுடன் சண்டையிட்டுக் கொண்டே உள்ளே வந்து குதித்தார்! அந்தச் சம்பவத்தை நினைத்துச் சிரித்தேன்!'' என்றாள்.

குந்தவை பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு கள்ளக் கோபத்துடன், ''போதும் உன் விளையாட்டு! அவசரமாக வந்திருக்கும் ஓலையை இவர் படிக்கட்டும்!'' என்றாள்.

வந்தியத்தேவன் ஓலையைப் படித்த போது அவனுடைய முகத்தில் தோன்றிய கவலைக் குறியை இரண்டு பெண்மணிகளும் கவனித்தார்கள்.

''என்ன சேதி? கந்தமாறன் என்ன எழுதி யிருக்கிறான்?'' என்று இளைய பிராட்டி ஆர்வத்துடன் கேட்டாள்.

''தாங்களே படித்துப் பாருங்கள்!'' என்று வந்தியத் தேவன் ஓலையைக் குந்தவையிடம் கொடுத்தான்.

ஓலையில் பின்வருமாறு எழுதியிருந்தது:

''என் அருமைத் தோழனாகிய வல்லவரையன் வந்தியத் தேவனுக்கு. நான் உனக்குச் செய்த குற்றங்களையும் இழைத்த அநீதிகளையும் மன்னித்து விட்டு, என் சகோதரி மணிமேகலையைக் கடைசி முறை பார்ப்பதற்காக உடனே புறப்பட்டு வந்து சேரவும். இளஞ் சம்புவரையன் கந்தமாறன்.''

குந்தவை அதைப் படித்து விட்டு, ''ஒரு விதத்தில் இது நல்ல செய்திதான். மணிமேகலை அகப்பட்டுவிட்டாள் என்று தெரிகிறது!'' என்றாள்.

''அது என்ன? மணிமேகலை எங்கே போயிருந்தாள்?'' என்று வந்தியத்தேவன் வியப்புடன் வினவினான்.

''மணிமேகலையைப் பற்றிய செய்தி ஒன்றுமே தங்களுக்குத் தெரியாதா?''

''தெரியாது! தங்களைக் கேட்கவே எண்ணி யிருந்தேன்.''

''நானும் சொல்ல விரும்பினேன். ஆனால் இவ்வளவு கல் நெஞ்சுடன் அவளைப் பற்றி விசாரிக்காம விருப்பவரிடம் எப்படி அவள் பேச்சை எடுப்பது என்று தயங்கினேன்.''

''தேவி! மணிமேகலை விஷயத்தில் நான் கல்நெஞ்சனாவது எப்படி? அவளைப் பொறுத்த வரையில் நான் இறந்தவனாகி விட்டேன் அல்லவா?''

''இல்லை; அவளுக்குத் தாங்கள் இறந்தவராக வில்லை. இறவாத வரம் பெற்ற அமரராகி விட்டீர்கள்!''

''போகட்டும்; இப்போதாவது மணிமேகலையைப் பற்றிச் சொல்லுங்கள்.''

''சொல்லுவதற்கே வருத்தமா யிருக்கிறது. செம்பியன்மாதேவி மணிமேகலை தம்முடன் இருக்கட்டும் என்று எவ்வளவோ சொன்னார். சம்புவரையர் அதற்கு இணங்கவில்லை. கந்தமாறன் எல்லைப் பாதுகாப்புக்குப் போய் விடுவான் என்றும், தம் புதல்வியாவது தம்முடன் இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி அழைத்துச் சென்றார். கடம்பூர் மாளிகை எரிந்து போய் விட்டபடியால் பாலாற்றின் வடகரையில் புதிய மாளிகை கட்டிக்கொள்ளச் சக்கரவர்த்தியின் அநுமதியும் பெற்றுக் கொண்டு புறப்பட்டார். வழியில் வீர நாராயண புரத்துக்கு அருகில் இரவு நேரத்தைக் கழிப்பதற்காகக் கூடாரம் போட்டுக் கொண்டு தங்கினார். மறுநாள் பொழுது விடிந்து பார்த்தால் மணிமேகலையைக் காணவில்லையாம். ஒருவேளை இங்கே திரும்பி ஓடி வந்து விட்டாளோ என்று பார்ப்பதற்காக ஆள் அனுப்பினார். இங்கே வரவில்லை என்று சொல்லி அனுப்பினோம். அது முதல் எங்களுக்கெல்லாம் ஒரே கவலையாக இருந்தது. ஒருவேளை வீர நாராயண ஏரியில் விழுந்து உயிரையே மாய்த்துக் கொண்

டிருப்பாளோ என்று நினைத்து நினைத்து வருந்தினோம். நாலாதிசையிலும் ஆள்கள் தேடிக் கொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. கந்தமாறனுடைய ஓலையி லிருந்து மணிமேகலை இருக்குமிடம் தெரிந்து அவளைக் கண்டு பிடித்து விட்டார்கள் என்று தோன்றுகிறது."

"அவளை நான் போய்ப் பார்ப்பதிலே தான் என்ன பயன்? என்னை அவள் தெரிந்து கொள்ளப் போவதில்லை!" என்றான் வந்தியத் தேவன்.

"இருந்தாலும் தாங்கள் அவசியம் போக வேண்டும். 'கடைசி முறையாக' என்று கந்தமாறன் எழுதி யிருக்கிறான். அதன் பொருள் என்னவோ தெரிய வில்லை" என்றாள் குந்தவை.

"அக்கா! இவர் கொஞ்சமும் ஈவு இரக்கம் அற்றவர். மணிமேகலையின் அன்புக்குக் கொஞ்சமும் பாத்திரமில் லாதவர். ஒவ்வொருவர் அன்புக்காகப் பெரிய சாம்ராஜ்யத்தையே தியாகம் செய்கிறார்கள். இவரோ ஒரு பிரயாணம் செல்வதற்குக் கூடத் தயங்குகிறார்!" என்று வானதி ஒரு போடு போட்டாள்.

வந்தியத் தேவன், "இளவரசி! உலகத்தில் இராஜ்யங்கள் கொஞ்சமாகத்தான் இருக்கின்றன. ஆகையால் அன்புக்காக இராஜ்யத்தைத் தியாகம் செய்கிற காரியம் சிலராலேதான் முடியும். ஆனால் முதலில் தாங்கள் கூறியது உண்மையே. மணிமேகலையின் அன்புக்கு நான் சிறிதும் தகுதியில்லாதவன். தெய்வத்தினிடம் வைக்க வேண்டிய காதலை அவள் என்னிடம் வைத்து விட்டாள். நான் தேவனல்ல; குற்றங் குறைகள் உள்ள சாதாரண மனிதன். மணிமேகலையின் அன்பு கடவுளுக்கு அர்ப்பணமாக வேண்டியது!" என்றான்.

"இருந்தாலும் தாங்கள் ஒரு தடவை அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வருவதில் தவறு ஒன்றுமில்லையே. கந்தமாறனும் 'கடைசித் தடவையாக' என்று தானே எழுதி யிருக்கிறான்?" என்றாள் இளையபிராட்டி குந்தவை.

"நான் போக மாட்டேன் என்று சொல்ல வில்லையே? போவதில் பயன் உண்டா என்றுதான் சந்தேகிக்கிறேன். நான் அவளுக்கு இறந்து போனவன் ஆயிற்றே என்று தயங்குகிறேன். ஆயினும் 'கடைசித் தடவையாக' என்று கந்தமாறன் எழுதியிருப்பதின் பொருள் நன்றாக விளங்கவில்லை. அப்புறம் அவளைப் பார்க்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப் போகிறானா என்ன? அல்லது புத்த மதத்தாரின் கன்யா மாடத்தில் அவளைக் கொண்டு போய்ச் சேர்த்து விடப் போகிறானா?"

"தாங்கள் ஒருநாள் பிரயாணம் செய்தால் எல்லாம் தெரிந்து விடுகிறது!" என்றாள் இளைய பிராட்டி குந்தவை.

* * *

வந்தியத் தேவன் பழையாறையிலிருந்து வீர நாராயணபுரத்துக்கு ஒரு நாள்தான் பிரயாணம் செய்தான். ஆனால் முன் முறைகளில் போலன்றி இந்தத் தடவை அந்த ஒருநாள் ஒரு யுகம் செல்வது போல் சென்றது. அவனுடைய உள்ளத்தில் அவ்வளவு நினைவுகளும் அநுபவங்களும் குமுறிக் கொண்டிருந்தன. முதன் முதலில் அவன் இந்த வழியாகத் தஞ்சை சென்றபோது எத்தனையோ இனிய காட்சிகளைக் கண்டான்; எவ்வளவோ ஆகாசக் கோட்டைகள் கட்டினான். அவை யெல்லாம் ஆகாசக் கோட்டைகளாகப் போய் விடவில்லை. நடக்க முடியாத பல காரியங்கள் நடந்தேறி விட்டன. சோழ நாட்டின் செல்வக் குமாரரை, தமிழகமெல்லாம் போற்றிக் கொண்டாடிய வீர இளவரசரை, தன் கையில் வந்த சாம்ராஜ்ய மகுடத்தை இன்னொருவர் சிரஸில் சூட்டி அதனால் மேரு மலையை விட உயர்ந்து தியாக சிகரமாக விளங்கும் பொன்னியின் செல்வரை அவன் உயிர் நண்பராகப் பெற்றான். அத்தகைய பொன்னியின் செல்வர் போற்றி வணங்கும் இளைய பிராட்டியின் இதயத்தில் இடம் பெற்றான். ஈழ நாட்டிலுள்ள சோழ சைன்யத்தின் மாதண்ட நாயகன் பதவியை அடைந்தான். இவ்வளவும் தன் சாமர்த்தியத்தினால் என்று சொல்ல முடியுமா? ஒரு நாளுமில்லை. கடம்பூர் மாளிகைக்கு அன்றிரவு தான் தற்செயலாகப் போய்ச் சேர்ந்ததும், அங்கே சிற்றரசர்கள் செய்த சதியாலோசனையை அறிந்ததும் பின்னால் தொடர்ந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணமாயின. இந்த எட்டு மாத காலத்துக்குள் எவ்வளவு எவ்வளவோ காரியங்கள் நடந்து விட்டன. அவற்றில் சில மிக முக்கியமானவை. வானத்தில் தோன்றிய தூமகேது தன்னுடைய விபரீதச் செயலைப் புரிந்துவிட்டு மறைந்தது. ஆதித்த கரிகாலர் மறைந்து விட்டார். வால் நட்சத்திரத்துக்கும் ஆதித்த கரிகாலருக்கும் சம்பந்தம் இருக்க முடியுமா? லட்சக் கணக்கான மக்கள் அத்தகைய நம்பிக்கை கொண்டிருப்பது பொய்

யாகுமா? வானத்தில் ஊழி ஊழி காலம் சஞ்சரிக்கும் கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் இந்த மண்ணுலகில் இன்று தோன்றி நாளை மறையும் மனிதர் வாழ்வுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? ஆயினும், மனிதர்கள் அறிய முடியாத ஏதோ ஒரு அதிசயமான சக்தி, ஏதோ ஒரு மாற்றுதற்கரிய நியதி மனிதர் வாழ்வை நடத்தி வைக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இல்லாவிட்டால் சென்ற எட்டு மாதங்களில் தான் எத்தனையோ இடுக்கண்களில் அகப்பட்டுக் கொண்டு அவற்றிலிருந்து எவ்வாறு மீண்டிருக்க முடியும்? எத்தனை எத்தனை பேர் அந்தந்த இடுக்கண்களிலிருந்து தப்பித்துக் கொள்ளத் தனக்கு உதவி செய்திருக்கிறார்கள்! அவர்களை யெல்லாம் அந்தந்தச் சமயத்தில் தனக்கு உதவி புரிவதற்காகக் கொண்டு வந்து சேர்த்தது யார்? அந்த அதிசயமான சக்தியைத் தான் பெரியோர்கள் இறைவன் என்று போற்றி வணங்குகிறார்களா? சிவன், திருமால், மகாசக்தி என்றெல்லாம் பெயர் கொடுத்துப் பாடிப் பரவுகிறார்களா?

மிக மிக நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அவனுக்கு எதிர்பாராத விதமாகக் கிடைத்த உதவிகளை நினைத்த போது வந்தியத்தேவனுக்கு ஒரே வியப்பா யிருந்தது. உதவி செய்தவர்களை நினைத்த போது உள்ளம் உருகியது. கந்தமாறன் பின்னால் தனக்கு எவ்வளவு தீங்கிழைத்த போதிலும் முதலில் அவன் செய்த உதவியை என்றும் மறக்க இயலாது. ஆழ்வார்க்கடியான் அவனுக்கு எவ்வளவோ சகாயம் புரிந்தான். மோகினி உருக் கொண்ட ராட்சஸி நந்தினியும் அவனுக்கு உதவினாள்! அவளிடம் இளைய பிராட்டி இன்னமும் கொண்டிருக்கும் உள்ளக் கனிவை நினைத்து நினைத்து அவன் வியந்தான். ஓடக்காரப் பெண் பூங்குழலி செய்திருக்கும் உதவியை ஈரேழு பிறவிகளிலும் மறக்க முடியாது. அவள் சோழ சாம்ராஜ்ய சிங்காதனத்தில் வீற்றிருக்கத் தகுதி வாய்ந்தவளே.

சேந்தன் அமுதனை முதலில் அவன் அறிந்த உத்தமச் சோழர் செய்த உதவியை என்னவென்று சொல்வது? அதற்கு ஈடு இணை உண்டா! அவரை வைத்தியர் மகனின் ஈட்டியிலிருந்து காப்பாற்றியதனால் தன் நன்றிக் கடனைச் செலுத்தி விட்டதாகுமா? ஒரு நாளுமில்லை. தன் உடலில் உயிர் உள்ளவரையில் சோழ குலத்துக்குத் தொண்டு செய்வதின் மூலமாகத்தான் அந்தக் குலத்துக்குத் தான் பட்ட கடனைத் தீர்க்க முடியும். அப்புறம் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர்! தமது நெடிய திருமேனியில் அறுபத்து நாலு போர்க்காயங்களைத் தாங்கிய அந்த மகா வீரரைப் பார்க்கக் கொடுத்து வைத்தால், அதுவே தான் செய்த பெரும் பாக்கியம் என்று அவன் நினைத்திருந்த காலம் உண்டு. அவரைப் பார்த்தது மல்லாமல் அவருடைய அநாவசியமான கோபத்துக்கும் துவேஷத்துக்கும் அவன் உள்ளாக நேர்ந்தது. கடைசியாக, அவ்வளவுக்கும் அவர் பரிகாரம் செய்து விட்டார். தான் எறிந்த கத்தி குறி தவறி ஆதித்த கரிகாலரைக் கொன்று விட்டதாக ஒப்புக் கொண்டு அவனை விபரீதமான பழியிலிருந்தும் கொடுந் தண்டனையிலிருந்தும் காப்பாற்றினார்! அவர் அல்லவோ மகான்? இனி அவருக்கு எந்த விதத்தில் அவனுடைய நன்றியைச் செலுத்த முடியும்?

இவர்கள் எல்லாரு மிருக்கட்டும். அந்தப் பேதைப் பெண் மணிமேகலை! அவள் எதற்காக இவனிடம் இத்தகைய தெய்வீகமான அன்பு வைக்க வேண்டும்? ஏன் இப்படிப் பைத்தியமாக வேண்டும்? இவனைக் காப்பாற்ற வேண்டிக் கொலைக் குற்றத்தைத் தான் ஏற்றுக் கொள்ள ஏன் முன்வர வேண்டும்?

எல்லாம் அந்த மூடன் கந்தமாறனால் வந்த வினை. முதலில் கந்தமாறன் மணிமேகலையிடம் இவனைப் பற்றி இந்திரன்—சந்திரன், அர்ச்சுனன்—மன்மதன் என்றெல்லாம் புகழ்ந்திருக்கிறான். அப்போதே அந்தப் பேதைப் பெண் அவளுடைய உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டாள் போலும்! அதெல்லாம் வந்தியத் தேவனுக்குத் தெரியாது.

"என் தங்கையை நீ மறந்து விடு! பெரிய இடத்தில் அவளைக் கொடுக்கப் போகிறோம்!" என்று கந்தமாறன் சொன்னதும், வந்தியத்தேவன் உண்மையாகவே அவளை மறந்து விட முயன்றான். இளைய பிராட்டியைச் சந்தித்ததும் அதற்குத் துணையா யிருந்தது. ஆனால் மணிமேகலையோ தன் மனத்தை மாற்றிக் கொள்ளவில்லை; மாற்றிக் கொள்ள முயலவும் இல்லை. பலர் அறிய அவள் உள்ளத்தை வெளிப்படுத்தத் தயங்கவும் இல்லை. ஆகா! என்ன இனிய குணம் படைத்த பெண்! எவ்வளவு அடக்கம், அமரிக்கை! அவளுடைய மனந்தான் எத்தனை தூய்மை யானது! பச்சைக் குழந்தையைப் போன்ற உள்ளம்! உண்மை

யிலேயே அவள் குழந்தைதான்! பால் போன்ற மனம்; அதில் பல குறும்புத் தனம். தன்னை இறந்து விட்டவனாக அவள் எண்ணிக்கொண்டிருப்பது மிக்க நல்லது. எப்போதுமே சித்தப் பிரமை கொண்டவளாக அவள் இருந்துவிட மாட்டாளே! சில காலம் போனால் உள்ளம் தெளிந்துவிடும். வேறொரு வீர வாலிபனை மணந்து அவள் ஆனந்த வாழ்க்கை நடத்துவாள்!... உண்மையில், இப்படி நடக்குமா? அல்லது என்னை நானே ஏமாற்றிக் கொள்கிறேனா? மணிமேகலையை இந்த நிலைக்கு உள்ளாக்குவதற்கு நான் பொறுப்பாளி யாவேனா? 'கடைசி முறை பார்ப்பதற்கு வரவும்' என்று கந்தமாறன் எழுதி இருப்பதின் பொருள் என்ன? ஒரு வேளை......ஒரு வேளை......ஆகா! அந்த எண்ணமே எவ்வளவு வேதனை தருகிறது!

* * *

வந்தியத் தேவனுடைய எண்ணங்களின் வேகத்தை யொட்டி அவன் ஏறியிருந்த புரவியும் வேகமாகச் சென்றது. நல்ல வேளையாக, கொள்ளிட நதியில் பெரு வெள்ளம் போக வில்லை. படகும் தேவையாக இல்லை; குதிரை மாற்ற வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. கரையோரமாகச் சென்று கொண்டிருந்த சிறிய பிரவாகத்தில் குதிரையை இறக்கி விட்டுக் கடந்து, பரந்து விரிந்திருந்த வெண் மணல் திட்டுக்களையும் கடந்து அக்கரையை அடைந்தான்.

கடம்பூர் மாளிகை தீயில் எரிந்து கரி ஏறிய சில தூண்களும் சுவர்களுமாக நின்ற கோரக் காட்சியைத் தூரத்திலிருந்தே பார்த்து விட்டு மேலே சென்றான். வீர நாராயணபுரத்துக்கு அருகிலேயே கந்தமாறனுடைய ஆட்கள் அவனுக்காகக் காத்திருந்தார்கள். "சின்ன எஜமானர் எங்கே?" என்று கேட்டதற்கு, "ஏரிக்கரையில் படகுடன் காத்திருக்கிறார்கள்!" என்று பதில் வந்தது.

ஏரிக் கரையில் எதற்காகக் காத்திருக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டே வந்தியத் தேவன் வீர நாராயண ஏரியை அணுகினான். அந்த ஏரியின் நெடிதுயர்ந்த கரை ஒரு பெரும் கோட்டைச் சுவர் போல் அப்பாலிருந்த தண்ணீர்ப் பரப்பை மறைத்துக் கொண்டிருந்தது. முதல் தடவை அந்த ஏரிக் கரைக்கு அவன் வந்தபோது, பதினெட்டாம் பெருக்கு விழாவுக்காக அங்கே மக்கள் திரண்டு இருந்ததையும், ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கோலாகலமாக ஆடிப் பாடி விளையாடி விருந்துண்டு மகிழ்ந்ததையும் நினைவு கூர்ந்தான். இப்போது அந்த ஏரிக் கரையில் அவ்வளவு அதிக ஜனங்களைக் காணவில்லை. அங்கொருவர் இங்கொருவர்தான் காணப் பட்டார்கள். ஏரியில் எல்லா மடைகளிலிருந்தும் அச்சமயம் தண்ணீர் குபு குபு வென்று பாய்ந்து கொண்டிருந்தது. அவ்விதம் தண்ணீர் பாயும் ஓசை சந்தை இரைச்சல் போன்ற பேரொலியாகக் கேட்டது. இச்சமயம் ஒரு சில கணவாய்களிலிருந்து மட்டும் மெல்லிய சலசல ஒலியுடன் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. ஏதோ சோக கீதத்தைப் பாடிக் கொண்டு நடனம் ஆடும் நாட்டியப் பெண்ணின் சிலம்பின் புலம்பலைப் போல் அது தொனித்தது.

செங்குத்தாக உயர்ந்த ஏரிக்கரையின் மேல் குதிரையை லாகவமாக வந்தியத் தேவன் ஏற்றி உச்சியை அடைந்தான். அங்கிருந்து அவன் கண் முன் தோன்றிய காட்சியும் மாறுதலாகவே இருந்தது. தண்ணீர் நிறைந்து ததும்பி ஏரிக் கரையை உடைக்க முயல்வது போல் அலை மோதிக் கொண்டிருக்கவில்லை. கரையின் அடிப் பகுதியிலிருந்து தான் தண்ணீர்ப் பரப்பு தொடங்கியது. தண்ணீரின் செங்காவி நிறம் அடியோடு மாறிப் பளிங்குபோல் தெளிந்திருந்தது. கரையோரமாக அல்லியும், செங்கழுநீரும், தாமரையும், நீலோத்பலமும் இளம் இலை, முற்றிய இலை, இளம் மொட்டு, பாதி விரிந்த மொட்டு, முழுதும் மலர்ந்த மலர் - என்று இவ்வளவு பிரிவினையுடன் அடர்ந்து தழைத்திருந்தன. சிற்சில இடங்களில் தண்ணீரே அவற்றினால் மூடப்பட்டிருந்தது.

ஏரியின் தென் கரை ஓரமாக வடவாற்றிலிருந்து நீரோட்டம் சுழிகளும் சுழல்களுமாக வந்து ஏரி நீரில் கலந்து கொண்டிருக்கவில்லை. அந்த ஆற்று நீரோட்டத்தின் வழியாக வெண் சிறகு விரித்த அன்னப் பட்சிகளைப் போல் படகுகள் மிதந்து வந்து கொண்டிருக்கவுமில்லை. நதியின் வெள்ளம் ஓடிக் கொண்டிருந்த ஏரி ஓரப் பகுதிகளில் இப்போது மரங்களும் செடிகளும் நாணற் புதர்களுமாகக் காட்சி அளித்தன. அவற்றின் இடையிடையே வெள்ளைக் கொக்குகளும் நாரைகளும் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்து கொண்டிருந்தன.

இவற்றை யெல்லாம் கவனிப்பதற்கு வந்தியத்தேவனுக்குச் சில வினாடிகளுக்கு

மேலாகவில்லை. அதற்குள் சற்றுத் தூரத்தில் ஏரிக் கரையோரமாக நின்ற படகு அவன் காட்சிக்கு வந்தது. அந்தப் படகில் இருப்பவர்களில் ஒருவன் கந்தமாறன் என்பதையும் தெரிந்து கொண்டான். உடனே அந்த இடத்தை நோக்கிக் குதிரையை விரைந்து செலுத்தினான். குதிரையின் மேலிருந்து தாவிக் குதித்துப் படகை அணுகினான். கந்தமாறன் ஒரு கையை நீட்டி வந்தியத்தேவன் கரத்தைப் பிடித்துப் படகில் ஏற்றிக் கொண்டான். படகுக்காரர்களுக்குப் படகை விடும்படி சமிக்ஞை செய்து விட்டு வந்தியத் தேவனைக் கண்ணீர் ததும்பிய கண்களால் சோகமாகப் பார்த்தான்.

"நண்பா! சீக்கிரமாகவே வந்து விட்டாய்! மிக்க வந்தனம்! இன்று வராமல் நாளைக்கு நீ வந்திருந்தால் ஒருவேளை மணிமேகலையை உயிருடன் பார்த்திருக்க முடியாது!" என்றான்.

வந்தியத் தேவன் கல் நெஞ்சு படைத்தவன் என்பது உண்மைதான்! நெஞ்சில் அவ்வளவு உறுதியில்லா விட்டால், சென்ற எட்டு மாதத்தில் அவன் அத்தனை காரியங்களை அலட்சியமாகச் செய்திருக்க முடியுமா? தனக்கோ மற்றவர்களுக்கோ நேரக் கூடிய அபாயங்களைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் உயிரைத் திரணமாக மதித்துப் பல நெருக்கடியான சந்தர்ப்பங்களில் நடந்து கொண்டிருக்க முடியுமா?

அத்தகைய நெஞ்சுறுதி படைத்தவன் கந்தமாறனின் வார்த்தைகளைக் கேட்டுக்கலங்கிவிட்டான். 'கடைசித் தடவை பார்ப்பதற்கு' என்று கந்தமாறன் எழுதியதன் பொருள் இப்போது ஐயமின்றி விளங்கி விட்டது. அவனுடைய கண்களில் கண்ணீர் ததும்பிக் கலகல வென்று கன்னங்களில் வழிந்து ஓடியது.

"கந்தமாறா! மணிமேகலையின் உயிருக்கே ஆபத்தா? அது எப்படி? அவள் சித்தந்தானே தவறியிருந்தது? அதுவும் உன்னையும் என்னை





யும் பற்றித்தானே?'' என்று தத்தளிப்புடன் வினவினான் வந்தியத் தேவன்.

''நண்பா! இப்போது மணிமேகலையின் சித்தம் தெளிந்து விட்டது. ஆனால் இன்னும் எத்தனை நேரம் உயிரோடிருப்பாளோ தெரியாது. உன்னைப் பார்க்கும் வரையில் உயிரோடிருக்க வேண்டுமென்று தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொள்கிறேன்!'' என்று சொன்னான் கந்தமாறன்.

பிறகு அவன் அறிந்தபடி நடந்த சம்பவங்களைப் பின்வருமாறு கூறினான்:—

காஞ்சியில் கந்தமாறன் சக்கரவர்த்தி வந்து தங்குவதற்காகப் பொன் மாளிகையைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தான். அப்போது சம்புவரையர் மணிமேகலையையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டதாகக் கேள்விப்பட்டான். அதற்குச் சற்றுப் பிறகு, வீர நாரா



யனை ஏரிக் கரையில் மணிமேகலை காணாமற் போய் விட்டாள் என்ற செய்தியும் கிடைத்தது. உடனே பார்த்திபேந்திரனிடம் விடைபெற்றுக் கொண்டு தங்கையின் கதியை அறிவதற்காகப் புறப்பட்டு ஓடி வந்தான். அவனுடைய தந்தை துயர மிகுதியினால் ஏறக்குறைய பித்துப் பிடிக்கும் நிலையிலிருந்தார். 'இரவில் கூடாரத்திலே படுத்தாள்; பொழுது விடிந்தால் காணவில்லை' என்பதைத் தவிர அவரிடமிருந்து வேறு தகவல் எதுவும் கிடைக்கவில்லை. பழையாறைக்கு ஆள் விட்டிருப்பதாகக் கூறினார். எரிந்து பாழாய்க் கிடந்த கடம்பூர் மாளிகையிலும் சுற்றுப் புறங்களிலும் தேடிப் பார்த்தாகி விட்டதென்றும் சொன்னார். கந்தமாறன் தானும் தேட ஆரம்பித்தான். பழையாறைக்கு அவள் திரும்பிப் போயிருப்பாள் என்று கருதவில்லை. ஏரியில் விழுந்து முழுகியிருக்கலாம் என்றும், தேடிப் பார்த்து அவளுடைய உடலையாவது கண்டு பிடிக்க வேண்டுமென்றும் எண்ணினான். ஒரு வேளை உயிருடனே ஏரியைச் சூழ்ந்திருந்த காடுகளில் அவள் சுற்றி அலைந்து கொண்டிருக்கலாம் என்ற ஆசையும் அவன் மனத்தில் இருந்தது.

ஏரிக் கரையோடு சுற்றிச் சுற்றி அலைந்து தேடினான். ஏரியிலிருந்து கிளம்பிய கணவாய்களோடு சிறிது தூரம் சென்று தேடினான். ஏரியில் குறுக்கு நெடுக்காகவும் கரையோரமாகவும் படகு விட்டுக் கொண்டு போய்த் தேடினான். ஏரியைச் சூழ்ந்திருந்த காடுகளிலும் தேடினான். இம்மாதிரி சுமார் நாலு தினங்கள் பயனற்ற தேட்டத்தில் சென்ற பிறகு, ஏரியின் மேற் புறத்துத் தீவு ஒன்றில் அமைந்திருந்த நீராழி மண்டபத்தின் நினைவு கந்தமாறனுக்கு ஏற்பட்டது. வேட்டையாடப் போன கரிகாலனும் வந்தியத் தேவனும் நீர் விளையாடச் சென்ற நந்தினியும் மணிமேகலையும் அந்த நீராழி மண்டபத்தில் ஒரு நாள் சந்தித்துப் பொழுது போக்கியதும் நினைவு வந்தது. மணிமேகலை அந்த இடத்துக்குப் படகின் உதவியில்லாமல் தனியாகப் போய்ச் சேர்ந்திருப்பது அசாத்தியமான காரியம். கரடி, சிறுத்தை முதலிய வன விலங்குகள் நிறைந்த மேற்குப் பகுதிக் காட்டின் வழியாக அவள் தன்னந் தனியாக அங்கே சென்றிருக்க முடியுமா? காட்டைக் கடந்திருந்தாலும் வழியில் சிறு கால்வாய்கள் பலவற்றைக் கடக்க வேண்டியிருந்திருக்குமே? இருந்தாலும், அதையும் பார்த்து விடலாம் என்று எண்ணிக் கந்தமாறன் படகில் ஏறி அந்த நீராழி மண்டபத்தை அடைந்தான். மண்டபத்தை நெருங்கியதும் பழைய நினைவுகள் பல அவன் உள்ளத்தில் குமுறிக்கொண்டு தோன்றின. முதலில் மண்டபம் சூனியமாகவே காணப்பட்டது. யாரும் அங்கே யிருப்பதாகத் தோன்றவில்லை. மண்டபப் படித் துறையில் இறங்கி நின்று தான் கட்டிய மனக் கோட்டைகள் எல்லாம் வீணாய்ப் போனதை எண்ணிப் பெருமூச்சு விட்டான். அவனுடைய பெருமூச்சின் எதிரொலியைப் போல் மற்றொரு பெருமூச்சின் ஒலிகேட்டுத் திடுக்கிட்டான். ஓடிப் போய்ப் பார்த்தான். நீராழி மண்டபத்தின் மறு பக்கத்துப் படிக் கட்டில் மணிமேகலை கிடந்தாள். ஒட்டி உலர்ந்து வாடி வதங்கிக் கிடந்தாள். அவள் சேலை பல இடங்களில் கிழிந்திருந்தது. அவள் மேனியில் பல இடங்களில் கீறல்கள் காணப்பட்டன. முதலில் அந்த உடம்பில் உயிர் இருப்பதாகவே தோன்றவில்லை. பல நாள் பட்டினி கிடந்து திக்குத் திசை தெரியாமல் காட்டில் அலைந்து கடைசியில் களைத்து விழுந்து இறந்து போனவளின் உடலாகவே தோன்றியது. அந்தக் காட்சியைக் கண்ட கந்தமாறனுடைய உள்ளத்தில் ஆயிரம் வேல்கள் பாய்வது போன்ற வேதனை உண்டாயிற்று. மணிமேகலையை எடுத்து மடியில் போட்டுக்கொண்டு புலம்பினான். பெருமூச்சின் ஓசை நினைவுக்கு வரவே, ஒருவேளை உயிர் ஒட்டிக் கொண்டிருக்கலாம் என்ற ஆசை ஏற்பட்டது. நல்ல தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்தான்; வாயில் ஊற்றினான். சூடு பிறக்கும்படி உடம்பெல்லாம் தேய்த்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் மணிமேகலை கண் திறந்து மலர மலர அவனை நோக்கி விழித்தாள். "அண்ணா! நீதானா? நான் நினைத்தது உண்மையாயிற்று. சொர்க்கத்துக்குப் போனால் உன்னையும் அவரையும் காணலாம் என்று எண்ணினேன். அவர் எங்கே?" என்று மிக மெல்லிய குரலில் கேட்டாள். கந்தமாறன் பொங்கி வந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, "வருவார், அம்மா, வருவார்!" என்றான்.

மணிமேகலை தான் சொர்க்கத்திலே இருப்பதாக எண்ணுகிறாள், கந்தமாறனையும் சொர்க்கத்தில் பார்ப்பதாகவே கருதுகிறாள், வந்தியத்தேவனைப் பற்றி விசாரிக்கிறாள் என்பதையெல்லாம் கந்த

மாறன் அறிந்துகொண்டான். அவனுக்கு மன அதிர்ச்சி ஏற்படாதபடி அவனுடைய நம்பிக்கையை யொட்டிப் பதில் கூறிச் சமாளித்தான்.

இதன்பிறகு, மணிமேகலையின் உடம்பில் மேலும் உயிர் தளிர்க்கச் செய்வதற்குத் தான் செய்த முயற்சிகளைப் பற்றியும், அவசரமாக ஓலை எழுதி வந்தியத்தேவனுக்கு அனுப்பி வைத்தது பற்றியும் இளஞ் சம்புவரையன் கந்தமாறன் கூறினான். கடைசியாக,

"நண்பா! நீ என் ஓலையை மதித்து வந்ததற்காக என் மனத்தில் எழும் நன்றியைச் சொல்ல முடியாது. மணிமேகலை இனி அதிக காலம் ஜீவித்திருக்க மாட்டாள். அணையுந் தறுவாயில் உள்ள தீபச் சுடரைத் தூண்டி விட்டால் சிறிது நேரம் எரியுமல்லவா? அது போலத்தான் அவள் உயிர்ச் சுடர் பிரகாசிக்கிறது. முக்கியமாக, உன்னைக் காணும் ஆசையே அவளை இன்னும் உயிரோடு வைத்திருக்கிறது! நாம் எல்லாரும் சொர்க்கத்தில் இருப்பதாக அவள் நம்பி யிருக்கிறாள். அதற்கு மாறாக நீ எதுவும் சொல்ல வேண்டாம்! அவளைப் பார்த்ததும் உனக்குத் துக்கம் உண்டாவது இயல்பே. அதையும் நீ கட்டுப் படுத்திக் கொண்டு அவளிடம் முக மலர்ச்சியுடன் பேச வேண்டும்!" என்று வேண்டிக் கொண்டான்.

படகு நீராழி மண்டபத்தை நெருங்கி விட்டது. யாழிசையும் மெல்லிய குரலில் பாட்டிசையும் கலந்து கேட்டன. வந்தியத்தேவன் கந்தமாறனை நோக்கினான். "ஆம், நண்பா! மணிமேகலைதான் யாழிசையுடன் சேர்ந்து பாடிக்கொண்டிருக்கிறாள்!" என்றான்.

படகிலிருந்து படிக் கட்டில் அவர்கள் இறங்கினார்கள். மணிமேகலை பாடுவது என்ன பாடல் என்பதை வந்தியத்தேவன் கவனமாகக் காது கொடுத்துக் கேட்டான். முன்னொரு சமயம் அதே நீராழி மண்டபத்தில் அவள் யாழிசையுடன் பாடிய அதே பாடல்தான்.

"இனியபுனல் அருவிதவழ்
இன்பமலைச் சாரலிலே
கனிகுலவும் மரநிழலில்
கரம்பிடித்து உகந்ததெல்லாம்
கனவுதானோடி-சகியே
நினைவுதானோடி!

புன்னைமரச் சோலையிலே
பொன்னொளிரும் மாலையிலே
என்னைவரச் சொல்லிஅவர்
கன்னல்மொழி பகர்ந்ததெல்லாம்
சொப்பனந்தானோடி-அந்த
அற்புதம் பொய்யோடி!

• • •

கட்டுக்காவல் தான்கடந்து
கள்ளரைப்போல் மெள்ளவந்து
மட்டிலாத காதலுடன்
கட்டிமுத்தம் ஈந்ததெல்லாம்
நிகழ்ந்ததுண்டோடி-நாங்கள்
மகிழ்ந்ததுண்டோடி!"

பாடல் முடிகிற வரையில் வந்தியத்தேவன் படிக் கட்டிலேயே காத்துக் கொண்டிருந்தான். முடிந்தவுடன் படிகளில் ஏறி மண்டபத்தை அடைந்தான்.

மணிமேகலை அவனைப் பார்த்ததும் யாழைக் கீழே உருட்டி விட்டு எழுந்திருக்க முயன்றாள். உடலில் பலமில்லாமையால் கால்களை ஊன்றி நிற்க முடியாமல் தள்ளாடி விழப் பார்த்தாள். வந்தியத் தேவன் பாய்ந்து சென்று அவள் கீழே தரையில் விழாமல் தாங்கிக் கொண்டான். மெள்ள மெள்ள அவளை உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்து கொண்டான். மணிமேகலையைத் தன் மடியில் சாத்திக் கொண்டான்.

மணிமேகலை அடிக்கடி அடிக்கடி அவன் முகத்தை அண்ணாந்து பார்த்தாள். அவன் வந்தியத்தேவன்தானா, அவள் படுத்திருப்பது அவனுடைய மடியில்தானா என்பதைப் பலமுறை பார்த்து உறுதி செய்து கொண்டதாகத் தோன்றியது.

"என் அண்ணன் என்னை ஏமாற்றவில்லை. சொர்க்கம் வெறும் சொப்பனமில்லை. இந்த அற்புதமும் பொய்யில்லை!" என்று அவள் இதழ்கள் மெதுவாக முணுமுணுத்தன.

"பொய்யில்லை, மணிமேகலை, பொய்யில்லை. இது நிச்சயமாகச் சொர்க்கந்தான்! நான் வந்திருப்பதும் உண்மைதான்!" என்றான் வந்தியத்தேவன்.

அவன் எவ்வளவு அடக்கிக் கொள்ளப் பார்த்தும் முடியாமல் கண்களில் நீர் ததும்பியது. மணிமேகலையின் முகத்தில் அவனுடைய கண்ணீர்த் துளிகள் முத்துப் போல் உருண்டு விழுந்தன. அவனை யறியாமல் விம்மல் ஒலியும் எழுந்தது.

மணிமேகலையின் முகம் சிறிது நேரம் தெய்வீகமான சோபையினால் ஜொலித்தது. அவளுடைய நீண்ட கண்களிலிருந்து வெண்ணிலவின் கிரணங்கள் சுடர் வீசிப் பிரகாசித்தன.

மாதுளை மொட்டை நிகர்த்த அவளுடைய இதழ்கள் விரிந்து ஏதேதோ மதுரமான சொற்களைப் பொழிந்தன. வந்தியத்தேவன் எவ்வளவோ கவனமாகக் கேட்டான். ஆனால் அவள் என்ன சொன்னாள் என்பதை மட்டும் அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

எதற்காகத் தெரிந்து கொள்ள வேண்டும்? அவள் கூறியவை என்ன வார்த்தைகளாயிருந்தால் என்ன? இதயமாகிய பொற் கலசம் திறந்து அன்பாகிய அமுதம் பொங்கி வரும்போது வெறும் சொற்களின் உபயோகம் என்ன?

சிறிது நேரத்துக்கெல்லாம் மணிமேகலையின் கனி இதழ்கள் குவிந்தன; கண்ணிமைகள் மூடின. முகத்தில் தவழ்ந்த தெய்விக சோபை குன்றியது; அமைதி குடிகொண்டது.

நீராழி மண்டபத்தின் மேலே படர்ந்திருந்த மரக் கிளையின் மீது இளந் தென்றல் வீசியது; மரக் கிளையில் குலுங்கிய செந்நிற மலர்களில் சில உதிர்ந்தன.

மணிமேகலையின் உயிரும் அவளுடைய உடலிலிருந்து உதிர்ந்தது.

எங்கே சென்றது? சகல புவனங்களையும் சகல ஜீவ ராசிகளையும் ஆக்கி அளித்து அழிக்கும் பரம் பொருளின் பாதார விந்தத்துக்குச் சென்றதா?

அல்லது கண்ணீர் பெருக்கும் கற்சிலை போல் நினைவற்றுச் செயலற்று உட்கார்ந்திருந்த வந்தியத்தேவனுடைய உள்ளத்திலேதான் கலந்து போய் விட்டதா?

யாருக்கும் தெரியாது; தெரிந்தாலும் சொல்ல முடியாது.

ஒன்று மட்டும் நிச்சயம்.

வேடிக்கையும் விளையாட்டும் குறும்பும் குதூகலமும் துணிவும் துடுக்கும் துணிச்சலும் உருக் கொண்டவனாக இருந்த வந்தியத்தேவனை இனி நாம் காணப் போவதில்லை.

கனிந்த உள்ளமும் கருணையும் விவேகமும் வந்தியத்தேவனை அந்தக் கணத்தில் வந்து அடைந்தன.

மணிமேகலையாகிய தெய்வம் அவன் இதயக் கோவிலில் குடி கொண்டாள்.

இனி அவன் எங்கே சென்றாலும் என்ன காரியம் செய்தாலும், அந்தத் தெய்வம் அவனுக்குத் துணை புரியும்.

வல்லவரையன் வந்தியத்தேவன் நல்ல பணிகள் பல செய்ய வல்லவனாவான்; அவனை அறிந்த அனைவராலும் வந்தனை செய்வதற்கு உரியவனாக விளங்குவான்.

தாய்மார்களே !

உங்கள் குழந்தை டூமெக்ஸ் பால் உணவைப் பெரிதும் விரும்பும்.

வெளி நாடுகளில் வெகுவாகப் போற்றப்படும் டூமெக்ஸ் பால் உணவு இந்திய சீதோஷ்ண நிலைக்கென தனியாகத் தயாரிக்கப்பட்டு இந்தியாவிலெங்கும் இப்போது விற்பனையாகிவருகிறது. புளிப்புத் தட்டாமல் எளிதில் ஜீரணிக்கப்படுவதால் டூமெக்ஸ் பால் உணவு குழந்தைகளை நாள் முழுவதும் ஆனந்தத்துடனும், குதூகலத்துடனும் இருக்கச் செய்கிறது.

டூமெக்ஸ் பால் உணவு எளிதில் தண்ணீரில் கரைந்து ருசிகரமான பானமாகி உடனே குழந்தைகளுக்கு ஊட்டலாம். இப்படிச் செய்வதனால் உங்கள் நேரம் விரயமாவதும் குழந்தைகளுக்கு அதி சீக்கிரத்திலும் உணவு தயாரிக்க ஏதுவாகிறது.

மேலும் டூமெக்ஸ் பால் உணவு யாதொரு அபாயமற்றது. ஏனெனில் டூமெக்ஸ் பால் உணவு "டுபர் கொலின் டெஸ்டெட்" பசுக்களின் விடமின் நிறைந்த பாலினின்று தயார் செய்யப்பட்டது. டி.டி. பால்தான் குழந்தைகளுக்கு மிகச்சிறந்ததும், சுத்தமானதுமென்று உங்கள் டாக்டர் சொல்லுவார். இத்தகைய அப்பழுக்கற்ற உணவுப் பால் சிக்கனச் செலவில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஆகையால் இன்றே டூமெக்ஸ் பால் உணவை வாங்கி உங்கள் குழந்தைகளை ஆரோக்கியமும், ஆனந்தமும் அடையச் செய்யுங்கள். டூமெக்ஸ் பால் உணவு எங்கும் எளிதில் கிடைக்கிறது.



டூமெக்ஸ்
பால் உணவு



இதுவே டூமெக்ஸ் பாராட்டும் புட்டியைப் பெற வழி: டூமெக்ஸ் பால் உணவு டின்களிலுள்ள கூபன்களைச் சேருங்கள். இப்படி மூன்று கூபன் சேர்ந்த பின் அவைகளை டூமெக்ஸ் லிமிடெட், பேபி புட் டிபார்ட்மெண்ட், போஸ்ட் பாக்ஸ் 639, பம்பாய்-1. இவ் விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பவும். இவ்விதம் அனுப்பிய பின் மறு தபாலிலேயே உங்களுக்கு ஒரு டூமெக்ஸ் பாராட்டும் புட்டி அனுப்பப்படும். இப்புட்டி உறுதியானது, மற்றும் சுகாதார விதிகளை அனுசரித்தது.

உங்கள் குழந்தைகளுக்கு டூமெக்ஸ் பால் உணவைக் கொடுத்து அவர்களின் வளர்ச்சியைக் கவனியுங்கள்.

இலங்கையில் ஆசியப் பிரதமர்கள்





7



8

ஏப்ரல் 28உ இலங்கையில் இந்தியா, பர்மா, இலங்கை, பாகிஸ்தான், இந்தோனேஷ்யா ஆகிய ஐந்து தேசப் பிரதமர்களின் மகாநாடு தொடங்கிச் சில தினங்கள் நடந்தது. இறுதியில் ஒற்றுமையான தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். இந்த மகாநாட்டில் நமது விசேஷ புகைப்பட நிருபர் கண்ட சில காட்சிகளை இந்தப் பக்கங்களில் காணலாம்.

1. கொழும்பு ரத்மலானை விமான நிலையம் ஆசியப் பிரதமர்களை வரவேற்க அலங்கரிக்கப்பட்டு விளங்கியது. 2. இலங்கை பார்லிமெண்டின் ஸ்திரீ அங்கத்தினர்கள் இந்தியப் பிரதமரை வரவேற்கின்றனர். 3. இலங்கையில் பெரிய பத்திரிகை அதிபதியான ஸ்ரீ ஸி. ஈ. எல். விக்ரமசிங் பிரதமர்களுக்கு விருந்தளித்தார். அதில் கலந்து கொண்ட இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ தேசாயும், ஸ்ரீ விக்ரமசிங் தம்பதிகளும். 4. இலங்கைப் பார்லிமெண்டு கூடும் கட்டிடம். 5. ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனன், ஸ்ரீ என். ராகவப் பிள்ளை முதலியவர்கள் புடைசூழ ஸ்ரீ நேரு செனட் மண்டபத்திலிருந்து வருகிறார். 6. மகாநாட்டில் பர்மியப் பிரதமருக்கு உதவியாக வந்திருந்த பர்மியப் பிரதிநிதிகள். 7. இந்தோனேஷியப் பிரதமருடன் வந்திருந்த இந்தோனேஷியப் பிரதிநிதிகள். 8. பேராடினியா பூங்காவுக்கு விஜயம் செய்து பார்வையாளர் புத்தகத்தில் நேருஜி கையெழுத்திட்டார். குடையைப் பிடித்துக் கொண்டிருப்பவர் இலங்கை உணவு மந்திரி ஸ்ரீ ஜே. ஆர். ஜயவர்த்தன. 9. இலங்கை சபாநாயகரும், பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் அளித்த விருந்தில் ஸ்ரீ நேரு. 10. இலங்கை விமான நிலையத்தில் கப்பற் படையினரின் அணிவகுப்பை நேருஜி பார்வையிடுகிறார். 11. இலங்கையின் கவர்னர் ஜெனரலாக நியமனம் பெற்றிருக்கும் ஸ்ரீ ஆலிவர் குணதிலகாவும், ஸ்ரீ வி. கே. கிருஷ்ண மேனனும். 12. பண்டித நேருவை வரவேற்பதற்குக் கண்டி நகர வாசிகள் மழையையும் பொருட் படுத்தாமல் காத்திருக்கிறார்கள். 13. கண்டி புத்தர் ஆலயத்தின் பிரதம குருவான ஸ்ரீ டியவதன நிலமா. 14. கண்டியில் இந்த அலங்காரமான ரதத்தில் ஏற்றி ஸ்ரீ நேரு அழைத்து வரப்பட்டார். 15. கண்டியில் புத்தர்பெருமானின் புனிதமான தந்தம் அடக்கம் செய்யப்பட்டுள்ள புத்த விஹாரத்தில் ஆசியப் பிரதமர்கள். 16. நேருஜியும் பர்மியப் பிரதமர் யூநுவும் கண்டி புத்தகசாலையைப் பார்வையிடுகின்றனர்.


9


10


11



12




13




14



15



16



17



இணையற்றது...
KAMADHENU
VANASPATI
THE METTUR CHEMICAL
காமதேனு
சமையல் சாதனம்
இரு முறை
சுத்தம்
செய்யப்
பட்ட
காமதேனு
எண்ணெயும்
கிடைக்கும்
காமதேனு வனஸ்பதி இல்லந்தோறும் வரப்பிரசாதமாய் வழங்கி வருகிறது. எல்லாவித தயாரிப்பிற்கும் உகந்தது.
தயாரிப்பவர் :
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. :: சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜண்ட்ஸ் :
சேஷசாயி பிரதர்ஸ் லிட்., திருச்சிராப்பள்ளி



போட்டிக் கதை 6

அந்தகன் குழந்தை?

கிரிஜா

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஒரு நாள் ஹேமா பத்மநாபனது அருகில் வந்து உட்கார்ந்து, அவன் தோள்மீது தன் தலையைச் சாய்த்தபடி மிகவும் கனிந்த குரலில், "என் அன்பே! உங்கள் உள்ளத்தைத் துன்புறுத்தும் விஷயம் என்னவென்று என்னிடம் சொல்ல மாட்டீர்களா!" என்று கொஞ்சலாகக் கெஞ்சினள்.

பத்மநாபன் அவளை இறுக அணைத்துக் கொண்டான். அவன் கண்களினின்றும் கண்ணீர் பொங்கி வழிந்தது. அவன் ஆழ்ந்த பெருமூச்சுடன், "ஹேமா! என் செல்வமே! அந்தகனை என்னால் நீ அடைந்த சுகம்...! அந்தோ உன் வாழ்வு!" என்று குரல் தடுமாறக் கேட்டான்.

ஹேமா திகைத்து விட்டாள். இத்தனை நாளும் எழாத எண்ணம் இன்று எழுவானேன்! அவள் மிருதுவான உள்ளம் குழம்பியது. அவள் தன் கணவனுக்குத் தேறுதல் வார்த்தை கூறும் வகையறியாது தவித்தாள்.

ஒரு தினம் கோபத்தால் கொதித்துக் குமுறுவான் பத்மநாபன்; ஒருதினம் துன்பத்தைத் தாள முடியாமல் குழந்தை போலக் "கோ" எனக் கதறுவான். ஒரு தினம் இன்பத்தோடு ஹேமாவையும் இழுத்து வைத்துக் கொண்டு பேசுவான். இவ்விதம் பத்மநாபனது தாம்பத்யம் துன்பமும், துயரமும் கலந்து குழம்பியது!

ஆறு மாதக் கர்ப்பிணியான ஹேமா இதனால் பெரிதும் பாதிக்கப் பட்டாள். துன்பத்தால் துவண்டு விட்ட அவள் உள்ளம் எண்ணியது: 'இறைவா, என் கணவருக்கு அளவற்ற ஐசுவர்யத்தையும், ஆச்சர்யப்படத் தக்க அறிவையும், காண்பவர் திகைக்கும் கட்டழகையும் கொடுத்தாய் ஆனால் ஏனோ அவர் கண்பார்வையை மட்டும் கொடுக்க மறுத்து விட்டாய்!' இவ்விதமான எண்ணம் எழுந்ததும் ஹேமா திடுக்கிட்டாள். அவளது தூய உள்ளத்தில் கடந்த இருபது வருடங்களில் ஒரு நாள்கூட இவ்வித எண்ணம் எழுந்ததில்லை. பத்மநாபன் ஒரு அந்தகன் என்ற குறைபாட்டையே அவள் இன்றுவரை எண்ணிப் பார்த்தவளல்ல. பழக்கத்தால் சரிப்பட்டு விட்ட விஷயத்தை அவள் தன் வாழ்க்கை முழுவதுமே மறந்து விட்டிருப்பாள். ஆனால் பத்மநாபனே இன்று அவள் எண்ணிப் பாராததை எண்ணிப் பார்க்கும்படி செய்து விட்டான்.

'இவ்வெண்ணங்களால் எங்கே தன் வயிற்றிலுள்ள சிசு பாதிக்கப்பட்டு விடுமோ!' என்று ஹேமா மிகவும் பயந்தாள்.

இப்படியே நாட்கள் மெல்ல வளர்ந்து, ஹேமாவுடைய கர்ப்பத்தின் பத்தாவது மாதத்தையும் அடைந்து விட்டது. அன்று பத்மநாபன் எல்லையில்லாத பரபரப்புடன் காத்திருந்தான். இன்று பிறக்கப் போகும் குழந்தை அவன் உள்ளக் குழப்பத்துக்கு ஒரு முடிவு கூறும் எல்லைக் கல்லாக இருந்தது. 'குருடனின் குழந்தை குருடன்' என்றபடி இன்று தன் குழந்தை குருடாகப் பிறந்து விட்டால், தன் உள்ளத்துக்கு ஒரு நிம்மதி பிறந்து விடும் என்றதோர் அசட்டு எண்ணத்தால் அவன் பரபரப்பு அதிகரித்தது.

பத்மநாபனது ஆவலை ஒரு சிறிதும் அறியாத டாக்டர் முன்போலவே. ஆனால் சிறு தடுமாற்றத்துடன், "பத்மநாபன்! பிறந்து விட்ட உங்கள் அழகிய பெண் குழந்தைக்குக் கண்கள் நல்ல ஒளியுடன் இருக்கிறது" என்று சிரித்தவண்ணம் கூறி அவன் கையைக் குலுக்கினர்.

டாக்டரின் சிரிப்பு பத்மநாபனுக்கு ஆலகால விஷம் போலக் கசந்தது. அவரது சொல் அவனது உள்ளத்துப் புயலைப் பயங்கரமாக வீசச் செய்தது. அப் புயலின் சுழற்சியிலே சிக்கிய அவனது அறிவுக்கோயில் இடிந்து பொடியாகி விட்டதை அவன் உணரவே யில்லை.

அதன் பிறகும் டாக்டர் அடிக்கடி வந்து போனர். அவர் வருவதற்குக் காரணம் சொல்லப்பட்ட போதிலும், சந்தேகங் கொண்டுள்ள பத்மநாபனுக்கு அந்தக் காரணம் சிறிதும் உண்மையானதாகப் படவில்லை.

ஒரு நாள் டாக்டர் வேறொரு பிரபல டாக்டரைக் கூட்டி வந்திருந்தார். அன்று அவர்கள் மிகவும் மெதுவான குரலில் வெகுநேரம் வரை பேசிக் கொண்டிருந்தார்கள். இடை இடையே ஹேமாவின் குரலும் கேட்டது. 'பணச் செலவு பற்றி யோசிக்க வேண்டாம்...தெரியக்கூடாது... மெள்ள...ரகசியமாக...' என்ற வார்த்தைகளால்



குழந்தைகளுக்கான கவிகள் அடங்கிய "மலரும் உள்ளம்" என்ற நூலின் வெளியீட்டு விழா சென்ற ஆறும் தேதி சென்னை செயின்ட்மேரீஸ் மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீ அழ. வள்ளியப்பா இயற்றிய இந்நூலைப் பாரி நிலையத்தார் வெளியிட்டுள்ளனர்.

ஸ்ரீ வள்ளியப்பா சென்ற பன்னிரண்டு வருடங்களாகக் குழந்தைகளுக்கான கவிதைகளை இயற்றிக் குழந்தை இலக்கியத்துக்குத் தொண்டாற்றி வருகிறார். குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் காரியதரிசியாகவும் பணியாற்றி வருகிறார். இவர் இயற்றிய பாடல்களின் ஒரு பகுதியே "மலரும் உள்ளம்" என்ற கவிதைத் தொகுதி. தமிழ்க் குழந்தைகளுக்காக முதல் முதலாகப் பெரிய அளவில் வெளி வரும் கவிதைத் தொகுதி இது என்றே சொல்லலாம். நூலில் குழந்தைகள் தாமே விரும்பிப் பாடவும், குழுவாகச் சேர்ந்து பாடவும், அபிநயம் பிடித்து ஆடவும் ஏற்ற பல பாடல்கள் இருக்கின்றன. குழந்தைகளுக்கு ஏற்ற சிறந்த பரிசு நூல்.

மலரும் உள்ளம் வெளியீட்டு விழாவைக் கல்வி மந்திரி கனம் சி. சுப்ரமணியம் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். ஆசிரியர் 'கல்கி' அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார். ஸ்ரீ ஆர். செல்லப்பா அனைவரையும் வரவேற்றார். ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு, ஸ்ரீ சோம. லெ., ஸ்ரீ சின்ன அண்ணாமலை, ஸ்ரீமதி லீலாவதி ராமசுப்ரமணியம் முதலியோர் குழந்தைகள் புத்தகத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசினார்கள். பாராட்டுதல்களுக்கு ஸ்ரீ அழ. வள்ளியப்பா நன்றி கூறினார். பின்னர் குழந்தைகளின் கதம்ப நிகழ்ச்சியுடன் விழா இனிது முடிவடைந்தது!

1. கல்வி மந்திரி கனம் சி. சுப்ரமணியம் குழந்தைக் கவி நூலை ஒரு குழந்தைக்குப் பரிசளிக்கிறார். 2. விழா மேடையின் ஒரு தோற்றம். 3. வெளியீட்டு விழாவுக்குப் பெருந் திரளாக வந்திருந்த ரசிகர்கள். 4. குழந்தைக் கவிஞர் ஸ்ரீ அழ. வள்ளியப்பா.

லாம் அடிபட்டன. இவ்விதம் அரை குறையாக விழுந்த வார்த்தைகளைக் கூட்டிக் கற்பனை செய்த பத்மநாபனுக்கு உள்ளம் கொதித்தது.

அன்று ஹேமாவின் அறைப் பக்கமாக வந்த பத்மநாபன், அவ்வறையிலிருந்து யாரோ மிகவும் மெதுவாக அடிமேல் அடிவைத்து வந்து கொண்டிருப்பதை அறிந்து ஆச்சரியம் கொண்டான். அவ் வடியோசை ஹேமாவுடைய தல்லவென்பதை அவனது கூரிய அறிவு அறிவித்தது. அப்படியானால்......! திருடன் எவனோ......! சட்டெனப் பத்மநாபன் அறையிலிருந்து வெளி வந்து திருப்பத்தை அடைந்து நின்று கொண்டான்.

அம் மெல்லிய அடியோசை அவன் அருகில் வந்ததும் பாய்ந்து அவனைப் பிடித்துக் கொண்டான் பத்மநாபன். பிறகு பிடியில் சிக்கியவனை ஓர் உலுக்கு உலுக்கி. "யார் நீ! எதைத் திருட வந்தாய்!" என்று அதட்டினான். அவனது இரும்புப் பிடியினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றவனது வாயினின்றும், "ஸார்! நான்தான்! என்னை விடுங்கள்" என்ற சொல் வெளிவந்த போது பத்மநாபன் திகைத்துப் போனான். "ஆ! டாக்டர்!" என்ற வியப்புச் சொல் அவனையு மறியாமல் வெளி வந்தது. "ஆம்; மன்னியுங்கள்... குழந்தையின் ஒரு முக்கிய சிகிச்சைக்காக......" என்று தடுமாறியவர் மெள்ளத் தன்னை விடுவித்துக் கொண்டு வெளியேறினார்.

பத்மநாபனுக்கு இப்போது எல்லாம் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. அவனறியாமல், அடியோசை தெரியாமல் உள்ளே வந்த டாக்டர் அவ்விதமே வெளியே போக முயன்றிருக்கிறார்! இது ஏன்! பத்மநாபனது உள்ளத்திலே இப்போது ஒரு சக்கிளமே உண்டாகியது. மனக் குமுறலுடன் குறுக்கும், நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான் பத்மநாபன்.

கடந்த அரை மணிக்குப் பிறகு அவ்வறையுள் நுழைந்த ஹேமா, "இங்கேயா இருக்கிறீர்கள்!

உங்களை எங்கெல்லாம் சென்று தேடுவது!'' என்று இனிமையாகக் கேட்ட வண்ணம் அருகில் வந்தான். அப்போது அவள் சற்றும் எதிர்பாரா வண்ணம், காதுகளில் ''கொய்'' என்ற சத்தம் எழ, ''பளார்'' என்று அவள் கன்னத்தில் விழுந்தது ஓர் அறை. பொறி கலங்கி நின்று விட்ட ஹேமா தன்னைச் சமாளித்துக் கொள்ளுமுன், ''உண்மையைச் சொல்! என் பணத்துக்காகத் தானே அந்தகனை என்னையும் கட்டிக்கொண்டு போராடுகிறாய்! சொல் உண்மையை!'' என்று இடி இடிப்பது போலக் கேட்டான் பத்மநாபன்.

கன்னத்தில் விழுந்த அடியும், உள்ளத்தில் விழுந்த உதையும், ஹேமாவை உலுக்கி எடுத்தன.

'''பணம்!' உங்கள் பணத்தினால் ஒரு பெண்ணின் உள்ளத்தில் உண்மை அன்பை உண்டாக்கி விட முடியாது. இதை இன்றாவது உணருங்கள்'' என்று உஷ்ணமாகப் பதில் கொடுத்தாள் ஹேமா.

அவளது பதில் வந்த வேகத்தைவிடத் துரிதமாகப் பாய்ந்து வந்தன அவனது சொல்லம்புகள். ''இதோ, பார்! இந்தப் பசப்புப் பேச்சை நான் கேட்கும் நாட்கள் கடந்து விட்டன. சூழ்ச்சி செய்து என்னைக் கொல்லக்கூடத் திட்டமிட்டுள்ள உன்னை இனி ஒரு கணமும் இந்த வீட்டில் இருக்க விடமாட்டேன். இன்றே இப்போதே வெளியேறி விட்டாயானால் உன் மானம் பிழைக்கும்......!'' என்று கொதிப்புடன் கூறினான் பத்மநாபன்.

ஹிருதயத்தைத் துளைத்துக் கொண்டு வந்த அவனது கொடும் சொற்களின் கடுமையைத் தாங்க முடியாமல் தவித்த ஹேமா சட்டெனத் தன்னுடைய கரங்களால் இரு காதுகளையும் பொத்திக் கொண்டாள்.

''நிறுத்துங்கள். இனியும் என்னால் தாள முடியாது; இதோ நான் போய்விடுகிறேன். இருபது வருஷமாக இணைபிரியாமல் இருந்த உங்களையும் உங்கள் குழந்தைகளையும் மறக்க முடிந்தாலும், இன்று விஷத்தில் தோய்த்தெடுத்து விட்டு என் ஹிருதயத்தைச் சுக்கல் சுக்கலாகப் பிளந்த உங்கள் சொல்லம்புகளை மட்டும் ஒரு நாளும் மறக்க முடியாது...'' என்று அவள் முடிக்கு முன் ஏளனமாகச் சிரித்த பத்மநாபன் எல்லையில்லாத வெறுப்புடன், '''உங்கள் குழந்தைகள்!' அடி பாவி! உன் நாவை அடக்கிக் கொள்; என் குழந்தைகளா அவைகள்! உன் குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு உடனே நட வெளியில்!'' என்றான்.

திடுக்கிட்டுத் திகைத்துப் போன ஹேமாவுக்குப் பத்மநாபன் ஒரு பயித்தியம் அல்ல வென்று தெளியச் சில நிமிஷங்கள் பிடித்தன. மிகவும் விபரீத நிலைக்கு வந்துவிட்ட அவனுடன் இருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் மிக்க அபாயகரமானது என்பதை நன்கு உணர்ந்தாள். அவனது பிடிவாத குணத்தையும், மூர்க்க குணத்தையும் பழக்கத்தால் நன்கு உணர்ந்துள்ள அவளுக்கு அவனை விட்டுப் பிரிவதே சிலாக்கியமாகப் பட்டது. விரைவில் ஒரு முடிவுக்கு வந்த அவள் இரண்டடி முன் வந்து, தன் உடம்பில் அணிந்துள்ள வைர ஆபரணங்கள் அனைத்தையும் கழற்றி அவன் அருகில் வைத்தாள். இடையில் செருகி யிருந்த சாவிக் கொத்தையும் அவன் முன்னால் போட்டவள், ரோஷம் பொங்க, ''இதோ, உங்கள் பணம். உடுக்க மாற்றுடை கூட எடுத்துக் கொள்ளவில்லை; இதோ போய் விடுகிறோம்'' என்றாள். தன் துடிக்கும் உதடுகளைக் கடித்து, மேலே பேசக் குமுறும் வார்த்தைகளைப் பேச விடா வண்ணம் அடக்கியபடி அதி விரைவாக நடந்தாள். விரைவாகத் தொட்டிலில் கிடந்த குழந்தையைத் தூக்கித் தோளில் சாய்த்துக் கொண்டாள்; கட்டிலில் தூங்கிய சிறுவனை எழுப்பிக் கொண்டாள். வீட்டு வேலைக்காரர்கள் வியப்புடன் பார்த்து நிற்க வேகமாக வீட்டைக் கடந்து, படிகளைக் கடந்து, இறங்கி நடந்தாள்.

★

இது நடந்த பின் ஐந்தாண்டுகள் அதிவேகமாகச் சென்று விட்டன. இந்த ஐந்தாண்டுகளில் பத்மநாபன் தன் சொத்துக்களின் பெரும் பாகத்தைப் பல கூறுகளாக்கிப் பலவேறு தருமங்களுக்கென்று கொடுத்தான். எஞ்சியுள்ள சிறு பாகமும் அவனுக்குப் பின் தர்ம கைங்கரியத்துக்கு உதவும் வண்ணம் ஒருவித ஏற்பாடும் செய்து விட்டான். அவனது சொத்துக்களிலிருந்து ஒரு துரும்பு கூட, 'அவனது வாரிசு' என்று உலகம் சொல்லும் அந்தக் கொடியவளின் குழந்தைகளுக்குப் போகக் கூடாது. இதுவே பத்மநாபன் மனதார விரும்பியது.

அன்று வந்த அந்தக் கடிதத்தைக் காரியஸ்தன் படிக்கக் கேட்ட பத்மநாபன் யோசனையில் ஆழ்ந்து விட்டான். வெகு தூரத்துக்கு அப்பா

லுள்ளதொரு நகரத்தின் பிரபல பெண் பாடசாலையின் தலைவியிடமிருந்துதான் அந்தக் கடிதம் வந்திருந்தது. அவள் தன் பள்ளிக்கூடத்தில் குருடர்களின் குருகுலம் ஒன்று நடத்துவதாகவும், அக்குருகுலக் குழந்தைகளில் சிலருக்குச் சிகிச்சை மூலம் பார்வையளிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுவதால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் துவங்கியிருப்பதாகவும், அதற்கு அளவற்ற தனம் தேவையாக இருப்பதால், முதலில் பத்மநாபனின் உதவியையே அஸ்திவாரமாகக் கொள்ளப் பெரிதும் விரும்புவதாகவும் தலைவி எழுதியிருந்தாள்.

கண்ணற்ற குழந்தைகளின் சிகிச்சைக்கு என்பதால் அவ்வளவு பெரிய தொகை கொடுக்க வேண்டியதும் அவசியமாகப் பட்டது பத்மநாபனுக்கு. ஆகவே அவன், 'நேரில் சென்று விஷயங்களின் உண்மையையும் நன்கு தெரிந்து கொண்டு, பணத்தையும் கொடுத்து விட்டு வருவது' என்று தீர்மானித்து, அன்றே பணத்துடனும் நம்பிக்கையுள்ள இரு வேலைக்காரர்களுடனும் புறப்பட்டான்.

பாடசாலையை அடைந்ததும் பத்மநாபன், அங்கு வாயிலில் நின்ற வேலைக்காரப் பெண்ணிடம், தான் தலைவியைக் காண வந்துள்ள விவரத்தைச் சொன்னான். அவ் வேலைக்காரப் பெண் அன்போடு அவனை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று, ஓர் அறையில் அவனைச் சௌகரியமாக உட்காரச் செய்து விட்டுச் சொன்னாள் :— "எங்கள் தலைவி இன்று வெளியூர் சென்றிருக்கிறார்கள். உபதலைவியே இப்பொழுது அவர் ஸ்தானத்தில் இருக்கிறார். இப்போது அவருடன் ஒரு பெண்மணி பேசிக் கொண்டிருப்பதால் அப் பெண்மணி சென்றவுடன் நான் வந்து தங்களை அடுத்த அறையிலிருக்கும் அவரிடம் அழைத்துச் செல்கிறேன்" என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

இப்போது பத்மநாபனின் கவனம் அடுத்த அறையில் இரு பெண்மணிகளிடையே நடந்த சம்பாஷணையின் மீது சென்றது. 'ஆ! இது!' பத்மநாபனின் உடல் 'குப்'பென்று வியர்த்தது. பக்கத்து அறையில் பேசிக்கொண்டிருந்த இருவரில் ஒருத்தி, "ஹேமா" என்பதை அவள் குரலே அவனுக்கு அறிவித்தது. அளவில்லாத வெறுப்புடன் எழுந்து போக முயன்ற அவனைத் தடுத்து நிறுத்தியது உள்ளத்தை உருக வைக்கும் அவர்களது சம்பாஷணை.

"......தோளில் சுமந்த சிசுவுடனும், கையில் பிடித்த பாலகனுடனும், வீட்டை விட்டு வெளிப்புறப்பட்ட எனக்குக் கஷ்டங்கள் பல ஏற்பட்டன. அகிலா! அவைகளை விரிவாகச் சொல்ல இப்போது எனக்கு அவகாசம் இல்லை. 'உண்மையும், நேர்மையும் உண்டானால் இவ்வுலகில் மானமாக வாழப் பல வழிகள் உண்டு' என்பதை நான் அதிசீக்கிரமே கண்டேன். தற்செயலாக என்னைச் சந்திக்க நேர்ந்த இப்பள்ளியின் தலைவி அன்றே என்னைத் தம்முடன் இவ்வூருக்கு அழைத்து வந்து விட்டார். அன்று முதல் குருகுலத்துக்குச் செய்யும் சேவை மூலம் என் மனத்தை நிம்மதியாக்கிக் கொண்டு விட்டேன். ஆயினும் அகிலா,...... என்னுள்ளம் எல்லாவற்றையும் பொறுத்து மறந்து விட்டது; ஆனால் அன்று அவர் வாயிலிருந்து புறப்பட்ட விஷ பாணங்களைத் தான் என்ன செய்தும் என்னால் மறக்க முடியவில்லை. என் கண்ணுள்மணியாகப் போற்றிவந்த அவரைக் கொல்லச் சூழ்ச்சி செய்தேனாம்! நான் அழகுத் தெய்வமாகப் போற்றி வந்த அவருக்குத் துரோக மிழைத்துக் குழந்தைகளைப் பெற்றேனாம்! அப்பப்பா! எவ்வளவு கொடிய பாணம்! என் உள்ளத்தைக் கொன்று வரும் அந்தக் கொடிய வார்த்தைகளை மறக்க வழி!" என்று நிறுத்திப் பெருமூச்சு விட்டாள் ஹேமா.

"அடி ஹேமா, இதில் ஏதோ மர்மம் இருக்கத்தான் வேண்டும். எதையோ கேட்டுச் சந்தேகித்துத்தான் அவர் அவ்விதம் சொல்லியிருக்க வேண்டும். நீ கொஞ்சம் நினைவு படுத்திப் பார். நீ அவருக்கு அறிவிக்காமல் எந்தச் சிறு காரியமாவது செய்தாயா!" என்று கேட்டாள் அகிலா.

அரை நிமிஷம் அவ் வறையில் நிசப்தம் நிலவியது. ஏதோ ஒரு விஷயத்தை நினைவுக்குக் கொண்டுவந்த ஹேமா பரபரப்புடன், "அகிலா! அகிலா! நான்தான் தவறு செய்து விட்டேன்! ஆனால் அது எப்படித் தவறாகும்! ஒருவேளை இதுவே அவர் மனத்தை......ஆ! இது ஏன் என் புத்திக்கு எட்டவில்லை...!" என்று நிறுத்தியவள் பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்து விட்டாள். மீண்டும் அகிலா வற்புறுத்தவே மேலே சொன்னாள்: "அகிலா, அப்பொழுது பிறந்த என் பெண்ணுக்குக் குறையொன்று இருந்தது. ஏற்கெனவே மனம் நொந்துள்ள அவரிடம் இதைச் சொல்வது அபாயம் என்று எண்ணிய நான், டாக்டர், வேலைக்காரர்கள் அனைவருக்கும் எச்சரிக்கை கொடுத்து விட்டு, நானும் அதை அவரிடம் சொல்லவில்லை. சீக்கிரமே சிகிச்சை மூலம் அக்குறையை நிவர்த்தி செய்து விடுவதாக டாக்டர் எனக்கு உறுதி கூறவே, அவரறியா வண்ணமே சிகிச்சையையும் செய்து முடித்து விட்டுப் பிறகு வெற்றி கண்டால் சொல்வது என்று தீர்மானித்துப் பல பெரிய டாக்டர்களின் உதவியுடன் சிகிச்சையைத் தொடங்க ஏற்பாடு செய்தேன். காலடி யோசையைக் கொண்டே வருபவரை யாரென்று கண்டுபிடிக்கும் அவரது அபார சக்திக்குப் பயந்த டாக்டர்கள், அடிமேல் அடி வைத்து நடமாடக் கற்றுக் கொண்டு, அவரறியா வண்ணம் வீட்டில் நடமாடிக் கொண்டிருந்தனர். அகிலா! இந்த நடமாட்டத்தை ஏதோ ஒரு விதமாக அவர் அறிந்து, அதைத் தவறாகவும் எண்ணி விட்டாரோ! இல்லாவிட்டால் அவர் இப்படி...." மேலே பேச முடியாமல் திணறினாள்.

"ஹேமா, நிச்சயமாக அவர் சந்தேகத்துக்குக் காரணம் இதுதான். ஹேமா, இதைச் சொல்லு முதலில். உன் பெண்ணுக்குச் சிகிச்சை செய்யப்பட்டதா? அப்படி அவருக்கு அறிவிக்க முடியாத குறை குழந்தைக்கு என்னதான் இருந்தது? அதை நீ சொல்லவேயில்லையே, ஏன்!" என்று அகிலா அளவில்லாத ஆவலுடன் கேட்டாள்.

ஹேமாவின் முகம் வாடியது. துன்பத்தால் அவள் உள்ளம் துடிப்பதை அவளது அழகிய விழிகளில் வந்து நிறைந்த கண்ணீர் அறிவித்தது. துக்கத்தால் கம்மிய குரலில் அவள், "அந்தோ! அந்தச் சிகிச்சை ஆரம்பமாக இருந்த அன்றுதான் எங்களை அவர் வெளியேற்றி விட்டாரே! அகிலா, என் கணவரின் அழகையெல்லாம் அள்ளிக்கொண்டு பிறந்த என் செல்வ மகளுக்குக் குறை இதுதான்: 'அந்தகன் குழந்தையான ...... அவள் ஒரு அந்தகி!' இதை அறிந்தால் என் கணவரது உயிர்..." துக்கத்தால் திணறிய ஹேமா மேலே தொடருமுன், அடுத்த அறையிலிருந்து, 'ஐயோ!' என்ற அலறல் சத்தமும் அதைத் தொடர்ந்து யாரோ கீழே விழும் சத்தமும் கேட்டன.

இருக்கையினின்றும் எழுந்த ஹேமா, இரண்டறைகளுக்கும் இடையிலுள்ள சாளரத்தின் திரையை அவசரமாக விலக்கினாள். அப்போது

அடுத்த அறையில் அவள் கண்ட காட்சி அவளை அப்படியே திகைப்படையச் செய்து விட்டது. ஆயினும் அரை நொடியில் திகைப்பைச் சமாளித்துக் கொண்டவள், "ஆ! என் கணவர்!" என்று வியப்புடன் கூவிய வண்ணம் இரண்டெட்டில் அடுத்த அறையை அடைந்தவள், மூர்ச்சித்துக் கிடந்த பத்மநாபனது அழகிய உடலை அள்ளி எடுத்துத் தன்னுடைய மடி மீது கிடத்திக் கொண்டாள். அவளது கருநீல விழிகளில் மீண்டும் நீர் திரையிட்டது.

பத்மநாபனுக்கு மூர்ச்சை தெளியச் சில நிமிஷங்களே பிடித்தன. ஆயினும் அந்தச் சில நிமிஷங்கள் ஹேமாவுக்குப் பல நூறு யுகங்களாகப் பட்டது.

பத்மநாபன் தன் உணர்வை அடைந்தபொழுது தன்னைத் தாங்கியிருக்கும் அம்மெல்லிய கரங்கள் யாருடையவை என்பதைத் தெரிந்து கொண்டான். அப்போது அவன் உள்ளம் பிழியத் தேம்பிய வண்ணம், "ஹேமா! பாவியான என்னை நீ மன்னிக்க மாட்டாய். ஐயோ, என் செல்வ மகளின் குறையை நிவர்த்திக்கக் கூடப் பணமற்ற ஏழையாகி விட்டேனே! இன்று எல்லாவற்றையும் இழந்து நிற்கும் நான் அன்று நிதானித்திருந்தால்...! அன்று என் அறிவும் குருடாகியிருந்தது! ஹேமா, இந்தப் பாவியைக் கடவுளும் மன்னிக்க மாட்டார்" என்று புலம்பினான்.

பத்மநாபனின் கண்ணீரைத் துடைத்த ஹேமா, அன்பும், பரிவும் தொனிக்க, "என் பிரபு! எனக்கு வேண்டியது உங்கள் பணம் அல்ல; உங்கள் அன்புதான். அவ்வன்பின் பலம்கொண்டு நான் எதுவும் செய்வேன். நம் குழந்தையின் சிகிச்சைக்குத் தேவையான பணத்தைக் கூடச் சம்பாதித்து விடுவேன்!' என்றாள். அவள் குரலில் குதூகலம் தொனித்தது.

எல்லையில்லா வியப்புடன் பத்மநாபன், "ஹேமா, நீ என்னையும், என் குலத்தையும் வாழ்விக்க வந்த தெய்வம்!" என்றான். அப்போது அவனுடைய குரல் தழுதழுத்தது.


★

"**அ**ப்பா! என்ன யோசனை செய்தபடி உட்கார்ந்து விட்டீர்கள்! இதோ ஊர்வலம் முடிந்து இந்திராவும், அவள் கணவனும் உங்கள் ஆசியைப் பெற வருகிறார்கள்" என்ற மனோகரின் குரல் பத்மநாபனை இவ்வுலகுக்குக் கொண்டு வந்தது. மைந்தன் மனோகரனின் தோள்களைப் பற்றி எழுந்து நின்ற அவனது பாதத்தில் சிரம்பட வணங்கிய தம்பதிகளை ஆசீர்வதித்த அவன், தன் மருமகனைத் தழுவியபடி சொன்னான்:

"'அந்தகன் குழந்தை' என்ற அடையாளத்தினின்றும் மீண்டும் பார்வையைப் பெற்றுள்ள என் செல்வ மகள் இந்திரா, தாயைப் போல் அன்பும், உறுதியும் கொண்டவள். அவளை நீர் இன்று போல என்றும் சந்தேகியாமல் நம்பும். இதுதான் நான் கொடுக்கும் ஸ்ரீதனம்."

கணவனது வார்த்தைகளைக் கேட்டுச் சிரித்தபடி அங்கு வந்த ஹேமா, "ஒரு ஆடவனிடத்தில் கொள்ளும் அன்பையே கடைசிவரை தன் உள்ளத்தில் உறுதியாய் நிறுத்தி நிலைபெறச் செய்து கொள்ளும் பெண்ணே பெண் ஆவள். அப்படிப்பட்ட பெண்ணை மனைவியாக அடைந்தவனே, 'கணவன்' என்ற பெருமைக்குரிய பாக்கியசாலி; இப்படிக் கணவனைப் பாக்கியசாலியாக்கும் பெண்களைப் பெற்ற தேசமே பெருமைப்பட உரிமையுடைய தேசம். இந்திரா! இதை நீ என்றும் நினைவில் வைத்துக் கொண்டாயானால், உன் தாம்பத்யத்தில் இணையற்ற இன்பத்தைக் காண்பாய்" என்று கூறி இளம் தம்பதிகளுக்குத் தன்னுடைய ஆசியைக் கொடுத்தாள்.

'சில்'லென்று வீசிய தென்றலும், ஹேமாவின் இனிய இவ்வார்த்தைகளும், அவ்வழகிய தம்பதிகளை அகமும் முகமும் மலரச் செய்தன.



சுத்தமான முழு நறுமணமுள்ள காப்பி

நீங்கள் இலகுவாக வாங்கக் கூடிய விலையில்!





Stanes

ஸ்டேன்ஸ்
சிகப்பு லேபிள்
சுத்தமான காப்பி

THE PICK OF THE SOUTH

சுத்தமான காப்பியை வாங்குவதே நல்லது. அது உங்களுக்கு சரியான நறுமணத்தையும், தரத்தையும், அதிக அளவு காப்பியையும் அளிக்கிறது!

ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்டேன்ஸ் சிகப்பு லேபிள் சுத்தமான காப்பியையே வாங்குகிறார்கள். ஏனெனில் அதன் நறுமணம் கெடாமல் புத்தம் புதியதாக இருக்கிறது. அது காற்றுப் புகாமல் பாக்செய்யப்பட்டு, ½ பவுண்ட், 1 பவுண்ட், 3 பவுண்ட், 7 பவுண்ட் டின்களில் கிடைக்கிறது.


எல்லோரும் வாங்கக் கூடிய நல்ல காப்பி!

STC 4038

தி யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி லிமிடெட்,
கோயம்புத்தூர், தென் இந்தியா

திருச்சிராப்பள்ளிக்கு ஏஜண்டுகள்:
மெஸர்ஸ். ஆறுமுகம் & கோ.,
காரனேஷன் கார்டன் லேன்ஸ், தெப்பக்குளம் P. O.

திருவனந்தபுரத்திற்கு ஏஜண்டு:
மிஸ்டர் ஜி. ஆர். ஹரிஹரன் :: செந்திட்டை, சாலை



10. கண்ணீர் வெள்ளம்

பூபதி, மரங்க ளடர்ந்து வளர்ந் திருந்த அந்தக் காட்டு வழியில் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்கும் உடம்பு மிகவும் தளர்ந்து போயிருந்தது. முதல் நாள் இரவு அலை கடலில் படகைச் செலுத்திக்கொண்டு போனதில் அவன் உடம்பு முழுவதும் வலித்தது. இருந்தாலும் பூபதி அதையெல்லாம் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. வழியில் யாரையாவது சந்தித்தால் அவர்களை ஆகாரம் ஏதாவது கேட்கலாம் என்று நினைத்தான். ஆனால் வழியில் யாரும் தென்படவே யில்லை. அது ஜன சஞ்சாரமே இல்லாத காடு. வெகு தூரம் சென்றதும் அவன் கால்கள் கெஞ்ச ஆரம்பித்தன.

திடீரென்று குயில்களும் கிளிகளும் கூவும் சத்தம் கேட்டது. உடம்புக்கும் மனசுக்கும் இதந்தரும் குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. பூபதிக்குச் சிறிது உற்சாகமும் நம்பிக்கையும் பிறந்தன. மேலும் நடந்தான். கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு பசுமையான மாந்தோப்பு தென்பட்டது. பூபதி சந்தோஷத்தோடு நுழைந்தான். ஆகா! அந்த மாமரங்களில் எத்தனை பழுத்த பழங்கள் கனந் தாங்காமல் தொங்கி, பூபதியின் தலையில் இடித்தன. பூபதி நல்ல பழங்களாகப் பார்த்துத் தூக்கக் கூடிய அளவுக்குப் பறித்து எடுத்துக் கொண்டான். பசி தாங்க முடியாமல் இருக்கவே, பூபதி தானும் இரண்டு மூன்று பழங்கள் சாப்பிட்டான். பக்கத்தில் இருந்த குளத்தில் கை நிறைய அள்ளி ஜலம் சாப்பிட்டான்.

பூபதிக்கு இப்பொழுது பசியும் களைப்பும் தீர்ந்து விட்டன. சுமதிக்கு வேண்டிய பழங்களை எடுத்துக் கொண்டு வந்த வழியாகவே வேகமாகப் போனான்.

கடற்கரையை அடைந்து காலையில் சுமதி களைப்புடன் படுத்துக் கொண்ட மரத்தடியை நோக்கினான் பூபதி. அவனுக்குத் திக்கென்றது. வேகமாக மரத்தடிக்குப் போய்ச் சுற்று முற்றும் பார்த்துச் சுமதியைத் தேடினான். காணவில்லை. ஒருவேளை தவறுதலாக இந்த மரத்தடிக்கு வந்து விட்டோமோ என்று நினைத்து, பூபதி அடுத்து அடுத்து இருந்த மரத்தினடியிலெல்லாம் போய்த் தேடினான். எங்கும் அவள் இல்லை.

“சுமதி, சுமதி!” என்று பெருங் குரலில் கானகமே அதிரும்படி கதறினான். அதே பெருங்குரலில் காட்டிலிருந்து எதிரொலி கிளம்பியது. பூபதிக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. சின்னக் குழந்தை மாதிரி ‘ஓ’வென்று தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டான். பூபதி அழுவதைப் பார்த்த நீலக் கடல் ‘ஓ’ வென்று ஓலமிட்டுப் புலம்பி அலைகளை மோதித் தன் துக்கத்தைத் தெரிவித்துக் கொண்டது.

பூபதிக்குக் கடலைப் பார்த்ததும் துக்கம் தாங்க வில்லை. அவன் கண்கள் கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்கின.

“சுமதி, உன்னை இந்த மாதிரி உயிரோடு இழப்பதற்கா கப்பலில் அந்தக் கொடியவர்களிட மிருந்து காப்பாற்றி இங்கு அழைத்துவந்தேன்? சுமதி, எங்கேயாவது எனக்குத் தெரியாமல் ஒளிந்து கொண்டு விளையாடுகிறாயா? சை, என்ன நினைப்பு இது? பசியால் களைத்துப் போனவள் எப்படி ஒளிந்து கொள்ள முடியும்? ஒருவேளை கப்பல் கொள்ளைக்காரர்கள் வந்து, அவளை...சீ, அப்படி யிருக்காது. வேறு யாராவது இங்கு வந்து அவளைத் தூக்கிக் கொண்டு போயிருக்க வேண்டும். ஆகா, சுமதி எங்கே போய் என்ன கஷ்டங்களை அநுபவிக்கிறாளோ! என் போன்ற வேறு எந்த அநாதை ஏழை வாலிபனுக்கும் கனவிலும் கிட்டக்கூடாத பாக்கியம் எனக்குக் கிட்டியது. ஒரு ராஜகுமாரியுடன் பேசுவதும், நேசமாகப் பழகுவதும் ஒரு ராஜகுமாரனால் தானே முடியும்? எனக்கு அந்த பாக்கியம் கிட்டியும் இப்படி மோசம் போகும்படியாகி விட்டதே! தெய்வமே! இதற்குத்தானா நீ என் காரியங்களில் வெற்றி மேல் வெற்றி அளித்தாய்! இப்படி எங்களுக்குத் துணை செய்வது போல் காட்டி, ஒரேயடியாக ஏமாற்றத்தை அளித்ததைவிட, கடலில் நாங்கள் ஏறியிருந்த படகை முழுகச் செய்திருக்கலாமே! சரி, இப்பொழுதுதானென்ன? கருணைக் கடலென்று உன்னைக் கூறுகிறார்கள். இந்தக்

கடலில் விழுந்து என் உயிரை மாய்த்துக் கொள்ளப் போகிறேன். சுமதியை இழந்த வாழ்வு எனக்கு வேண்டாம். என்னை உன் அலைக் கரங்களால் தழுவி முழுகச் செய்து விடு!'' என்று கூறிக் கொண்டே கடலை நோக்கிப் பாய்ந்து ஓடினான் பூபதி.

"தம்பி, ஓடாதே! நில், அநியாயமாக உயிரை மாய்த்துக் கொள்ளாதே!'' என்று ஒரு கம்பீரமான குரல் கேட்டது. வேகமாகக் கடலை நோக்கி ஓடிய பூபதி திடுக்கிட்டு அலைத்தினருகே தயங்கி நின்றான். பிறகு, குரல் வந்த திசையை நோக்கினான். ஒரு பெரியவர் வேகமாகக் கடல் நீரின் அருகில் வந்து அவனை நெருங்கினார்.

"தம்பி, நீ நல்ல திடமுள்ள இளைஞன். என்னத்துக்காக இக் கடலில் உயிரை விடத் துணிந்தாய்?''

"சுவாமி, அது பெரிய கதை. யாருடைய வாழ்விலும் கிட்டாத ஒரு பாக்கியம் அநாதையான எனக்குக் கிடைத்தது. பேரழகியான ஒரு இளம் ராஜ குமாரி வந்து எனக்குத் தோழியானாள். இருவரும் கப்பல் கொள்ளைக்காரர்களின் காவலுக்குத் தப்பி, அவர்களுடைய துப்பாக்கிக் குண்டுக்குத் தப்பி, ஆழ்கடலின் பேரலைகளுக்குத் தப்பி இங்கு வந்து சேர்ந்தோம். அவளை விட்டு விட்டு ஆகாரம் தேடிவரப் போனேன், சுவாமி! வந்து பார்த்தால் அவளைக் காணோம். சுவாமி, அவளைப் பற்றிய ஏதாவது தகவல் தெரியுமா?''

"தம்பி, வருத்தப்படாதே! சற்று முன் இந்த வழியாகப் பல்லக்கு ஒன்று வந்தது. நிறைய வீரர்களும் வந்தார்கள். மரத்தடியில் படுத்திருந்த பெண்ணைத் தூக்கிப் பல்லக்கில் வைத்துக் கொண்டு உடனே போய் விட்டார்கள். அந்தப் பல்லக்கு அரண்மனையைச் சேர்ந்தது. அது எனக்கு நன்றாய்த் தெரியும்!'' என்றார் பெரியவர்.

உடனே பூபதி பரபரப்புடன் "அரண்மனைப் பல்லக்கா? சுமதியை அதில் வைத்துக் கொண்டு போய் விட்டார்களா? அரண்மனை எங்கே யிருக்கிறது, சுவாமி! இங்கிருந்து ரொம்ப தூரமோ? நடந்து போக முடியுமா?'' என்று கேட்டான்.

பெரியவர், "இல்லை, தம்பி! இந்தக் காட்டு வழியாகப் போனால் மூன்று கல் தூரம் இருக்கும். இந்தப் பாதையோடு போ!'' என்றார்.

"சுவாமி, நீங்கள் தெய்வம் மாதிரி வந்து என் சுமதியைப் பற்றிய செய்தியைச் சொன்னீர்கள். எனக்கு வெற்றி கிட்டும்படி ஆசீர்வதியுங்கள்!'' என்று அவரை வணங்கி எழுந்தான்.

"தம்பி, நீ வெற்றியடைவாய். ஆனால் ஜாக்கிரதையாக நடந்து கொள். அரண்மனை விஷயம், தெரியுமா?'' என்று கூறி அவனை அன்போடு அனுப்பி வைத்தார்.

பூபதி அவர் காண்பித்த திசையில் வில்லி லிருந்து விடுபட்ட அம்பைப் போல வெகு வேகமாகச் சென்றான். (தொடரும்)

அட்டைப் பட விளக்கம்

துயரமும் சந்தோஷமும்

இதோ, இந்த இதழின் அட்டைச் சித்திரத்தில் தோன்றும் இளைஞன் யார் என்று தெரிகிறதா! அவன் ஒரு கவிஞன். அவன் ஏதோ சொல்லுகிறான். அவன் வார்த்தைகளைச் சற்று செவி கொடுத்துக் கேட்கலாம்.

"துயரத்தின் அதி தெய்வமே! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவுசெய்து என்னைவிட்டுப் பிரிந்து போ. நீ ஏழை. எனக்கு வேண்டிய கற்பனை உன்னால் கொடுத்துவிட முடியாது. உன் சகோதரியாகிய சந்தோஷ தேவதையோ ஏராளமான கற்பனைகள் வழங்குவாள். நீ நான்கு பாடல்கள் தரும் நேரத்தில் அவள் பத்து பாடல்கள் இயற்றி விடுவாள்.

உன்னுடன் ஒரு மணி நேரம் மிக இனிமையாகக் கழிக்கலாம். ஆனால் ஒரு நாள் முழுதும் பாடுபட்டு ஒரு புது சிருஷ்டிகூடக் கிடைக்கவில்லை என்னும்போது வருத்தமாக இருக்கிறது.

துயரமே, உன் எண்ணங்களுக்கு உருவம் அமைப்பதில்,—திரையிலாயினும் சரி, கல்லிலாயினும் சரி, சொற்களிலாயினும் சரி,—நீ மிக மிக நிதானம் கொண்டவள்.


ஆனால் உன் சகோதரி ஆனந்த தேவதை இருக்கிறாளே, அவள் படு சுறு சுறுப்பு. காலம் கடக்காமல் காரியம் செய்ய வேண்டும் என்ற துடிப்பு மிக்க உள்ளவள்.

உன் பெருமூச்சு இதமாக இருக்கிறது. உன் கண்ணீரும் அழகாக இருக்கிறது. அவை ஒரு மனிதனின் உள்ளத்து உணர்ச்சிகளை ஓர் உருவமாக வெளியிட நீ விரைந்து உதவுவதில்லையே! அதனால் தான் உன் சகோதரி ஆனந்தத்தை என்னிடம் அனுப்பிவிட்டு நீ விடைபெற்றுச் செல் என்கிறேன்.

இன்பத் துயரமே! என்னை விட்டுத் தயவுசெய்து போ. உன் அழகு துலங்கும் சகோதரி வரட்டும். அவளுக்கு வழிவிடு. அவள் அருள் எனக்கு அதிகமாகக் கிடைக்கட்டும். ஏனெனில் நீ நான்கு கவிகள் உதவக்கூடிய சமயத்தில் அவள் பத்துக் கவிகள் அருள் புரிவாள்.''

மேற்கண்டவாறு ஆங்கிலக் கவிஞர் டேவிஸ் என்பவர் ஒரு கவிதை இயற்றி யிருக்கிறார். அதற்கு நம் சித்திரக்காரர் சந்திரா அழகிய வண்ண ஓவியம் தீட்டியிருக்கிறார்.

ஆங்கிலக் கவியாயினும், அதிலுள்ள அழ்ந்த கருத்துக்கள் எல்லா மொழிக் கவிகளுக்கும் நம்மவர்களுக்கும் பொருத்தமாகத்தானே இருக்கிறது!



இணை பிரியாத தோழிகள்

ஜயலக்ஷ்மி

"அப்பா! வசுமதியை இன்று பெண் பார்க்க வருகிறார்களாம். சுமதியின் அம்மா என்னை அவர்கள் வீட்டுக்கு வரும்படி சொன்னார்கள். நான் போய் வரட்டுமா?"

"இப்போது எதற்காக நீலா போகிறாய்? அவர்கள் பெண்ணைப் பார்த்து விட்டுப் போகட்டுமே. சாயங்காலமாகப் போயேன்."

"இல்லையப்பா. சற்று முன்புகூடத் தம்பி ராஜு வந்து என்னை அவன் அம்மா சீக்கிரம் அழைப்பதாகச் சொல்லிவிட்டுப் போனான்."

"சரி! உன் இஷ்டம்" என்றார் ராமதுரை.

"வருகிறேன் அப்பா!" என்று கூறி விட்டு மானைப் போல் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடினாள் நீலா, எதிர் வீட்டை நோக்கி. அவள் செல்லுவதையே பார்த்துக் கொண்டிருந்த ராமதுரைக்கு அவள் மேல் அநுதாபம்தான் ஏற்பட்டது.

பாவம், நீலாவுக்குத்தான் என்ன பெருமை! சுமதியைப் பெண் பார்க்க வருகிறார்கள் என்பதைக் கேட்டு நீலாவைப் போல் சந்தோஷப் படக் கூடியவர்கள் யாரும் இருக்க முடியாது. சொல்லப் போனால் வசுமதிகூட இவ்வளவு சந்தோஷப் படுகிறாளோ, இல்லையோ சந்தேகம்தான். நீலாவுக்குத் தான் வசுமதியின் மீது எவ்வளவு ஆசை!

** ** **

நீலாவும் வசுமதியும் இணை பிரியாத தோழிகள். ஒருவரோடு ஒருவர் அன்பு பாராட்டுவதற்கும், ஒற்றுமையுடன் உறவாடுவதற்கும் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கி வந்தார்கள் இருவரும்.

நீலாவைப் பார்க்கிலும் வசுமதி ஒரு வயது சிறியவள். வசுமதிக்கு அன்பை அள்ளித் தெளிக்கப் பெற்றெடுத்த அன்னை இருந்தாள். பணத்தை வாரியிறைத்து வரன் தேடக் கூடிய நிலையில் தகப்பனார் இருந்தார். செல்வ நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த பெற்றோர்களின் ஒரே பெண்ணாகப் பிறந்திருந்தாள் வசுமதி. சீரும் சிறப்புமாக வாழக் கேட்பானேன்? ஆனால் அவளுக்கும் ஒரு குறை இருக்கத்தான் செய்தது. அது என்ன? பெண்கள் மிக மிக அவசியமாகக் கருதும் உடலழகை அவள் பெற்றிருக்க வில்லை. அதற்காக வசுமதி குரூபியாகவும் இருந்து விடவில்லை. பகட்டான உடையுடனும் பளபளக்கும் நகைகளுடனும் பருவத்தின் பூரிப்பும் சேர்ந்திருந்த படியால் அவளிடமும் கொஞ்சம் கவர்ச்சி இருந்தது. பார்ப்பவர்களின் உள்ளத்தை ஈர்க்கும் அழகு இல்லா விட்டாலும், அன்பும் அமைதியும் கலந்த முகப் பொலிவுடன் விளங்கினாள் வசுமதி. எல்லாவற்றுக்கும் மேலாக அவள் உள்ளம் தங்கமாக இருந்தது.

நீலா! அவள் அழகின் இருப்பிடம். ஆனால் ஏழைமையின் உறவிடம். சின்னஞ் சிறு வயதிலேயே பெற்றவளைப் பறி கொடுத்து விட்டாள். ஏழைமையும் வயோதிகமும் மிகுந்த குமாஸ்தாவின் பெண்ணாகப் பிறந்து விட்டாள். இது போதாதா, ஒரு இளம் பெண் அவதியுற? ராமதுரையின் முதல் மனைவி இறந்து போய் ஏழெட்டு வருஷங்கள் வரையில் அவர் இரண்டாம் கல்யாணத்தைப் பற்றி நினைக்கவே யில்லை. அவ்வளவு தூரம்

அவருக்கு வறுமை மிகுந்து வாழ்வு கசந்து போயிருந்தது. ஆனால் பாழும் விதி அவரைச் சும்மா விட்டு வைக்க விரும்பாமல் பார்வதியை அவருடைய இரண்டாவது மனைவியாக்கியது. பெற்றவர்களை யிழந்து பரிதவித்துக் கொண்டிருந்த நெருங்கிய உறவினளான பார்வதியை அவர் அந்தச் சமயம் ஏற்றுக் கொண்டே ஆகும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

குத்து விளக்குப் போல் அமைதி கலந்த அழகுடன் இருந்த பார்வதிக்கு நீலா என்ற பொற் சித்திரம் பிறந்தாள். நீலாவுக்கு நான்கு வயது முடியும் சமயத்தில் பார்வதி மறுபடியும் பிரசவ வேதனைக்கு ஆளானாள். அவ் வேதனையிலிருந்து அவள் விடுபடுவதற்குள்ளாகவே, அவளுடைய உயிர் உடலை விட்டு விடுபட்டுச் சென்றுவிட்டது. வயிற்றிலேயே குழந்தை இறந்து விடவே, அக்கிராமத்தில் போதுமான வைத்திய வசதி கிடைக்காத படியால், பார்வதியையும் இழந்து நின்றார் ராமதுரை. குழந்தை நீலாவை வளர்க்க வேண்டிய முழுப் பொறுப்பும் அவரையே சேர்ந்தது.

எப்படியோ பதினைந்து வருஷங்களைக் கழித்து விட்டார்கள் தந்தையும் மகளும். பதினெட்டு வயதுப் பருவ மங்கையானாள் நீலா. அவளுக்கு அழகு இருந்தது. அறிவு இருந்தது. அன்பு இதயம் இருந்தது. இவைகளெல்லாம் இருந்து என்ன பயன்? திருமகளின் அருட் பார்வை அவளுக் கில்லையே!

அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கே போதுமான வருமானம் இல்லாத ராமதுரை மகளுக்கு எப்படி மணம் முடித்து வைப்பார்? ஆனால் அதற்கும் வேளை வரவில்லை.

'நீலாவைவிடச் சிறியவளான வசுமதிக்குக் கூடக் கல்யாணம் நடக்கப் போகிறது. ஹூம்' என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் ராமதுரை.

* * *

எதிர் வீட்டிலிருந்து திரும்பி வந்த நீலா தன் தகப்பனாருடன் எதுவும் பேசாமல் நேராகத் தன் அறைக்குள் சென்று உட்கார்ந்து கொண்டாள்.

ராமதுரையும் மகளின் முகத்தோற்றத்திலிருந்து ஒன்றும் புரிந்து கொள்ள முடியாமல் சிறிது நேரம் தவித்த போதிலும், கடைசியில் 'வயது வந்த பெண்ணல்லவா? தனக்கும் தன் தோழிக்கு வந்த நிலை வரவில்லையே என்ற ஏக்கமாக இருக்கும். இது இயற்கைதானே!' என்று அவரும் இதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை.

அன்று சாயங்காலம் சற்றுக் காற்றாட வெளியில் போய் வரலாம் என்று எண்ணியவராய் மேல்த் துண்டை எடுத்துத் தன்னுடைய தோளில் போட்டுக் கொண்டு வாசற் பக்கம் வந்தார் ராமதுரை.


அச்சமயம் எதிர் வீட்டிலிருந்து விடுவிடென்று ஒருவர் ராமதுரையின் வீட்டுக்குச் சமீபமாய் வந்து நின்றார்.

"நீங்கள் யார்? என்ன வேண்டும்?" என்று கேட்டார் ராமதுரை.


"ஒன்றுமில்லை. உங்களிடம் ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்கலாம் என்று வந்தேன். உள்ளே போய்ப் பேசலாமா!" என்று கேட்டுக் கொண்டே விடு விடு வென்று வீட்டுக்குள் நுழைந்தார் வந்தவர்.

"ஆகா! பேஷாக வாருங்கள்" என்று கூறி அவரை வீட்டினுள்ளே அழைத்துச் சென்றார் ராமதுரை.

"என் பெயர் ஜகதீசன். ராமச்சந்திரய்யரின் பெண் வசுமதியை என் பிள்ளை சசிதரனுக்குப் பெண் பார்ப்பதற்காக வந்தோம். பெண் பார்க்கிற சமயத்தில் யதேச்சையாக உங்களுடைய பெண்ணை நாங்கள் பார்க்கும்படி நேர்ந்தது. எனக்கே சற்று மனம் குழம்பியது. ஆனால் ராமச்சந்திரய்யரின் முகதாட்சண்யத்திற்காகப் பேசாமலிருந்து விட விரும்பினேன். ஆனால் என் பிள்ளை உங்களுடைய பெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள்வேன் என்று ரொம்பப் பிடிவாதமாயிருக்கிறான். எனக்கு இருப்பது ஒரே பிள்ளை. அவன் சந்தோஷம் தானே என் சந்தோஷம்! அவன் ஆசைப்படியே செய்து விடத் தீர்மானித்து விட்டேன். அதைக் கேட்ப



ஹிந்து துணை ஆசிரியர் ஸ்ரீ வி. கே. நரசிம்மன் அவர்களின் செல்வக்குமாரி ரேவதிக்கும் கடலூர் மதுவிலக்கு ஸப் - இன்ஸ்பெக்டர் ஸ்ரீ டி. ஜகன்னாதன் அவர்களின் செல்வக்குமாரன் ராகவனுக்கும் ஏப்ரல் 21உ மயிலாப்பூரில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கும் அன்று மாலை நடந்த வரவேற்பு வைபவத்துக்கும் சென்னை நகரப் பிரமுகர்களும், பத்திரிகையாளர்களும், நண்பர்களும் உறவினர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினார்கள்.



○●○

பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையின் சர்க்குலேஷன் மானேஜர் ஸ்ரீ டி. வி. பரசுராமனின் குமாரி திருமதி ராஜலக்ஷ்மிக்கும் திரு கே. ஜி. சுப்ரமணியன் பி.எஸ்ஸி.க்கும் பம்பாயில் ஏப்ரல் 25ல் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமண வைபவத்துக்குப் பம்பாய்ப் பிரமுகர்கள் பலர் விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்தனர். வாழ்க, மணமக்கள்!

○●○

தற்காகத்தான் இப்போது இங்கு வந்தேன். என்ன சொல்கிறீர்கள்?'' என்று ஆவலுடன் கேட்டார் வந்தவர்.

ஆச்சரியத்தால் வாயடைத்து நின்ருர் ராமதுரை.

"இந்த மாதத்திலேயே முகூர்த்தத்தை வைத்துக் கொள்ளலாம் அல்லவா?'' என்று ஆவலுடன் கேட்டார் ஜகதீசய்யர்.

"நான் என்னத்தைச் சொல்வது? நான் பரமஏழை. நீங்கள் பெரிய பணக்காரர். தவிர, தாங்கள் ராமச்சந்திரய்யரின் சம்பந்தியாக வேண்டியவர். என் மகளுடைய சௌகர்யத்திற்காக நான் ராமச்சந்திரய்யரின் மனசுக்குக் கஷ்டமளிக்க விரும்பவில்லை. என்னை மன்னித்து விடுங்கள்'' என்று பணிவாகக் கூறினுர் ராமதுரை.

"நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. நீங்கள் எப்போதும் ஏழையாகவே யிருக்க வேண்டுமா? உங்களுடைய பெண்ணை என் பிள்ளைக்குக் கொடுத்து விட்டால் தாங்களும் பணக்காரனின் மாமனுராகி விடுகிறீர்கள். மேலும் நீங்கள் உங்களுடைய பெண்ணை என் பிள்ளைக்குக் கொடுக்க மறுத்து விட்டாலும், என் பிள்ளை வசுமதியை மணந்து கொள்ளச் சம்மதிக்க மாட்டான். வீணுக இரண்டு கலியாணங்களும் நின்று போகும். ஒன்ருவது நடக்கட்டும். அவசரமில்லை. யோசித்து இரண்டு நாட்களுக்குள் கடிதம் எழுதுங்கள். நாங்கள் இன்றிரவு ஊருக்குப் போகிறோம்'' என்று முடிவாகக் கூறி விட்டு வெளியேறினுர் ஜகதீசய்யர்.

"அப்பா!'' என்ற குரல் விம்மலுக்கிடையிலிருந்து வெளிப்பட்டது. நிமிர்ந்து பார்த்தார் ராமதுரை.

அழுது சிவந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தாள் நீலா.

"நான் அப்பவே சொன்னேன், அந்தச் சமயத்தில் அங்கு போக வேண்டாம் என்று. நீ கேட்கவில்லை'' என்று மனத்தாங்கலுடனேயே இதைக் கூறினுர் ராமதுரை.

"இப்படி நடக்கும் என்று எனக்குத் தெரியாது, அப்பா!'' என்று விம்மினுள் நீலா.

"இப்பொழுது எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லையே!'' என்று வருத்தத்துடன் கூறினுர் ராமதுரை, நீலாவின் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே.

"நீங்கள் கவலைப்படாதீர்கள் அப்பா! எனக்கு அவருடைய பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள விருப்பமில்லை என்று நானே எழுதி விடுகிறேன்'' என்று மொழிந்த நீலா தகப்பனுரை ஆதரவுடன் நோக்கினுள்.

"ஹூம், எப்படியாவது செய்'' என்று கூறிவிட்டு வெளியே சென்ருர் ராமதுரை.

தன் பிள்ளை சசிதரன் படித்துப் பார்த்து விட்டுக் கொடுத்த இரண்டு கடிதங்களையும் ஆவலுடன் பிரித்துப் படித்தார் ஜகதீசய்யர்.

"அநேக நமஸ்காரம்.

நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு வசுமதியைக் கலியாணம் செய்து வைப்பது தான் நியாயம். எங்கள் நிலைக்கு அப்பாற் பட்டது தங்களுடைய நிலை. நான் அதற்குத் தகுதியற்றவள். தவிர, வசுமதி என் பிராண சிநேகிதி. அவளுடைய மணவினைக்கு இடையூருக நான் இருக்க நேர்ந்ததே என் துர்ப்பாக்கியம்தான். கனவில்கூட நான் அவளுக்குப் போட்டியாக வர மாட்டேன். அவளுடைய சந்தோஷமே என் சந்தோஷம். என்னை மன்னிக்க வேண்டும்.

நீலா.''

ஆச்சரியக் கடலின் பேரிரைச்சலின் நடுவே இன்னொரு கடிதத்தையும் படித்துப் பார்த்தார் ஜகதீசய்யர்.

"நமஸ்காரம்.

நீங்கள் என்னைப் பார்த்து விட்டுச் சென்ற பிறகு உங்களுக்குப் பெண் பிடிக்கவில்லை போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டு என் பெற்ருேர்கள் வருத்தப் படுகிருர்கள். ஆனுல் எனக்கு அதில் கொஞ்சம் கூட வருத்தமே கிடையாது. ஏனென்ருல் உண்மை எனக்குத்தான் தெரியும். ஆம், நீலாதான் சொன்னுள். அதைக் கேட்டவுடன் எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. நீங்கள் கொஞ்சம்கூட யோசிக்க வேண்டாம். உடனே நீலாவை உங்கள் மருமகளாக்கிக் கொள்ள ஏற்பாடு செய்து விடுங்கள். இது போன்ற அரிய சந்தர்ப்பம் நீலாவுக்குக் கிடைக்காது. எனக்குக் கிடைக்கும். ஏனெனில் என் தகப்பனுர் பணக்காரர். நீலாவின் தகப்பனுர் பரம ஏழை. நீலா பெற்றனுபவிக்கும் எந்த பாக்கியமும் நான் பெற்று விட்ட மாதிரிதான்.

வசுமதி.''

"இதற்கென்னடா, செய்வது இப்போது?'' என்று மகனைப் பார்த்துக் கவலையுடன் கேட்டார் ஜகதீசய்யர்.



பம்பாய், மாதுங்கா அமெச்சூர் நாடகக் கழகத்தார் சென்ற இரண்டாம் தேதியன்று சங்கீத சாகித்ய வித்வான் மாயூரம் ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரி அவர்களுக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள். "ஜயதி ஜயதி பாரத மாதா" என்று தொடங்கும் பாடலைப்போல் பல சாகித்யங்களை ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரி அவர்கள் இயற்றிச் சங்கீத உலகத்துக்குச் சிறந்த முறையில் தொண்டாற்றியுள்ளார்கள். இந்தப் பாராட்டு விழாவுக்குக் கலாரஸிகர் ஸ்ரீ டி. வி. ராமானுஜம் தலைமை வகித்தார். படத்தில் ஸ்ரீ ராமானுஜம், சாஸ்திரியாருக்குப் பூமாலை சூட்டிவிட்டுப் பேசுவதைக் காணலாம்.

"அப்பா! இந்த இரண்டு பெண்களும் மிகுந்த உள்ள ஒற்றுமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் நாம் வசுமதிக்கு ஒரு வரனைப் பார்த்து முடித்தால்தான் நீலாவை நான் அடைய முடியும் போலிருக்கிறது..." என்று கூறினான் சசிதரன்.

"இதென்னடா இது! யார் வீட்டுப் பெண்ணுக்கு யார் வரன் தேடுவது?" என்று வினவினார் ஜகதீசய்யர்.

"இல்லையப்பா! சித்தப்பாவின் பிள்ளை மணி என்னைவிட ஒரு வயதுதானே சின்னவன்? அவனுக்கு வசுமதியை முடித்து விட்டால் என்ன? நீ சொன்னால் சித்தப்பாவும் மணியும் கேட்காமலிருக்க மாட்டார்களே!" என்று பவ்யமாகக் கூறினான் சசிதரன்.

"ஹூம்! அதையும் கேட்டுப் பார்த்து விடுகிறேன். உன்னுடைய பிடிவாதத்தினால் எனக்கு எவ்வளவு சிரமம் பார்...!" என்று சொல்லிக் கொண்டே எழுந்திருந்தார் ஜகதீசய்யர்.

தன் தகப்பனருக்குத் தன் மீதுள்ள எல்லையற்ற வாஞ்சையைக் கண்டு உள்ளம் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்த சசிதரன் நன்றி நிறைந்த மனத்துடன், வெளியே செல்லக் கிளம்பிக் கொண்டிருந்த தகப்பனாரையே பார்த்துக் கொண்டு பிரமித்து நின்றான்.

* * *

புழுதியை வாரியிறைத்துக் கொண்டு வாசலில் வந்து நிற்கும் கார் சத்தத்தைக் கேட்ட ராமதுரையும், எதிர் வீட்டு ராமச்சந்திரய்யரும் பரபரப்புடன் ஓடி வந்தார்கள் வாசற் பக்கம்.

காரிலிருந்து இறங்கிய ஜகதீசய்யர் விடுவிடு வென்று ராம துரையிடம் வந்து அவர் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு எதிர் வீட்டில் புகுந்தார்.

கலவரம் மிகுந்த முக பாவத்துடன் விழித்துக் கொண்டு நின்று கொண்டிருந்த ராமச்சந்திர ஐயரைப் பார்த்து, "என் தம்பிக்கு ஒரு பிள்ளையிருக்கிறான். சசிதரனைவிட ஒரு வயது தான் சிறியவன். பெயர் மணி. எனக்கு இருப்பது போன்ற சொத்தும், வீடும், என் தம்பிக்கும் இருக்கிறது. அவனுக்கும் பிள்ளை மணி ஒருவன்தான். பெண்களிருவரும் கலியாணம் ஆகிப் புருஷன் வீட்டுக்குப் போய் விட்டார்கள். மணிக்கு உங்கள் பெண் வசுமதியைக் கொடுத்து விடுங்கள். சசிதரனுக்கு ராமதுரை அய்யரின் பெண் நீலாவைக் கொடுக்கட்டும். இரண்டு கலியாணத்தையும் சேர்த்தே நடத்தி விடலாம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கூறி ராமச்சந்திரய்யரையும் ராமதுரையையும் மாறி மாறிப் பார்த்தார் ஜகதீசய்யர்.


"பிள்ளைகளைப் பெற்றவர்களுக்கு இயல்பாக இருக்கும் குணங்களில் ஒன்றுகூட உங்களுக்கு இல்லை. நீங்கள் மனிதருள் மாணிக்கம். உங்களைப் போல் உலகத்தில் நூற்றுக்கு ஒருவர் இருந்தால் கூட இந்த வரதட்சிணைக் கொடுமை நம் நாட்டை விட்டே அகன்று விடும்!" என்று குரல் தழதழக்கக்கூறிய ராமதுரை உணர்ச்சி மிக்க அடைந்தவராய் ஜகதீசய்யரின் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

உடனே ஜகதீசய்யரின் பார்வை ராமச்சந்திரய்யரின் மேல் சென்றது. அதைக் கண்ணுற்ற ராமச்சந்திரய்யர், "உங்களிடம் சம்பந்தம் செய்து கொள்ள நாங்கள் ரொம்பவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இதற்கு மேல் எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை" என்று அன்பு கனிந்த குரலில் மொழிந்தார்.


* * *

கலியாணம் ஆகிவிட்டால் நீலாவும் வசுமதியும் எங்கே ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்து போகும்படி நேர்ந்து விடுமோ என்றெண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இதுவரையில் இனிமேல் அவர்களுக்கு அந்தக் கவலையே கிடையாது. அதுதான் இருவரும் ஒரே ஊரில், ஒரே தெருவில் பக்கத்துப் பக்கத்து வீட்டில் வாழ்க்கைப் பட்டிருக்கிறார்களே, இனிமேல் எதற்காகப் பிரியப் போகிறார்கள்?

அதோ பாருங்கள் மொட்டை மாடியில் இருவரும் எவ்வளவு உற்சாகமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று! தோழமைக்கே எடுத்துக் காட்டாக அன்றோ அப் பெண்மணிகள் விளங்குகிறார்கள்!



நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



ஆம், அதன் இரகசியம் இதுதான் . . .

பற்களைத் தவறாமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடு நாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம். பிரதி தினமும், இருவேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும் நறுமணமுள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீனிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.

"... இவ்வாச்சரியகரமான பற்பசையை எமக்களித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்தே யாகவேண்டும்."



க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

MTY-37-TAM.

யோகாசனச் சிகிச்சை

வி. என். குமாரஸ்வாமி

20. இரும்புச் சத்து

இரும்புச் சத்து உடலுக்கு மிக இன்றியமையாதது. இச்சத்து போதிய அளவு உடலில் இருந்தால்தான் உடல் பலமாக இருக்கும். இல்லையானால் இரத்த சோகை ஏற்படும். இந்தச் சத்து உடலில் உள்ள எல்லா அணுக்களிலும் சிறிதளவு இருந்தாலும் முக்கியமாக இரத்தத்தில்தான் அதிகம் இருக்கிறது. இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்கள் நல்ல சிவப்பு வர்ணமாக இருக்க இது உதவுகிறது. இந்த இரும்புச் சத்து குறைந்தால் சிவப்பு இரத்த அணுக்களின் சிவப்பு வர்ணம் குறையும். இந்தச் சிவப்பு இரத்த அணுக்கள் உடலில் உயிரை இருக்கச் செய்வது.

சிவப்பு அணுக்கள்தான் நுரையீரலில் வரும் பிராணவாயுவைச் சுமந்து உடல் முழுவதும் உள்ள அவயவங்கள், தசைகள், இழையங்கள் முதல் எல்லாவற்றுக்கும் கொண்டு சென்று போஷணை அளிக்கின்றன, மறுபடியும் அது சும்மா வருவதில்லை. அவ்விடங்களில் எரிக்கப்பட்ட கரியமல வாயுவைச் சுமந்து நுரையீரலில் கொண்டு வந்து சேர்க்கிறது. அப்படிக் கொண்டு வரும் வாயுவைத்தான் நாம் வெளியில் விடுகிறோம்.


இவ்வணுக்கள் எதுவரை சரிவர வேலை செய்கிறதோ அதுவரை உடல் பூரண ஆரோக்கியமாயும் பலமாயும் இருக்கும். அப்படி வேலை செய்யும் அணுக்களுக்குப் பலம் கொடுப்பதாய் இருப்பது இந்த இரும்புச் சத்துதான். இந்தச் சத்து குறையும்போது இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்களும் பலவீனமடைகின்றன. நாம் உயிர் வாழப் பிராண வாயுவைச் சுமந்து உடலில் ஏற்படும் விஷ வாயுவை அகற்றும் அணுக்களே பலவீனமடைந்தால் உடலில் என்ன மாறுதல் உண்டாகும்! பொதுவாகப் பலவீனம் உண்டாகும் என்று சொல்லி விடலாம். ஆனால் அப் பலவீனமே மற்ற நோய்கள் வரக் காரணமாக அமைந்து விடுகிறது.

அதனால் இந்த இரத்த சோகை உண்டானால் இரும்புச் சத்துள்ள மருந்துகளைப் பஸ்பங்களாகவும், மாத்திரைகளாகவும், டானிக்குகளாகவும் கொடுப்பார்கள். ஆனால் உண்மை தெரிந்த வைத்தியர்கள் இந்தச் சத்து எந்தெந்தப் பொருளில் இருக்கிறதோ அவைகளைச் சாப்பிடச் சொல்லுவார்கள். மேற் சொன்ன மருந்துகளெல்லாம், உணவைச் சாப்பிட்டு அதன் மூலம் சத்தைக் கிரகித்துக் கொள்ள முடியாத அவசர காலத்தில் உபயோகிப்பதில் குற்றமில்லை. சாதாரணமாய் எல்லோரும் உணவின் மூலம் இதைப் பெறுவதுதான் இயற்கை வழி.

அப்படியும் இந்தச் சத்து நமது உடலுக்கு மிகவும் பெருத்த அளவில் வேண்டியதில்லை. நமது உடலில் இருக்கும் இரும்புச் சத்தை எல்லாம் சேர்த்தால் ஒரு சிறு கம்பி ஆணியின் அளவே ஆகும். சுமார் மூன்று கிராம் எடை. நமக்குத் தினசரி வேண்டிய இரும்பின் அளவு 20–30 மில்லி கிராம் எடைதான். அதில் தினசரி நமது வியர்வையின் மூலமாய் அதிகம் வெளிப்பட்டு விடுகிறது. முப்பத்தேழு சதம் உஷ்ண நாட்டில் வியர்வை மூலம் வெளியேறி விடுகிறது. குளிர் நாட்டில் 18 சத விகிதந்தான் வெளியேறுகிறது. இந்த வெளியேறும் அளவுக்கு நாம் நமது உணவின் மூலம் உட்செலுத்த வேண்டும். அவ்வாறு கவனித்துச் சாப்பிட்டால்தான் நமது ரத்த அணுக்கள் நல்ல சிவப்பு நிறம் பொருந்தி, அதன் வேலையைச் செய்யப் பலம் உடையனவாய் இருக்கும். இல்லையானால் சிவப்பு அணுக்கள் நிறம் குறைந்து பலவீனமாகும்.

இந்த அளவை அளக்க மருத்துவர்களிடம் சென்றால், அவர்கள் பார்த்துச் சொல்லுவார்கள். ஒரு சிறு ஊசியினால் விரல் நுனியில் குத்தி ஒரு துளி இரத்தத்தை ஒரு வெள்ளை மை ஒற்றும் தாளினால் ஒத்தி எடுப்பார்கள். அதை அவர்களிடம் இருக்கும் இரத்த நிறத்தைக் குறிக்கும் ஷேட் கார்டில் வைத்துப் பார்ப்பார்கள். அதில் படிப்படியாகக் குறைந்த அளவிலிருந்து மிக உயர்ந்த அளவுக்கு அதாவது பத்து சத விகிதம் அளவிலிருந்து நூறு சத விகிதம் வரைக்குமுள்ள இரத்த நிறம் இருக்கும். அவைகளுடன் மை ஒத்தும் தாளில் ஒத்திக் கொண்ட இரத்தமுள்ள வர்ணத்தையும் ஒத்திட்டுப் பார்த்து, எந்த நிறத்துக்குச் சரியாய் இருக்கிறதோ, அந்த அளவு சிவப்பு வர்ணம் இருக்கிறது என்று குறித்துக் கொடுப்பார்கள்.

இதில் சுமார் எண்பது சத விகிதம் என்று இருந்தால் பரவாயில்லை. உடலில் ஒன்றும் பாதிக்காது. அதற்கும் குறைந்த அளவில் இருந்தால் தான் உடல் பாதிக்கும். சிலருக்கு நாற்பது ஐம்பது சத விகிதம்கூட இருப்பதுண்டு. அவர்கள் கட்டாயம் உணவில் இரும்புச் சத்துள்ள உணவைச் சாப்பிடுவதுடன் ஏதாவது இரும்புச் சத்துள்ள மருந்துகளும் சாப்பிட வேண்டியதாயிருக்கும்.



அற்புத மாலை

★ ★ ★

மல்லிகை, முல்லை, ரோஜா மலர்களினால் கட்டப்பட்ட மனங் கவரும் பல மாலைகளை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் வாடாத மாலைகளைக் காண்பது அரிது. தஞ்சையில் நடைபெறும் கவின் கலைப் பொருட்காட்சியிலே ஒரு சித்திரக்கூடம் திகழ்கிறது. அதில் கைவண்ணம் காட்டும் பல பொருள்கள் உள. அவைகளில் இம்மாலையும் ஒன்று. முற்றிலும், அரிசியைக் கொண்டே இம் மாலை கட்டப்பட்டுள்ளது.

நூறு சத விகிதம் எல்லோருக்கும் இருப்பதில்லை. எங்கோ சிலருக்கு இருக்கும். அவர்கள் மிக்க திட தேகிகளாய் இருப்பார்கள்.

முக்கியமாய்த் தாய்மார்களுக்கு இம்மாதிரி அடிக்கடி இரத்தக் குறைவு நேரும். அவர்கள் கர்ப்பமாக இருக்கும்போது மற்றொரு உயிரையும் வளர்க்க வேண்டி யிருப்பதால் அவர்களுக்கு இரும்புச் சத்து 40% 50%க்குக் கூட வந்துவிடும்.

எனவே அவர்களுக்கு அவசியம் சாதாரண அளவைவிட அதிகம் வேண்டியதாய் இருக்கும். சாதாரணமானவர்களுக்கு 20 மில்லி கிராம் இருந்தால் போதும். வளரும் குழந்தைகளுக்கும், கர்ப்ப ஸ்திரிகளுக்கும், பால் கொடுக்கும் தாய்மார்களுக்கும் 30 மில்லி கிராம் எடை இரும்புச் சத்து வேண்டும். ஒரு மில்லி கிராம் என்பது ஒரு கிராமில் ஆயிரத்தில் ஒரு பங்கு. நமக்கு வேண்டிய இரும்புச் சத்து மிக மிகச் சிறிய அளவு சுமார் ¼ கிராம்தான் வேண்டியது. இதைக் கணக்கிட்டுச் சாப்பிட வேண்டுமென்பதில்லை. இந்தச் சத்துள்ள பொருள் எவை எவை என்று தெரிந்து அவைகளை நமது சௌகரியம்போல் உணவுடன் சேர்த்துக் கொண்டு வந்தால் போதும்.

அப்படிச் சாப்பிடுவதில் இரும்புச் சத்து அதிகமாய் விட்டால் ஏதாவது கெடுதி நேரிட்டுவிடுமோ என்று பயப்பட வேண்டியதில்லை. எந்தச் சத்தையும் உடல் அதற்கு வேண்டிய அளவுக்கு மட்டும் வைத்துக் கொண்டு மீதியை வெளியில் தள்ளி விடும். ஆனால் நாம் சாப்பிடும் சத்தைத் தனக்கு வேண்டிய அளவு எடுத்துக் கொள்ள உடல் அவயவங்கள் சீராய் வேலை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாம் சாப்பிட்ட உணவிலுள்ள சத்து உடலில் ஒட்டும். இல்லையானால் மலமாகக்

முள்ளங்கிக் கீரை 22-9 முளைக் கீரை 21-4 சுண்டைக்காய் வற்றல் 22-2 மணத் தக்காளிக் கீரை 20-5 புதினாக் கீரை 15-6 எள் 10-5 முழுக் கடலை 9-8 கொத்தமல்லி இலை 10-0 கொத்தமல்லி விதை 17-9 முருங்கைக் கீரை 7-0 முருங்கைக் காய் 5-3 வெந்தியக் கீரை 16-9 வெந்தியம் 14-1 பொன்னாங்கண்ணிக் கீரை 16-7 பாவற்காய் சிறியது 9-4 கொத்தவரை 6-3 வெங்காயத்தாள் 7-5 கடுகு 17-9 சீரகம் 31-0 ஓமம் 14-6 பேரீச்சம் 10-6 வெல்லம் 11-4 களிப்பாக்கு 11-1 வெற்றிலை 6-7 பப்படம் 17-2 கருப்பஞ்சாறு 1-3 பிஸ்தா 13-7 கம்பு 8-8 சோளம் 6-2 தினை 6-3 பனிவரகு 5-7 கேழ்வரகு 5-4—மேற்படி பொருள்கள், சாதாரணமாய் நாம் உபயோகிக்கும் பொருள்களே. இரும்புச் சத்து அதிகமுடையன மட்டும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் அதே சமயம் நாம் முக்கியமாய் உபயோகிக்கும் அரிசியைப் பற்றியும் அன்பர்கள் தெரிந்து கொள்ளட்டுமென்று அதன் கணக்கும் கொடுக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் மில் அரிசி கழுவுவதிலும் கஞ்சி வடிப்பதிலும் அந்த ஒரு மில்லி கிராம் இரும்புச் சத்தும் நிற்காது. மிஷின் புழுங்கல் அரிசி பரவாயில்லை. மரத் திருகல் அரிசிதான் முழுத் தவிட்டுடன் இரும்புச் சத்தும் கூடியது. ஒவ்வொரு வகை அரிசியிலும் உள்ள இரும்புச் சத்து மில்லிகிராம் விவரம் பாருங்கள்:—

சாமை 7-1 அவல் 8-0 அரிசிப் பொரி 6-2 மரத் திருகல் பச்சரிசி 4-5 கைக்குத்தல்அரிசி 3-6 மிஷின் பச்சரிசி 1-0 மிஷின் புழுங்கலரிசி 2-2 கருப்புப் புட்டரிசி 4-9 முட்டையின் மஞ்சட்கரு 8-6—தவிர கம்பு, தினை, சாமை, கேழ்வரகு, சோளம் போன்றவைகளை உபயோகிக்கும் கிராமத்து மக்கள் எப்படி நம்மைவிட சக்தியுடையவர்களாய் இருக்கிறார்களென்பதும் மேற்படி கணக்கிலிருந்து அறியலாம். இயற்கையாய் அவர்களுக்கு அப்படி அமைந்திருக்கிறது. ஒன்றுமில்லா விட்டாலும் வெறும் சுண்டைக்காயை வறுத்து வைத்துக் கொண்டே சாப்பிடுவார்கள். அதில் எவ்வளவு இரும்புச் சத்து இருக்கிறது! மற்றும் கீரை வகைகள் சாதாரணமாய்க் கிடைக்கக் கூடியவை. அவைகளில் எவ்வளவு இரும்புச்சத்து இருக்கிறது பாருங்கள். அதனால்தான் தினசரி ஒரு கீரை வகையைச் சேர்க்க வேண்டுமென்பது. கடுகு, சீரகம், ஓமம், மிளகு, மஞ்சள் முதலியன நிறைய உட்கொள்ள முடியாது. ஆனால் நமது பெரியோர்கள் எவ்வளவு முன் யோசனையுடன் இவைகளெல்லாம் அன்றாடம் நமது உணவில் மிகச் சிறிய அளவு சேரும் வண்ணம் திட்டமுடன் சமையலை அமைத்திருக்கிறார்கள். ஆனால் இவைகளையே அதிகம் சேர்த்தல் ஆகாது. உஷ்ணம் அதிகம் ஆகும். அதனால் மிக இலேசாய் மருந்து போலச் சேர்க்க வேண்டும். வெல்லத்தில் நிறைய இருக்கிறது. இதைவிடுத்து ஒன்றுமே இல்லாத வெறும் வெள்ளைச் சர்க்கரை உபயோகிப்பதில் என்ன லாபம்! பிஸ்தா போன்றவை மிக விலையானது. பணக்காரர்கள் உபயோகிக்கலாம். மற்ற எல்லாவற்றையும் எல்லோரும் உபயோகிக்கலாம். கூட யோக ஆசனங்களையும் செய்து வந்தால் உடல் தனக்கு வேண்டிய இரும்புச் சத்தைக் காப்பாற்றத் தவறாது.

(தொடரும்)

மாடித் தோட்டப் பள்ளிக்கூடம்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்றும் வருஷம் புதுடில்லி லோடி காலனியில் மூன்றே குழந்தைகளுடன் துவங்கிய "மாடித் தோட்டப்பள்ளிக்கூடம்" இன்று ஐம்பதுக்குமேற்பட்ட குழந்தைகளுடன் காட்சியளிப்பது ஸ்ரீமதி வஸந்தா ராமகிருஷ்ணனின் சளியா உழைப்புக்கும் நம் நாட்டு நாரீமணிகளின் சக்திக்கும் ஒரு சான்று.

லோடி காலனி குமாஸ்தாக்கள் வசிக்கும் இடம். தமிழ்ப் பள்ளிக்கூடம் அங்கிருந்து பல மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. தினம் குழந்தைகள் பஸ்ஸில் போய் வரும் வரை தாய்மார்களின் மனம் ஒரு நிலையில் இராது. அதிலும் நாலு வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

அந்தக் குறையை நிவர்த்திக்கவும் பொதுவாகக் கல்வி அறிவைப் பரப்பவும் சுமார் இரண்டு மூன்று மணி நேரம் காலையில் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித்தரத் துவங்கினார்கள் ஸ்ரீமதி வஸந்தா.

ஜப்பானிய ஆதிக்கத்துக்குப் பிறகு இந்தியா வந்த பின் ஸ்ரீமதி வஸந்தா சென்னையில் பட்டம் பெற்று, வேலை தேடி அலைவதற்குப் பதிலாக அசோக் விஹார் என்ற சேவை ஸ்தாபனத்தில் சொற்ப ஊதியத்தில் சேவையே பிரதானமாய்க் கொண்டு தொண்டாற்றி வந்தார்.

புது தில்லியில் வந்த பின்பும் இந்தக் குணம் அவரை விடவில்லை. அவருடைய அதிர்ஷ்டம் அவரை மனைவியாயடைந்த ஸ்ரீ ராமகிருஷ்ணன் அவர்கள் தேச சேவையில் ஆர்வமுற்றவராய் அமைந்தார். அதனால் தொடர்ந்து பணியாற்ற மண வாழ்க்கை குறுக்கிடவில்லை.

பள்ளிக்கூடத்துக்கு வரும் சிறுவர் சிறுமியர் குதித்தோடிக் கொண்டே வருகின்றனர். விடுமுறை விட்டால் கோபித்துக் கொள்ளுகின்றனர். பள்ளிக்கூடத்தைச் சிறைச் சாலையாய்ப் பாவிக்கவில்லை. ஏன்! போதனா முறையில் அன்பு பிரதான்யம் வகிக்கின்றது.

சம்பளம் எவ்வளவு தெரியுமா! ஒரு ரூபாய். போர்டு, சாக்பீஸ் இதர சாதனங்கள் வாங்க. வாத்தியார் சம்பளத்துக்கல்ல.

மேற்படி பள்ளியின் முதலாண்டு விழா சென்ற வெள்ளியன்று நடைபெற்றது. சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ ஜகன்னாததாஸ் அவர்கள் தலைமை வகித்தார். ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்கார் முதலானோர் வந்திருந்து பேசினார்கள்.

இந்த வைபவத்தை முன்னிட்டு ஒரு சிறிய கதம்ப நிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்ரீமான் பிரஸன்ன ராவின் "நிழல் வடிவங்கள்" ஓர் அற்புத நிகழ்ச்சி. விரல்கள் விளையாடுகின்றன. உயிர்களைச் சிருஷ்டிக்கின்றன. அந்த உயிர்கள் ஜாலங்கள் புரிகின்றன.


ஸ்ரீமதி வஸந்தா தொகுத்த "கிராமக் காட்சி" என்ற இசை நாடகம் முதல் தரம். நாட்டுப் பாடல்கள் ரொம்ப நன்றாயமைந்திருக்கின்றன.

குமாரி சுசீலாவின் நடனமும், ஸ்ரீ பாலசுப்பிரமணியனின் இசை விருந்தும் அடுத்து வந்து இன்புறச் செய்தன.

மொத்தத்தில் ஒரு நல்ல முயற்சியின் பலனைப் பார்த்த பலனும், செவிக்கும் கண்ணுக்கும் விருந்து கிடைத்த நிறைவுடனும் வீடு திரும்பினோம்.

புதுடில்லி
3—5—54

ஒரு நிருபர்



தியாகத்தின் சிகரம்

டி. ஆர். வேங்கடரமணன்

"தளபதி பூரண்சிங் உங்களை உடனே அழைக்கிறார்!"

ஜீப் காரின் யந்திரத்துக்குள் தலையிட்டுக் கொண்டு, கோளாறைச் சரி செய்யும் வேலையில் மூழ்கியிருந்த ஹவில்தார் அமர்நாத், தன் கையிலிருந்த கருவி நழுவி விழுந்ததைக் கூட அறியாமல், 'சரேக்' என்று எழுந்து, விறைப்பாக நின்று கொண்டு, ராணுவ வணக்கம் தெரிவித்தான்! தன் அருகில் பெரிய பீரங்கி குண்டு வந்து விழுந்து, பயங்கரமான சப்தத்துடன் வெடித்துச் சிதறினால் கூட அவ்வளவு அவசரமும், கலவரமும் அடைந்திருக்க மாட்டான் அவன்.

"......ஹவில்தார் சாகப்! தளபதி இங்கு இல்லை! ...... கூடாரத்திலுள்ள, தம் அறையில் இருக்கிறார்!" என்று கூறி, நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான், செய்தி கொண்டு வந்த சிப்பாய்.

தொலைவிலே துப்பாக்கிகளும், பீரங்கிகளும் "டுமீல்......டுமீல்!" என்று அதிரும் சப்தம்...... அம் மலைப் பிரதேசத்திலே எதிரொலித்தது.

காஷ்மீரத்து மண்ணில் அமைதியை நிலைநாட்ட ஏற்பட்ட போர் அது. இயற்கை யன்னையின் தெய்வீக சௌந்தரியம் பரிபூரணமாகப் பூரித்துக் கொழிக்கும் 'ரம்மியமான அந்த நாட்டினிலே, அமைதியோடு வாழ்ந்து வந்த மக்களைப் பலாத்காரத்தினால் பயமுறுத்தித் தங்கள் ஆட்சிக்குக் கீழ்ப்படிய வைக்கும் நோக்கத்துடன் இனவெறி பிடித்த சில குண்டர்கள் திடீரென்று படையெடுத்தனர். பாகிஸ்தான் ராணுவம் முதலில் மறைமுகமாகவும், பின்பு நேரிடையாகவும், இந்த ஆக்கிரமிப்பில் கலந்து கொண்டு 'விறு விறு' வென்று முன்னேறி வந்தது. காஷ்மீரத்து மக்களின் கூக்குரலைக் கேட்டு உதவி புரிய விரைந்து சென்றது இந்திய ராணுவம். அதிலே ஒரு பகுதியில்தான் ஹவில்தார் அமர்நாத் பணி புரிந்து வந்தான்.

சாதாரண சிப்பாயாக இந்திய ராணுவத்திலே சேர்ந்தவன், தன் வீரத்தினாலும், தியாகத்தினாலும் உயர்ந்து ஹவில்தார் ஆகிவிட்டான்.

பரந்த மார்பு; திரண்டு எழுந்த புஜங்கள், ஆறரை அடி உயரம்; இரும்பு போன்ற சரீரம், கம்பீரமான தோற்றம்; தீக்ஷண்யமான பார்வை! இவன்தான் அமர்நாத்!

வண்டியில் ஏற்பட்டிருந்த சில சில்லறைக் கோளாறுகளை ஒழுங்குபடுத்த அமர்நாத் முனைந்திருந்தபோதுதான் தளபதியின் அழைப்பு வந்தது.

** ** **

"ஹவில்தார் அமர்நாத்! முக்கியமான வேலை! உடனே போர் முனைக்குச் செல்ல வேண்டும். பதின் மூன்றாவது பிரிவு தளபதியான பகவத் சிங்கிடம் இந்தத் தஸ்தாவேஜுகளைக் கொடுத்து விட்டு வரவேண்டும். புரிகிறதா! மிகவும் ரகசியம்." பூரண்சிங்கின் குரல் தாழ்ந்து ஒலித்தது.

கம்பீரமான குரலில் 'கணீர் கணீர்' என்று சிப்பாய்களின் அணிவகுப்பின்போது உத்தரவிட்டுப் பழகிய அவருக்குக் குரலைத் தாழ்த்தி ரகசியமும் பேசத் தெரியும் என்பதை அப்போதுதான் அமர்நாத் அறிந்தான். உருண்டு திரண்டு இருந்த

அவர் கைகளில் புத்தகம் போன்ற சிறு பொட்டணம் இருப்பதைக்கண்டான். அது நன்கு ஒட்டப்பட்டு ராணுவ முத்திரை வைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கூடார அறைக்குள் அவர்கள் இருவரையும் தவிர வேறு ஒருவரும் இல்லை. கூடாரத்துக்கு வெளியே காவலாக நின்று கொண்டிருந்த இரு சிப்பாய்களின் 'சரக் சரக்' என்ற பூட்ஸ் கால்களின் சப்தம் கேட்டது. ராணுவ லாரிகள் கடுமையான வேகத்தில் செல்லும்போது ஏற்பட்ட 'கிரீச்' என்ற சப்தம், தொலைவிலே வெடித்துக் கொண்டிருந்த துப்பாக்கிக் குண்டுகளின் ஓசையோடு கலந்து எதிரொலித்தது.

"அப்படியே செய்கிறேன், ஸார்!" என்று கூறி, ராணுவ வணக்கம் தெரிவித்த அமர்நாத் விறைப்பாக நின்றான்.

"அமர்நாத்! உன்னை இந்த வேலைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்குக் காரணம், நீ கடமை உணர்ச்சி மிக்கவன் என்று நான் நம்புவதால்தான். வேறு யாரிடமும் இந்த வேலையை ஒப்படைக்க எனக்கு மனமில்லை. ஒரு விநாடி தாமதமும் கூடாது! இது வரை வந்த செய்திகளை ஊடுருவி நோக்கும் போது. தென்புறமிருந்தும் நாளைக் காலைக்குள் திடீரென்று எதிரிப் படைகள் தாக்கும் என்று நினைக்கிறேன். மிக உயர்ந்த ராணுவ ரகசியங்கள் உள்ள கடிதங்களும், அடுத்த தாக்குதலுக்கான திட்டங்களும் இதனுள் இருக்கின்றன. இவை நான் குறிப்பிட்ட நபரைப் போய் உடனே அடைய வேண்டும். மிகவும் ரகசியம், தெரிந்ததா!"

"அப்படியே செய்கிறேன், ஸார்! எனக்குக் கடமைதான் எல்லாவற்றிலும் பெரிது!"

"அமர்நாத்! மற்றொரு விஷயம்... உன் உயிர் போனாலும் இத் திட்டங்கள் எதிரிகளின் கையில் சிக்கிவிடக் கூடாது! சிக்கி விட்டால், நம் திட்டங்கள் தவிடு பொடியாகி விடும்! நான் உன்னிடம் ஒப்படைக்கப் போகும் வேலை எத்தனை முக்கியமும் ஆபத்தும் வாய்ந்தது என்பதை நீ உணர வேண்டும் என்றே இதைத் திரும்பத் திரும்பக் கூறுகிறேன், புரிகிறதா!"

"தங்கள் கட்டளையின் பூரண விளைவுகளை நான் நன்றாக உணருகிறேன், ஸார்!"

"இந்தத் திட்டங்களைப் பற்றி எதிரி ஒற்றர்கள் ஒருவேளை அறிந்திருப்பார்களோ என்றுகூடச் சந்தேகப் படுகிறேன். நீ மிகவும் சாதுர்யமாகவும், ஜாக்கிரதையாகவும் நடந்து கொள்ள வேண்டும்!" இவ்வாறு கூறியவாறே தளபதி அமர்நாத்தின் அருகில் வந்து, அவனது முதுகில் பரிவோடு தட்டிக் கொடுத்தார்.

சிறிது நேரம் அவனை உற்றுப் பார்த்தார். அமர்நாத்தின் திறமையையும், தகுதியையும் அளவிடுவது போலிருந்தது அவர் பார்த்த பார்வை.

கூடாரத்துக்கு வெளியிலே படுகாயம் அடைந்த சிப்பாய்கள் சிலரின் கூக்குரல் கேட்டது. ராணுவ ஆம்புலன்ஸ் லாரிகள் காயமுற்றவர்களைத் தூக்கிக் கொண்டு 'விர்' என்று வேகமாகச் செல்லும் சத்தம் கேட்டது.

"ஹவில்தார் அமர்நாத்! உன் உயிர் போனாலும் எதிரிகளிடம் இந்த ராணுவ ரகசியம் சிக்கி விடக் கூடாது. விஷயம் மிஞ்சி விட்டால், இந்தக் கடிதங்களை அப்படியே எரித்து நிர்மூலமாக்கி விட்ட பிறகுதான் உன் உயிர் பிரிய வேண்டும்! ஊஹூம்! இல்ஜிட் சமவெளி வழியாகச் செல்லாதே!





குமாஸ்தா :— நான் கல்யாணம் செய்து கொண்டு சம்பள உயர்வு கேட்கலாம் என்று இருக்கிறேன்!

முதலாளி :—நானும் கல்யாணம் செய்து கொண்டு எல்லோருடைய சம்பளத்தையும் குறைக்கலாமென்று இருக்கிறேன்!

எதிரி ஒற்றர்கள் அங்கே அதிகம்! சௌரிங்க் கணவாய் வழியாக, ஜீலம் நதியை ஒட்டினாற் போல், மலையைச் சுற்றிச் செல். அதுதான் அதிக அபாயமற்ற பாதை!"

இதைச் சொன்ன பூரண் சிங், அமர்நாத்தின் வலது கையைத் தூக்கிக் குலுக்கினார். சாதாரணமாக அனல் கக்கும் அவர் பார்வையிலே, பரிவோடு கனிவையும் கண்டான் அமர்நாத்.

அமர்நாத்தின் வலது கையிலே முழங்கையிலிருந்து மணிக்கட்டு வரை நீண்டிருந்த தழும்பு இருந்தது. பல துப்பாக்கிக் குண்டுகள் துளைத்துச் சென்றதால் ஏற்பட்ட தழும்பு அது! அதை உற்றுப் பார்த்தார் பூரண்சிங். பழைய சம்பவம் ஒன்று அவர் மனக் கண்முன்னே தோன்றியது.

** ** **

கொடுமையான போர் நடந்து கொண்டிருந்தது. எதிரிகள் யந்திரத் துப்பாக்கிகளால் விடாது குண்டு மாரி பொழிந்தனர். தளபதி பூரண் சிங்கின் தோள்பட்டையை ஒரு குண்டு துளைத்து விட்டது! அப்படியே மயங்கி விழுந்து விட்டார். அமர்நாத் அதைத் தற்செயலாகக் கவனித்து விட்டான். இரு கைகளாலும் அவரை ஏந்திக் கொண்டு குனிந்தவாறு பின் வாங்கினான். எப்படியாவது அவரைக் காப்பாற்றி விடவேண்டும் என்பது ஒன்றே அவன் குறிக்கோள்.

எதிரிகளின் குண்டு ஒன்று அமர்நாத்தின் வலது மணிக்கட்டைத் துளைத்துக் கொண்டு சென்றது. அடுத்த வினாடி ஒன்றன் பின் ஒன்றாக, நான்கைந்து துப்பாக்கிக் குண்டுகள் அவனது வலது கையைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தன. தன் வலியைச் சிறிதும் பொருட்படுத்தாமல், மிகுந்த பிரயாசையுடன் தளபதி பூரண் சிங்கைத் தூக்கிக் கொண்டு அருகிலிருந்த ஆம்புலன்ஸ் லாரி வரை கொண்டு சேர்த்தான்!

வலது கையில் பல குண்டுகள் துளைத்த போதிலும், தளபதியைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு சென்று, அவர் உயிரைக் காப்பாற்றிய தற்காக மேலதிகாரிகளின் சிறந்த பாராட்டுதலைப் பெற்றான். அதன் பலனாகச் சாதாரண சிப்பாயாக இருந்த அமர்நாத், ஹவில்தார் அமர்நாத் ஆகி விட்டான்! தன் உயிரைக் காப்பாற்றியவன் என்னும் அளவிலே அமர்நாத்திடம் பூரண்சிங் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்!

பல குண்டுகள் துளைத்ததால் ஏற்பட்ட காயத்தின் தழும்புதான் அமர்நாத்தின் வலது கையை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

** ** **

தளபதி இருந்த அறையை விட்டு மின்னல் வேகத்தில் வெளியில் வந்தான் அமர்நாத். அவனது இருதயத்தை ஒட்டினாற் போலிருந்த பையினுள் இருந்தது அந்த ராணுவ ரகசியம். ஒரு துள்ளுத் துள்ளி ஜீப்பில் டிரைவர் ஆசனத்தில் அமர்ந்தான். புழுதியை வாரிக் கிளப்பிக் கொண்டு ஜீப் கிளம்பியது. எதிரிலே மரணமடைந்த சிப்பாய்களை 'ஸ்ட்ரெட்சரில்' ஏந்தியவாறு சிலர் வந்து கொண்டிருந்தனர். அமர்நாத்தின் கண்களில் அந்தக் காட்சி படவில்லை. இல்லை, அவன் பட்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை!

கடுமையான வேகத்திலே சென்று கொண்டிருந்தது ஜீப். நன்றாக இருட்டி விட்டது. வானளாவி நின்ற இமாலயச் சிகரங்கள் மனித உள்ளத்தின் சிறுமைத் தனத்தைக் கண்ணுற்று, வெட்கப்படுபவை போல், தங்கள் முகங்களை வெண்முகில்களிடையே மறைத்துக் கொண்டன!

அமைதிக்கு இருப்பிடமான, ரம்மியமான அம் மலைப் பிரதேசத்திலே, இனவெறியர்கள் நடத்தும் படுகொலைகளைக் கண்டு பயந்து, அப்போதுதான் கிளம்பிய வெண்ணிலவு மேகங்களிடையே பதுங்கிக் கொண்டது! முழு மதியைக் கண்ட வண்ண மலர்கள் 'குப்'பென்று இதழ் விரித்தன. பனிக் காற்று சில்லென்று வேகமாக அடித்தது. வெடிகுண்டுகளின் ஓசை அங்கே எதிரொலித்தது.

நிலவு வெளிச்சத்திலே பாதை நன்கு தெரிந்தது. மிகவும் ஒடுங்கிய மலைப்பாதை. ஒருபுறம் செங்குத்தான மலை! மறுபுறமோ 'கிடு கிடு' பாதாளம்! ஆயிரம் ஆயிரம் அடிகளுக்குக் கீழே ஜீலம் நதி ஆர்ப்பரித்துக் கொண்டு சென்றது. மிகவும் அபாயகரமான பிரயாணம். கம்பீரமாக நிமிர்ந்து நின்ற மலைமகளின் இடையைச் சுற்றிக் கோலம் போடுவது போல, மேலும் கீழுமாக வளைந்து நெளிந்து சென்றது பாதை!

ஜீப் ஒரு திருப்பத்தில் 'சடா'ரென்று நுழைந்தது. சில அடிகளுக்கு அப்பால், பாதையின் குறுக்காக, அவை என்ன! கற்களா! மரக் கட்டையா! 'சடா'ரென்று 'பிரேக்' போட்டான். ஜீப்பிலிருந்து கீழே குதித்தான். மறு வினாடி, "ஒரு அடி நகர்ந்தால் சுட்டுப் பிணமாக்கி விடுவேன்!" என்ற எச்சரிக்கும் குரல் கேட்டுத் திடுக்கிட்டான். திபு திபு வென்று நான்கைந்து பேர்களாகச் சேர்ந்து அவனை வளைத்துக் கொண்டனர். அவர்கள் பாகிஸ்தான் ஒற்றர்கள். தளபதி பூரண்சிங் நினைத்தது சரியாகி விட்டது. ராணுவ ரகசியத்தை அவன் கொண்டு செல்வதை எப்படியோ அவர்கள் அறிந்து விட்டார்கள். பின்புறமாக இருவர் அவன் கைகளைக் கயிற்றால் கட்டி விட்டனர். ஐந்தாறு பாகிஸ்தான் ஒற்றர்கள்! அவர்களுள் புதர் போன்ற மீசை வைத்த பட்டாணியன் ஒருவன் இருந்தான். அவன்தான் அவர்களுக்குத் தலைவனாக இருக்க வேண்டும் என்று தோன்றியது.

தலைவன் கண்களால் ஏதோ சமிக்ஞை செய்தான். உடனே அமர்நாத்தினுடைய உடைகள் சோதனை செய்யப்பட்டன. அமர்நாத் திமிறி

வழக்கமாக 2-நிமிஷம் பிரஷால் தேய்த்தால்

கால்கேட் டூத் பவுடர்

மூன்று நன்மைகளையும் அளிக்கிறது!

✓ வாயில் நறுமணம்!
✓ ஒளிவீசும் பற்கள்!
✓ சொத்தை குறையும்!



வாய்க்குப் பாதுகாப்பும், சுத்தமான ஒளிப் பற்களும் பெற, பல் டாக்டர் அங்கீகரிக்கும் இந்த முறையில் தினசரி கால்கேட் டூத்பவுடரை உபயோகியுங்கள்:

- சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் ப்ற்களை 2 நிமிஷம் பிரஷ்கொண்டு தேய்க்கவும்.
- பல்லின் நுனி, முன்புறம், பின்புறம் எல்லாவற்றையும் தேய்க்கவும்.
- எப்போதும் ஈற்றிலிருந்து பல்நுனி நோக்கி தேய்க்கவும்.

கைகண்ட முறையை இன்றே கையாளுங்கள்!

TPG/14

பல் டாக்டர் அங்கீகரித்த சிறந்த பலன்தரும் முறை!

ஞன். மண்டையில் துப்பாக்கியின் அடிமட்டையினால் ஓங்கி ஒரு அடி விழுந்தது. அமர்நாத்தின் கண்கள் இருண்டன. நின்ற நிலையிலேயே சுருண்டு விழுந்து விட்டான். தன் கைகளையும் கால்களையும் பற்றி இழுத்துச் சென்று ஜீப் காருக்குள் போடுகிறார்கள் என்று உணர்ந்தான். அதற்குப் பிறகு, அவன் பிரக்ஞை இழந்து விட்டான்!

•• •• ••

மறுவில்தார் அமர்நாத் சிறிது சிறிதாக உணர்வு பெற்றான். ஏற்றத்திலும் இறக்கத்திலும் குலுங்கிக் குலுங்கி ஜீப் செல்வதை உணர்ந்தான். கைகளைத் தூக்க முயன்றான். நல்லவேளையாகக் கைகள் கட்டப்பட்டிருக்கவில்லை, ஆனால் கைகளை ஏன் தூக்க முடியவில்லை! கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்தான். அவன் கைகளைப் பூட்ஸ் கால் ஒன்று அழுத்திக் கொண்டிருந்தது. நடந்த விஷயங்கள் பளிச் சென்று ஞாபகத்துக்கு வந்தன அவனுக்கு. தளபதி கொடுத்த ராணுவ திட்டங்கள், ஐயையோ! ஒற்றர்கள் கையில் சிக்கி விட்டனவா?

ஜீப் காருக்குள் பேச்சுக் குரல் கேட்டது.

"இந்த நாயைத் தூக்கி அப்படியே பாதாளத்தில் எறிந்து விடலாமே! நமக்கு வேண்டிய எதிரியின் ராணுவ ரகசியங்கள்தான் கிடைத்து விட்டனவே!"—பூட்ஸ் காலால் முதுகில் உதைத்துக் கொண்டே ஒரு பட்டாணியன் கூறுவதைக் கேட்டான் அமர்நாத். அதைக் கேட்ட அவனுக்கு "சரிதான்! நமக்கு முடிவு காலம் நெருங்கி விட்டது!" என்றுதான் எண்ணத் தோன்றியது.

ஆனால், எப்படியாவது அந்தக் காகிதங்களை ஒற்றர்களிடமிருந்து அபகரித்துக் கொண்டு சென்று, உரிய இடத்தில் சேர்க்க வேண்டும்! இல்லாவிடில்......

அதற்குள் மற்றொருவன் குரல் ஒலித்தது. "அவசரப்படாதே! இவனை வைத்துக் கொண்டு எதிரிகளின் உளவுகளை அறியலாம். பிறகு, இவனை மலை ஓநாய்களுக்கு விருந்தாக எறிந்து விடலாம்! இவனை உலுக்கி எழுப்பு!"

சந்தேகமின்றி இக் குரல், ஒற்றர் தலைவன் குரல் தான். புதர் போன்ற மீசையும் கழுகுக் கண்களும்! எவ்வளவு விகாரமாக இருக்கிறான் அவன்!

இரும்பு போன்ற இரு கரங்கள் தன்னை உலுக்குவதை உணர்ந்தான் அமர்நாத். மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். ஜீப் கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. எங்கே செல்கிறது! எங்கே! எங்கே!

"ஏய், நாயே! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்! இல்லாவிட்டால் உன் இருதயத்தைப் பிடுங்கி எடுத்து விழுங்கி விடுவேன்!" என்று கூறிப் பயங்கரமாகச் சிரித்தான் ஒற்றர் தலைவனான அந்தப் பட்டாணியன்.

அமர்நாத் சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்தான். இடது புறம் செங்குத்தான பாறை. மறுபுறம், பயங்கரமான சரிவு!

"ஏய்! இந்திய ராணுவத்தின் எத்தனை பிரிவுகள் இங்கே இருக்கின்றன! வெடி மருந்துக் கிடங்கு எங்கே இருக்கிறது!"

"தெரியாது!" என்றான் அமர்நாத்.

"சொல்லாவிட்டால் உன் கண்களைப் பிடுங்கி விடுவேன்! படை யெடுப்புச் சம்பந்தமான இத் திட்டங்களை யாருக்குக் கொண்டு செல்லுகிறாய்! இந்தச் சங்கேதக் குறிக்கு என்ன விளக்கம்!" என்று உறுமினான் ஒற்றர் தலைவன்.



"கொஞ்ச நாளாகப் பசியே இல்லாமல் இருந்ததே! இப்பொழுது இவ்வளவு ஆவலாகச் சாப்பிடுகிறதே! இரண்டு நாளாக நாய்க்கு என்ன போட்டாய்?

"பட்டினி போட்டேன்!"

அமர்நாத்தின் உள்ளம் பொங்கியது. 'பூரண் சிங் தன்னிடம் ஒப்படைத்த ரகசியக் காகிதங்கள் இவர்களிடம் கிடைத்து விட்டன. அவற்றை எப்படித் திரும்ப அடைவது!'—அமர்நாத் யோசனையில் ஆழ்ந்தான்.

ஒற்றர் தலைவன் தன் செருப்புக் காலால் அமர்நாத்தின் முகத்தில் ஒரு உதை விட்டான். பல்லில் ரத்தம் பெருகியது. உதடுகளிலும் அது வழிந்தோடியது.

அந்தப் பட்டாணியர்கள் தங்களுக்குள்ளே ஏதோ பேசத் தலைப்பட்டனர். வேறு ஏதோ மலை நாட்டு நாடோடி மொழி அது. அமர்நாத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவனைச் சுட்டிக் காட்டிப் பேசும் விதத்திலிருந்து, ஏதோ பெரும் ஆபத்து தனக்காகக் காத்திருக்கிறது என்று உணர்ந்தான்.

எப்படியாவது தப்பிவிட வேண்டும். ஆனால், ஒற்றர்கள் எப்படியும் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் இந்திய ராணுவ திட்டங்களை அறிவித்து விடுவார்களே! இனிமேல் அந்த இரகசியக் குறிப்புக்களை மட்டும் அழித்துப் பயனில்லை. இந்த ஜீப்பில் உள்ள அவ்வளவு உளவாளிகளையும் அப்படியே அழித்து நிர்மூலமாக்கி விடவேண்டும். அவன் ஒருவனால் அது எப்படி முடியும்! அவனோ தனி ஆள். நிராயுதபாணி. அவனுக்கு எதிராக ஐந்து பேர்கள். ஒருவனோ டிரைவர் ஸ்தானத்தில் அமர்ந்து, ஜீப்பை ஓட்டுகிறான். இருவர் டிரைவருக்கு அருகில் இருக்கின்றனர். அவர்கள் தலை ஆடுவதைப் பார்த்தால், தூக்கமாகத்தானிருக்க வேண்டும். மற்ற இருவரும் அவனைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் எல்லோரையும் ஒரே சமயத்தில் தீர்த்து விடவேண்டும். ஒருவன் தப்பினாலும் இந்திய ராணுவ ரகசியம் எதிரிகளை எட்டிவிடக் கூடும்.—அமர்நாத்தின் மூளை அப்பொழுது அபாரமாக வேலை செய்தது.

கடைக்கண்ணால் டிரைவர் ஆசனத்திலிருந்த ஆசாமியைப் பார்த்தான். அவனது ஒரு கையில் நீண்ட கருட்டு இருந்தது. மற்றொரு கையால் 'ஸ்டியரிங்' சக்கரத்தைப் பிடித்துக் கொண்டிருந்தான். எத்தனை நெஞ்சழுத்தம்! ஒடுங்கிய பாதை, ஒருபுறம் பாறை; மறுபுறம் பயங்கரமான பள்ளம். ஆயிரமாயிரம் அடிகளுக்குச் செங்குத்தான சரிவு.

திடீரென்று பந்துபோல் எழும்பினான் ஹவில்தார் அமர்நாத். புலிபோல் தாவி ஜீப் ஓட்டிக்கொண்டிருந்த டிரைவரின் முகத்தில் பலம் கொண்ட மட்டும் ஒரு குத்து விட்டான். எதிர்பாராத தாக்குதலினால் நிலை தடுமாறினான் அவன்.

அடுத்த விநாடி, 'ஸ்டியரிங்' சக்கரத்தை வலது புறமாக ஒரு சுற்று, இரண்டு சுற்று; மூன்று சுற்று. தன் பலம் கொண்ட மட்டும் ஒடித்தான். ஜீப் கார் 'சடக்'கென்று வலதுபுறம் திரும்பியது. அதல பாதாளத்தை நோக்கித் தலை குப்புற விழுந்தது. கீழே, கீழே இன்னும் கீழே விழுந்து கொண்டே இருந்தது. பாறைகளின் மீது விழுந்து நொறுங்கியது. அடுத்த கணமே 'குப்'பென்று தீ வேறு பற்றிக் கொண்டது.

கண் மூடிக் கண் திறப்பதற்குள் இவை யாவும் நடந்து விட்டன. ஒரு பாகிஸ்தானி ஒற்றன்கூட, உயிரோடு தப்ப முடியவில்லை.

ஹவில்தார் அமர்நாத் ராணுவ ரகசியத்தைக் காப்பாற்றி விட்டான்! தன் உயிரைக் கடமைக்காகத் தியாகம் செய்து விட்டான்!

பெட்ரோல் 'தீ'யின் ரோஜா நிற நாக்குகள் அமர்நாத்தின் உடலை அன்புடன் நக்கிக் கொடுத்தன. இந்தியாவின் இளம் வீரனைக் காணும் பொருட்டு மேகத் திரையை விலக்கிக் கொண்டு வெளியே வந்தது வெண்மதி. தியாகத்தின் சிகரமாகிய அவ்வீரனின் மனோ திடத்தைக் கண்டு பெருமிதமும் பூரிப்பும் அடைந்து கம்பீரமாக வானளாவி நின்றன இமாலயச் சிகரங்கள்.

படித்துப் பாருங்கள்!

"சோஷலிஸ்ட்"

சென்னையில் ஸ்ரீ எஸ். ஆர். சுப்பிரமணியத்தை ஆசிரியராகக் கொண்டு ஆரம்பமாகியுள்ள புதிய "சோஷலிஸ்ட்" என்ற வாரப் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்கள் வெளியாகியிருக்கின்றன. பத்திரிகையின் பெயரே அதன் கொள்கையைப் பிரகடனப் படுத்துகிறது. இரண்டாவது இதழ், புனித புத்த பிரானின் மோகன உருவப் படத்துடன் புத்த கயா அனுபந்தமாக வெளியாகியிருக்கிறது. புத்த கயா, சர்வோதய மகாநாடு பற்றிய விசேஷக் கட்டுரைகளும் திருவாங்கூர் – கொச்சி சோஷலிஸ்ட் சர்க்கார் ஆட்சியின் சிறப்பை விளக்கும் கட்டுரையும் அடங்கியிருக்கின்றன. மேலும் பல அரசியல் விஷயங்கள் இதில் இடம் பெற்றிருப்பதுடன், சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பல ஜில்லாக்களிலும் சோஷலிஸ்ட் கட்சி செய்து வரும் தொண்டுகளும் விவரிக்கப் பட்டிருக்கின்றன.

தற்சமயம் உலகத்தையும் மனித குலத்தையும் பல அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன. உலகம் உய்வதற்கு வழி "சோஷலிஸ" தத்துவம் ஒன்றே என்பதை உலக அறிஞர்கள் பலரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

அத்தகைய மேலான கொள்கையைப் பிரசாரம் செய்ய முன் வந்திருக்கும் "சோஷலிஸ்ட்" பத்திரிகையை வரவேற்கிறோம். தமிழ் நாட்டில் இதற்கு நல்ல வரவேற்பு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

வருட சந்தா ரூ. 9-0-0 தனிப்பிரதி 3 அணா.

கிடைக்குமிடம்: "சோஷலிஸ்ட்" காரியாலயம், 516, திருவல்லிக்கேணி ஹைரோட், திருவல்லிக்கேணி, சென்னை—5.

ஆறு படை வீட்டுத் திருப்புகழ் பதிகம்—கீர்த்தனை

முருகன் தன் அடியார்களை ஆதரிக்க ஆறு படை வீடுகளைக் கொண்டருளிய சிறப்பை அருணகிரி நாதர் தம் திருப்புகழில் அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார். அந்த அரிய ஆறு படை வீட்டுத் திருப்புகழ்ப் பாடல்களுடன், ஆண்டவன் பிச்சை என்னும் பக்திப் பெயர் பூண்ட மாது சிரோமணி தம் அருட் பாடல்களையும் சேர்த்துப் பிரசுரித்திருக்கிறார். ஸ்ரீ திருப்புகழ் மணி, திரு. வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, தமிழிசை மணி சி. என். ஆதிசேஷன் ஆகியவர்களின் முன்னுரைகளும் அதையே வலியுறுத்துகின்றன.

இயற்றியவர் :—ஆண்டவன் பிச்சை (ஸ்ரீமதி மரகதவல்லி அம்மாள்); பி. டி. பாணி கம்பெனி, 17, வெங்கடாசல செட்டித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5. விலை : அணா 8.

அழகு ஆடுகிறது

காதல் என்பது ஒரு பெரிய சக்தி. அது வையமுழுவதும் பரவி வானளாவி நிற்பது. அந்தச் சக்திக்குக் கட்டுப்படாத ஜீவ ஜந்துக்களே இல்லை. மனித குலம் செழிப்புடன் தழைத்து வளர்ச்சியடையக் காதல் பெரிதும் உதவியாயிருக்கிறது.

ஆனால் அதே காதல் சில சமயம் அழிவுக்கும் காரணமாகி விடுகிறது. திருமணத்துக்கு முன்பு ஒருவன் வாழ்க்கையில் காதல் இடம் பெறலாம். ஆனால் திருமணத்துக்குப் பிறகு கடமையையே பெரிதாகக் கருத வேண்டும். திருமணத்துக்குப் பின்பு வேறொரு பெண்ணிடம் உதிக்கும் காதல் பாரதப் பண்புக்குப் பெரிதும் பாதகமானது; சிறிதும் ஒவ்வாதது.

மேற்படி கருத்தை அடிப்படையாகக் கொண்டு தான் இந்தக் கதை புனையப்பட்டிருக்கிறது.

அழகி முல்லை, அழகன் மணி வாசகத்தைக் கண்டதும் அவனிடம் காதல் கொள்ளுகிறாள். அவன் ஏற்கெனவே மணமானவன். முல்லையைப் பெண் பார்க்க வந்த வாலிபன் நெடுமாறன்; முல்லைக்கும் நெடுமாறனுக்கும் மணம் நடக்கிறது. மாலை மாற்றும் போதுதான் முல்லைக்குத் தான் ஏமாற்றப்பட்டது தெரிய வருகிறது. அவள் மனம் உடைகிறாள். பிறகு ஒருநாள், தன் மனங் கவர்ந்த மணி வாசகத்துடன் வெளியேறி விடுகிறாள். இவ்விஷயம் தெரிந்ததும் அவமானம் தாங்காமல் நெடுமாறன் உயிர் விடுகிறான். மணி வாசகம் ஒருவனால் குத்தப்பட்டு இறந்துவிடுகிறான்; அவன் மனைவி வெள்ளி வீதியும் மனநோய் காரணமாக இறந்து விடுகிறாள்.

ஆசிரியர் இக் கதையைச் செவ்விய தமிழில் புனைந்திருக்கிறார். கதை சொல்லும் திறனும் நன்கு பெற்றிருக்கிறார். அழகைக் கண்ட உள்ளம் எவ்வாறு ஏங்கித் துடிக்கும் என்பதையும், அந்த ஏக்கம் தொழிற்படத் தொடங்கினால் அது எவ்வாறு அழிவில் முடியும் என்பதையும் தெளிவாக இக் கதையின் மூலம் விளக்கியிருக்கிறார்.

எழுதியவர் : கு. ராஜவேலு எம். ஏ.; பிரசுரம் : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1 விலை : ரூ. 3—0—0.



இரண்டாம் ஆண்டு விழா!

★

சென்னை நகரில் சென்ற இரண்டு ஆண்டுகளாகச் சிறந்த முறையில் தேசிய, சமூக, கலாசாரத் தொண்டுகள் ஆற்றிவரும் தேசிய வாலிபர் காங்கிரஸின் இரண்டாவது ஆண்டு விழா மேமீ 2உ ஸ்ரீ கச்சாலீசுவரர் கோயில் சந்நிதியில் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ டி. செங்கல்வராயன் அவர்கள் பேசுவதையும், விழாவுக்கு விஜயம் செய்திருந்த மகாசபையில் ஒரு பகுதியையும், விழாவில் இன்னிசைக் கச்சேரி செய்து பல தேசிய கீதங்களைப் பாடி மகிழ்வித்த ஸ்ரீமதி சாவித்திரி கணேசன் அவர்களையும் படத்தில் காணலாம்.



பவுண்டன் பேனா, இங்க் உலகில்
புராதனப்பெருமை வாய்ந்த பெயர்
வாட்டர்மன்ஸ்
இந்தியாவில் இப்பொழுது தாராளமாக
கிடைக்கிறது
வாட்டர்மன்ஸ்
இங்க்
டி. டி. கிருஷ்ணமாச்சாரி & கம்பெனி

நம்ப முடியுமா!

எஸ்.வி.எஸ்.





என் அருமை லலிதா,

உன்னிடமிருந்து பல கடிதங்கள் வந்து விட்டன. என் தமக்கை சாரதா எப்படிக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தாள் என்று கேட்டு வேறு பலதடவை எழுதி விட்டாய். அந்த விஷயம் பற்றி நீ மட்டுமா எழுதினாய்? எத்தனையோ பேரிடமிருந்து கடிதங்கள் வந்த வண்ணமாக இருக்கின்றன. எல்லோருக்கும் இவ் விஷயத்தைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் இருப்பது நியாயந்தான். ஆனால் எத்தனை பேருக்கு என்று ஒரே விஷயத்தைத் திருப்பித் திருப்பி எழுதுவது? இந்தக் கஷ்டத்தை உத்தேசித்து ஒரு யோசனை செய்து வைத்திருந்தேன். அதாவது அக்காவின் கல்யாணத்தைப் பற்றி "சாரதாவின் கல்யாணம்" என்று மகுடமிட்டு ஒரு கதையாக எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பி விடுவோம். அது பிரசுரமாகி விட்டால், அந்தப் பிரதிகளில் சிலவற்றை வாங்கி நானே அக்காவின் கல்யாணத்தைப் பற்றிக் கேட்பவர்களுக்கெல்லாம் அனுப்பி விடலாம் என்று யோசனை செய்து வைத்திருந்தேன். ஆனால் அந்த யோசனையை இன்னும் கொஞ்சம் யோசனை செய்ததின் விளைவாகக் கைவிட்டு விட வேண்டியதாகி விட்டது.

ஆம், அதைப் பத்திரிகை ஆசிரியர்கள் "உண்மைக்குப் பொருத்தமாக இல்லை" என்று திருப்பி அனுப்பி விட்டால் என்ன செய்வது? இயற்கையில் சற்றும் நம்ப முடியாத அதிசய சம்பவங்கள் நடந்து விடுகின்றன. ஆனால் கதையாக எழுதும் போது நம்பத் தகுந்ததாக இருந்தால்தான் பத்திரிகை ஆசிரியர்கள் போடச் சம்மதிக்கிறார்கள். ஆனால் அக்காவின் மனமாற்றத்தை எப்படி நம்பத் தகுந்த முறையில் எழுதுவது என்பதே எனக்கு விளங்க வில்லை. அது இயற்கை செய்த அதிசயம் என்றுதான் எனக்குச் சொல்லத் தெரிகிறது! அதற்குமேல் ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.

ஆனால் அருமைத் தோழியாகிய நீ என் வார்த்தையில் நம்பிக்கை கொள்வாய்; என் சுபாவமும் உனக்குத் தெரியும், அக்காவையும் உனக்குத் தெரியும். அதனால் நடந்த விஷயங்களை அப்படி அப்படியே சொன்னால் உனக்குப் புரியும். அந்தத் தைரியத்தின் பேரில்தான் எழுதுகிறேன். அத்துடன் நான் நேரில் பார்த்து அனுபவித்த இந்த அதிசயத்தைப் பற்றி யாரிடமாகிலும் சொன்னால் தான் எனக்கே மன நிம்மதி ஏற்படும் போலிருக்கிறது. இதற்கு என்ன செய்வது?

உனக்கு அந்தப் பழைய கதையெல்லாம் ஞாபகமிருக்கும் என்று நினைக்கிறேன். அது தான், நாங்கள் கிராமத்திலிருந்த போது அக்கா அத்தான்மீது உயிரையே வைத்திருந்தாள் என்பது உனக்குத் தெரியும். அத்தான் தப்பித் தவறி வீட்டுக்கு வந்து விட்டால் அவளே, தன் கையால் காப்பி போட்டுக் கொண்டு போய்க் கொடுப்பாள். அத்தானைச் சாப்பிட இருக்கச் சொல்லி வற்புறுத்தும் படி அம்மாவைத் தொந்தரவு செய்வாள். இப்படி இவள் படுத்தினபாடு கொஞ்ச நஞ்சமல்ல. இந்த அன்புக்குச் சரியான தண்டனையாகத்தான் 'அவளைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான் அத்தான். பாவம், அக்கா! அத்தான் இவ்வளவு ஈவு இரக்கமில்லாமல் இருப்பான் என்று சற்றும் எதிர் பார்க்க வில்லை. அப்படியே அயர்ந்து போனாள். திக்பிரமை பிடித்தவள் போல் ஆகிவிட்டாள். யார் யாரோ என்ன என்னவெல்லாமோ சொல்லித் தேறுதல் கூறிப் பார்த்தார்கள். அந்த அதிர்ச்சியிலிருந்து அவளால் எழவே முடியவில்லை. அம்மாவும் அப்பாவும் அவளுக்குச் சீக்கிரம் வேறொரு பையனைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைப்பது என்று முடிவு செய்து பல வரன்களைப் பார்த்தார்கள். தான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை என்று அக்கா கண்டிப்பாகக் கூறி விட்டாள்.

இதுமட்டுமல்ல; யார் வந்தாலும் எரிந்து விழுவதும் கடுகடுப்பாகப் பேசுவதுமாக இருந்து வந்தாள். அத்தான் கைவிட்டதின் காரணமாக, அவள் குணமே மாறிவிட்டது.

இதைக் கண்டு அம்மாவும் அப்பாவும் ரொம்பவும் வேதனைப் பட்டார்கள்; சாரதாவின் நிலையைக் கண்டு மனம் புழுங்கினார்கள். உள்ளத்தை அரித்த நோய் உடலையும் அரித்தது. இரண்டு ஆண்டுகளில் அவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் போய் விட்டார்கள்.



ஆனாலும் சாரதாவின் மனம் தளரவில்லை. அவளுக்கு ஆண் வர்க்கத்தினிடமே ஒரு தீராத வெறுப்பு ஏற்பட்டு விட்டிருந்தது. அப்பா, அம்மா கூட அடிக்கடி "சாரதா, நீ கலியாணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமுமாக வாழ வேண்டும்" என்று சொல்லுவார்கள். "நீ கல்யாணம் செய்து கொள்ளுகிறேன் என ஒரு வார்த்தைசொல், போதும். உனக்கு நல்ல வரனைப் பார்த்து ஏற்பாடு செய்கிறோம்" என்று ஊரார் வேறு சொல்லுவார்கள். "எனக்குக் கல்யாணமும் வேண்டாம்; கார்த்திகையும் வேண்டாம். நீங்கள் பாட்டுக்கு உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள்" என்று சொல்லி விடுவாள் சாரதா.

இந்தச் சமயம் நான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை தேறி வைத்தேன். எனக்கு மேற்கொண்டு படிக்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது. இதுவே நல்ல சாக்கு என்று ஊரை விட்டுப் புறப்பட்டுச் சென்னைக்கு வந்து விட்டாள் என்னுடன் அக்கா சாரதா.

சென்னையில் அத்தை முறையில் ஒரு ஏழைக் கிழவி எங்கள் உறவிலிருந்தாள். அவளைத் துணையாக வைத்துக் கொண்டு நாங்கள் தனியாகக் குடித்தனம் நடத்தவே ஆரம்பித்து விட்டோம்.

வாழ்க்கையில் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டு மனம் எதிலும் பற்றுக் கொள்ளவில்லை என்றால் சொல்லி முடியாத துணிச்சலும் ஏற்பட்டுவிடும்போலும். ஏதோ ஒப்புக்குத்தான் கிழவி துணையே தவிர எல்லாக் காரியங்களையும் திறம்பட நிர்வகிக்கும் திறமை யிருந்தது. கடை, கண்ணி, ஷாப், மார்க்கெட் எங்கும் அக்காவே தன்னந்தனியாகப் போய்க் காரியத்தை முடித்துக் கொண்டு வந்து விடுவாள். அக்காவின் இந்தத் தைரியத்தைக் கண்டு முதலில் எனக்கே வியப்பாக இருந்தது.

இண்டர்மீடியட் பரீட்சையில் நல்ல படியாகத் தேறியதின் பலனாக எனக்கு வைத்தியக் கல்லூரியில் சேர முடிந்தது. வைத்தியக் கல்லூரியில் ஆண்களும், பெண்களும், மாணவிகளும், மாணவர்களும் சர்வ சகஜமாகப் பேசிப் பழகுவோம். எங்கள் வைத்தியப் படிப்பு அத்தகைய படிப்பு.

முதலாண்டிலேயே, அதாவது வைத்தியக் கல்லூரிப் படிப்பின் முதலாண்டிலேயே எனக்கு ராம்குமார் என்றொரு நண்பர் வாய்த்தார். அவருடன் பேசிப் பழகியது சற்று அதிகமாகவே, என் வகுப்பு மாணவர்களும் மாணவிகளும் எங்கள் இருவருக்கும் காதல் முடிச்சுப் போட்டுக் கேலியாகப் பேச ஆரம்பித்தார்கள். இதை நாங்கள் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. "பேசினால் பேசி விட்டுப் போகட்டுமே; அவர்கள் வாய்தானே வலிக்கப் போகிறது!" என்று சும்மா இருந்து வந்தோம்.

இந்த விஷயம் அக்காவுக்குத் தெரியாமல் இல்லை. ஆம், சர்வ சகஜமாக ராம்குமார் தான் எங்கள் வீட்டுக்கு வருவாரே! அதுமட்டுமின்றி கல்லூரியிலிருந்து மாலை வீட்டுக்குத் திரும்பும் போதெல்லாம் பெரும்பாலான நாட்கள் ராம்குமார் என்னை வீட்டு வரைக்கும் கொண்டு வந்து விட்டு விட்டுத் தான் திரும்புவார்.

இப்படி அவர் செய்து வந்தது அக்காவுக்குப் பிடிக்கவில்லை. ஜாடை மாடையாகத் தனக்கு அவர் செய்கை பிடிக்கவில்லை என்பதைத் தெரிவித்தாள். என்னையும் எச்சரித்தாள். "யாரை நம்பினாலும் நம்பலாம். ஆண் இனத்தை மட்டும் நம்பவே கூடாது. அவர்கள் நம்பிக்கைத் துரோகத்தின் உருவம். பசப்பு வார்த்தைகள் பேசி மயக்கி நம்மை ஏமாற்றி விட்டுப் போய் விடுவார்கள். அதனால் ஆண் வர்க்கத்தின் கூட்டுறவு வைத்துக் கொள்ளவே கூடாது. நீ ராம்குமாருடன் நட்பு பூண்டிருப்பது எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை..." என்பாள்.

"ராம்குமார் ரொம்ப நல்லவர், அக்கா!" என்று கூறுவேன்.

"எவ்வளவு நல்லவர் என்பது இப்பொழுது என்னடீ தெரியும்? சமயம் வரும் போது, காலை வாரி விடும் போதல்லவா தெரியும்—அவருடைய நல்ல குணமும் பொல்லாத குணமும்..." என்பாள்.

அடி மேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்று சொல்லுவார்கள். எனக்கும் மனத்தில் ஆண் வர்க்கத்தினரிடம் கொஞ்சம் கொஞ்சம் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. ஆனால் ராம்குமாரை மட்டும் அந்த விதியிலிருந்து விலக்கப் பட்டவராகவே கருதி வந்தேன்.

ராம்குமார் நல்ல பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர், அவருக்கு ஒரு அழகிய தங்கை. அவர் அப்பாவும் அம்மாவும் நல்ல சுபாவம் படைத்தவர்கள். மொத்தத்தில் அவர்கள் குடும்பமே மிக அழகான குடும்பம். என்னைக் கண்டால் அவர்கள் வீட்டில் எல்லோருக்கும் ரொம்பப் பிடிக்கும். “அதிலும் ராம்குமாரின் தங்கைக்கு நான் என்றால் உயிர்தான். ‘அக்கா! அக்கா!’ என்று என்னை அழைத்து எவ்வளவு ஒட்டுதலாக இருப்பாள், தெரியுமா? இந்தப் புதுத் தங்கையைப் பார்ப்பதற்காகவென்றே விடுமுறை நாள் தவறாமல் நான் ராம்குமார் வீட்டுக்குப் போய் வருவேன்.

இப்படி இரண்டு ஆண்டுகள் கடந்து மூன்றாவது ஆண்டு நடந்து கொண்டிருந்தது.

அப்போது ஒரு சின்னஞ் சிறு சம்பவம் நிகழ்ந்தது.

ராம்குமார் என் வீட்டுக்கு வருவதும், ராம்குமார் வீட்டுக்கு நான் போவதும் சகஜமாக இருந்தது. அக்காவுக்குத் தெரியாமலில்லை. ஆயினும் வயது வந்த பெண்ணை, பொறுப்புணர்ந்த பெண்ணை எவ்வளவு தூரம்தான் கட்டுப்படுத்த முடியும் என்று சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இருந்தாள்.

அன்று விடுமுறை நாள். மத்தியானம் நான் வெளியிலிருந்து அப்பொழுதுதான் வீட்டுக்குள் நுழைந்தேன். நுழைந்ததும் நுழையாததுமாக, “அக்கா, என்னைத் தேடிக் கொண்டு யாராகிலும் வந்தார்களா?” என்று கேட்டேன்.

ஆம், இப்பொழுதெல்லாம் கல்லூரியைச் சேர்ந்த பல மாணவிகளும், மாணவர்களும் புஸ்தகங்கள் பரிவர்த்தனை செய்து கொள்ளவும் எழுதிய நோட்டுப் புஸ்தகங்களை வாங்கிச் செல்லவும் வருவதுண்டு. அந்த மாதிரி யாராகிலும் வந்திருந்தார்களோ என்று நினைத்துத்தான் கேட்டேன்.

அக்கா, “அவன்தான் வந்திருந்தான்!” என்று மிக அலட்சியமாகப் பதில் சொன்னாள்.

அந்த அலட்சியபாவம் ஏனோ அன்று எனக்குப் பிடிக்கவில்லை. “அவன் என்றால் யார் அக்கா? அவனுக்குப் பேர் ஊர் கிடையாதா?” என்று கேட்டேன்.

“பேர் வேறு சொல்ல வேண்டுமோ? அவன்தான் ராம்குமார். அவனைத் தவிர வேறு யார் இங்கே வருவார்கள்”! என்றாள் அக்கா.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

“ராம்குமாரா வந்திருந்தார்?” என்று ஆச்சரிய மிகுதியால் கேட்டேன்.

“இதில் என்னடி அதிசயமிருக்கிறது? அவனேதான் வந்திருந்தான்!” என்றாள் அக்கா சாரதா.

அடுத்தாற் போல் ஏதோ சொல்ல வாய் எடுத்தேன். ஆனால் சொல்லவில்லை. வாய் வார்த்தை வாயிலேயே நின்று விட்டது; என்ன முயன்றும் வெளிவரவில்லை.


* * *

மறுநாள் கல்லூரிக்குப் போனவுடன் முதல் காரியமாக ராம்குமாரைச் சந்தித்தேன். அவர் மேல் எனக்கு இருந்த அத்தனை கோபத்தையும் கொட்டினேன்.

ராம்குமார் வெகு நிதானமாக, “லதா! என்ன இது! ஏன் இப்படிக் கோபித்துக் கொள்கிறாய்? என்ன நடந்து விட்டது?” என்று கேட்டார்.

“இன்னும் என்ன நடக்க வேண்டும்? நேற்றுக் காலை எட்டு மணிக்கு வந்தவள் பன்னிரண்டு மணி வரை உங்கள் வீட்டிலேயே உங்கள் தங்கையுடனும் தாயாருடனும் பேசிக் கொண்டிருந்திருக்கிறேன். அப்படியிருக்க அந்தச் சமயம் பார்த்து நீங்கள் என்னைத் தேடிக் கொண்டு எங்கள் வீட்டுக்குப் போனீர்களாமே! இது என்ன வேலை? பொதுவாக வெளியில் போனால், நான் என் அக்காவினிடம் இன்ன இடத்துக்கு இன்ன காரியத்துக்காகப் போகிறேன் என்று சொல்லிக் கொள்ளாமல் போவதில்லை. அம்மாதிரி நேற்றும் உங்கள் வீட்டுக்குப் போவதாகச் சொல்லிப் புறப்பட்டு வந்தேன். அப்படியிருக்கும்போது நீங்கள் போய் என்னை விசாரித்தீர்களானால் அக்கா என்னைப் பற்றி என்ன நினைப்பாள்? எவ்வளவு தவறாக என்னைப் பற்றி எண்ண இடம் ஏற்





தக்ஷிண ரயில்வேயைச் சேர்ந்த ஸ்ரீ கே. வி. சீனிவாசனின் செல்வக் குமாரி வனஜாவுக்கும், இந்திய ரயில்வே நிலக்கரி இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீ சக்கரவர்த்தி ராமசாமியின் செல்வக் குமாரன் பட்டுசாமிக்கும், ஏப்ரல்மீ 23உ யன்று தாம்பரம், புரொபஸர் காலனியில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் பிரமுகர்களும் விஜயம் செய்து மணமக்களுக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

வாழ்க, மணமக்கள் !

பட்டிருக்கும்? நேற்று ஏதோ தற்செயலாக அக்காவினிடம் உங்கள் வீட்டுக்குப் போவதாகச் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டேன். அதனால் நேற்று நீங்கள் வந்து விசாரித்து விட்டுப் போனதால் மாபெருந் தீம்பு ஒன்றும் ஏற்பட்டு விடாமல் தப்பினேன். ஆயினும் நீங்கள் செய்த காரியத்தை நினைக்க நினைக்க நெஞ்சம் ஆற வில்லை. அக்கா சொல்வது வாஸ்தவமாகவே போய் விட்டது. 'யாரை நம்பினாலும் நம்பலாம், ஆடவர்களை நம்பக் கூடாது; அவர்களைப் போன்ற நம்பிக்கைத்துரோகிகள் இடையாது' என்பாள். அது இன்று முற்றிலும் உண்மை என்று நீங்களே நிரூபித்து விட்டீர்கள். போதும் உங்கள் சிநேகம். இனி நீங்கள் யாரோ, நான் யாரோ—குட் பை" என்று கோபத்தில் பொறிந்து தள்ளி விட்டு வந்து விட்டேன்.

ராம் குமார் சிலை போல் நின்றிருந்தார். அப்படி எத்தனை நாழிகை நின்றிருந்தாரோ, எனக்குத் தெரியாது!

அதற்குப் பிறகு நான் ராம் குமாரைச் சந்திக்கவில்லை. ஏன், இரண்டு நாட்கள் அவரைச் சந்திக்காமலே கழித்து விட்டேன். இரண்டு நாள் கழித்து அவருடைய தங்கை அவரிடமிருந்து எனக்கு ஒரு சிறு கடிதம் கொண்டு வந்திருந்தாள்.

"ஸ்ரீமதி லதாவுக்கு,

தவறு நேர்ந்து விட்டது. தயவு செய்து மன்னிக்கவும். இப்புடிக்கு, ராம்குமார்" என்று எழுதியிருந்தது. அதே கடிதத்தில் "நான் யார் மன்னிப்பதற்கு?" என்று பதில் எழுதியனுப்பி விட்டேன்.

இப்படி ஒரு மாதகாலம் கடிதங்கள் பரிமாறப்பட்டு வந்தன. ராம் குமாரின் தங்கை அவற்றை ஏற்று வருவாள்.

ஒருநாள் அக்கா, "என்னடீ இது? இப்பொழுதெல்லாம் உன் சிநேகிதன் ராம் குமாரைக் காணோம்!" என்று கேட்டாள்.

"அவரைப் பற்றி எதற்கு அக்கா பேசுகிறாய்? நீதான் சொல்லியிருக்கிறாயே, ஆண்களே நம்பத் தகாதவர்கள் என்று. அந்தக் கோஷ்டியில் அவரையும் சேர்த்துவிட வேண்டியதுதான்!" என்றேன்.

"சீ. சீ. அவன் ரொம்பவும் நல்லவன். ஆண்களில் தப்பிப் பிறந்தவன் என்று சொல்ல வேண்டும். எத்தனை தடவை அவன்மீது எரிந்து விழுந்திருப்பேன், தெரியுமா? அத்தனை தடவையும் கொஞ்சமும் முகத்தைச் சுளித்துக் கொள்ளாமல் கேட்டுக் கொண்டு போனான் அவன் ரொம்ப நல்ல மனுஷ்யன்!" என்றாள் அக்கா.

எனக்கு ஏற்பட்ட ஆச்சரியம் கொஞ்ச நஞ்சமல்ல. அக்காவா இப்படிப் பேசுகிறாள்? ஆண் வர்க்கத்தைக் கண்டாலே ஆத்திரப்படும் அக்கா இப்படித் திடுதிப்பென்று மாறிப் போன காரணம் என்ன? ஒரு வேளை...சேச்சே! அப்படியெல்லாம் இருக்கச் சிறிதும் நியாயம் இல்லை. இருந்தாலும் அவள் இப்படி மனம் மாறிப் பேசுவது அதிசயத்திலும் அதிசயந்தான். இப்படி எண்ணிய நான் வாய் விட்டே கேட்டு விட்டேன். "ஏன். அக்கா! நீயா இப்படிப் பேசுகிறாய்? என்னால் நம்ப முடியவில்லையே!" என்றேன்.


இந்தச் சமயம் ராம் குமாரின் தங்கை வந்து சேர்ந்தாள். அவள் கையில் ஒரு உறை வைத்திருந்தாள். அதில் என் விலாச மிட்டிருந்தது. அதைப் பிரித்துப் படித்தேன். இப்பொழுது எனக்கு உண்டான அதிசயம் வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவுக்குப் போய்விட்டது.

ஸ்ரீமதி லதாவுக்கு,

பல முறை நான் மன்றாடிக் கேட்டுக் கொண்டும், நீ என் தவறை மன்னிப்பதாகக் காணோம். இந்த நிலை கொஞ்சங்கூடப் பொறுக்கக் கூடியதாக இல்லை. அதனால் ஒருகால் உண்மையை உடைத்துச் சொல்லி விட்டால், நன்மை விளைந்தாலும் விளையட்டும், கெடுதல் விளைந்தாலும் விளையட்டும் என்று துணிந்து கூற முன் வந்து விட்டேன்.

நீ இல்லாத போது உன்னை அன்று ஒரு நாள்தான் நான் விசாரிப்பதாக நீ நினைத்துக் கொண்டிருந்தால், உடனே அந்த எண்ணத்தை உன் உள்ளத்திலிருந்து முதலில் அகற்றி விடு. நீ இல்லாத போது, நீ வீட்டிலிருக்க மாட்டாய் என்று நிச்சயமாகத்

உதவியாக இருக்கும்!



தெரிந்து கொண்டு. உன்னை விசாரிக்க உன் வீட்டுக்கு எத்தனையோ தடவை வந்திருக்கிறேன். உன்னை விசாரிப்பேனே ஒழிய, நோக்கமெல்லாம் ஒரு முறை உன் அக்காவைப் பார்க்க வேண்டும் என்பதுதான். நீ இல்லை என்பதை முகத்தைக் கடு கடு என்று வைத்துக் கொண்டு உன் அக்கா சொல்லும் போது, அவள் வதனம் பெறும் ஒளியையும் அழகையும் கண்டு ரஸித்திருக்கிறேன். ஆம், லதா! நீ உன் அக்காவுக்கு ஆண் வர்க்கத்தைக் கண்டால் கட்டோடு பிடிக்காது என்று என்றைக்குக் கூறினையோ, அன்றே என் உள்ளம் உன் தமக்கையிடம் சென்று விட்டது. இவ்வளவு திட வைராக்கியம் உள்ள பெண்ணைப் பார்க்க வேண்டும் என்று தோன்றி விட்டது. அது நாளடைவில் காதலாகவே மாறி விட்டது. ஆம், லதா, உன் தமக்கையின் மீது அளவு கடந்த காதலை கொண்டிருக்கிறேன். என்ன நினைத்துக் கொண்டாலும் சரி, இனி இதைப் பற்றிச் சொல்லாமல் இருக்கக்கூடாது என்று சொல்லி விட்டேன். இந்த என் காதல் உணர்ச்சியின் காரணமாக, உன் அக்காவை ஒரு முறை காண வேண்டும் என்ற ஆசை காரணமாகவே, அன்று நீ எங்கள் வீட்டிலிருந்தபோது உங்கள் வீட்டுக்குச் சென்றேன். என் சுய உணர்ச்சி உன் நிலையைப் பற்றிச் சிந்திக்க அவகாசமோ, மனநிலையோ அளிக்க வில்லை. தவறு செய்து விட்டேன். என்னை மன்னித்து விடு. பழையபடியே பழகுவோம். என்னால் உன் தமக்கையின் கடுகடுத்த முகத்தின் அழகைக் காணாமல் இருக்க முடிய வில்லை.

இப்படிக்கு,
ராம்குமார்.

இதை அக்காவினிடம் கொடுத்தேன். கோபம் கொள்வாளோ, ராம்குமாரின் துணிச்சலைக் கண்டு திட்டுவாளோ என்று பயந்தேன். ஆனால் கடிதத்தைப் படித்து விட்டுச் சிரித்தாள். 'காதலாவது கத்திரிக்காயாவது!' என்று கூறினாள்.

நாட்கள் சென்றன. நானும் ராம்குமாரும் பழையபடி பழக ஆரம்பித்தோம். ஆனால் அக்கா பழையபடி பழகவில்லை. ராம் குமார் வீட்டுக்கு வந்தால் அன்புடன் உபசரிக்க ஆரம்பித்தாள்.


எதிர் நீச்சல் போட்டுச் சந்தித்த இவர்கள் இப்பொழுது ஒருவருடன் ஒருவர் இணைந்து பழகலாயினர். ராம்குமாரின் பெற்றோர்களிடம், ராம் குமாரின் மன நிலையைக்கூறி ராம்குமாருக்கும் சாரதாவுக்கும் மணம் முடித்து வைத்தேன்.

ராம்குமாரின் தாயாருக்கு மட்டும் நான் அவர்கள் வீட்டு மருமகளாக வரவில்லையே என்று சற்றுக் குறைதான். அதற்கு நான் என்ன செய்வது!

'கல்யாணமே வேண்டாம்' என்றவள் இம் மட்டுக்கும் கல்யாணம் செய்து கொள்ள முன் வந்தாளே, இதுவே எனக்குத் திருப்தி யளிக்கிறது.

இப்படிக்கு,
ஹேமலதா.


துணியைப் பற்றிய பேச்சுகளில்
மதிப்பு உடையதாகக் கருதப்படுபவை
பின்னி ஜவுளிகளே!



மனச்சுமை

டி. எஸ். கோதண்டராமன்

☆

சுவாமி தரிசனத்துக்காகச் சென்ற இடத்தில்தான் எனக்கு அந்த அதிர்ச்சி ஏற்பட்டது. மூன்று ஆண்டுகளுக்குப் பின் சுசீலாவைக் குணசேகரபுரம் கோவிலில் சந்தித்தபோது நான் திடுக்கிட்டேன்.

ஒரு முறை பிரகாரத்தில் வலம் வந்ததும் எனக்கு ஏனோ அசதியாக இருந்தது. சன்னதியின் எதிரே உட்கார்ந்து விட்டேன். "நீங்கள் இங்கேயே உட்கார்ந்து கொண்டிருங்கள். நான் இன்னும் இரண்டு பிரதட்சிணங்கள் செய்து விட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு என் மனைவி மீனு நகர்ந்து விட்டாள். அவள் அப்பால் சென்றதும், சுசிலா கோவிலுக்குள் நுழைவதைப் பார்த்தேன். ஒரு ஆடவனை - அவன் அவளுடைய கணவனாகத்தான் இருக்க வேண்டும். கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்தாள். சுசிலாவும் அவள் கணவனும் இருந்த கோலம் என்னைக் கலக்கியது.

சுசீலாவின் இளமை எங்கோ மறைந்து விட்டிருந்தது போல மிருதுத் தன்மையும் ஒளியும் பொருந்திய அவள் முகத்தில், ஒரே சோகத்தின் ரேகைகள் படிந்திருந்தன. அவளைப் பார்த்ததும், கல்யாணமாகி இரண்டு மூன்று ஆண்டுகளே ஆகியிருக்கும் இளம் பெண்ணாகத் தோன்றவில்லை. ஐந்தாறு குழந்தைகளுடனும் அரவணைப்பு இல்லாத கணவனுடனும் பல ஆண்டுகளைக் கழித்து விட்ட அம்மாளாகத்தான் காட்சியளித்தாள்.

அவள் கணவனுடைய ஆடையின் அலங்கோலமும், பரட்டைத் தலையும், லட்சியமில்லாது சுழலும் கண்களும் என்னை மிகவும் வேதனைப் படுத்தின.

சுசிலா ஏன், எப்படி இங்கே வந்தாள்? அவளைக் கேட்கலாமா? அவள் என்னுடன் பேச மறுத்து விட்டால்...? பேச மறுத்து விட்டால்கூடப் பாதகமில்லை. என்னுடைய பழைய துரோகத்தை எண்ணி, அடங்கியிருக்கும் அவள் மன எரிமலை கொந்தளித்து வார்த்தை நெருப்புகளை அள்ளி வீச ஆரம்பித்து விட்டால்......? இந்தச் சம்பவம் மீனுவின் எதிரிலேயே நடந்து விட்டாலோ, வாழ்க்கை முழுவதும் அமைதியையும் ஆனந்தத்தையும் இழந்து விடுவேனே?

"இதோ, இப்படியே வாங்கோ" என்று கூப்பிட்ட படியே, சுவாமி சன்னதியை நோக்கி, தன் கணவனை நடத்திச் சென்று கொண்டிருந்தாள் சுசீலா. திருதிரு வென்று விழித்தபடியே அவள் கணவனும் தட்டுத் தடுமாறி நடந்து கொண்டிருந்தான்.

சுசீலா என்னைக் கவனிக்கவே யில்லை. கணவனைச் சன்னதியில் உட்கார வைத்து விட்டு, முகத்தில் புன்னகையைத் தவழ விட்டு, நின்றுகொண் டிருக்கும் சீனிவாசப் பெருமானைச் சேவித்தாள். நான் அவளையே பார்த்தேன். பொலிவிழந்த சுசீலா மறைந்து பழைய சுசீலா என் மன அரங்கிலே வந்தாள்.

கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு, கோடை விடுமுறையைக் கழிப்பதற்காக அன்றுதான் கிராமத்துக்கு வந்திருந்தேன். அம்மா அன்புடன் சமைத்துப் போட்ட அறுசுவை உண்டியை அருந்திவிட்டு, இரவில் ரயிலில் வந்த களைப்புத் தீர, நல்ல உறக்கம்

போட்டேன். சரியாக மூன்று மணிக்கு அம்மா எழுப்பினாள். புழக்கடைப் புறம் சென்று முகத்தை அலம்பிக் கொண்டு வரலாம் என்று சென்ற நான், கொல்லைக் கிணற்றில் தண்ணீர் இழுத்துக்கொண்டிருந்த நங்கையைக் கண்டு திகைத்து நின்றேன். 'இந்தப் பெண் யார்? எவர் வீட்டுக்கு வந்திருக்கிறாள்?' என்று நான் சிந்தித்துக்கொண்டிருக்கும்போதே, என்னைக் கவனித்துவிட்ட அவளும், முகத்தில் நாணப் புன்னகை மலர, பரபரப்புடன் குடத்தை இடுப்பில் வைத்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்குள் மறைந்தாள்!

ஒரு கணம் அவள் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தேன். கிராமத்தின் வளமையும் நகரத்தின் நாகரிகமும் சேர்ந்து அவளை அலங்கரித்துக் கொண்டிருந்தன. குடத்தை இடுப்பில் தாங்கிக்கொண்டு அவள் நடந்த நடை என்னைக் கிறுகிறுக்கச் செய்தது.

கிணற்றில் இருந்து தண்ணீர் இழுத்து முகத்தை அலம்பிக் கொண்டு உள்ளே வந்தேன். சுடச்சுட வெங்காய பஜ்ஜியைத் தட்டில் வைத்து என்னிடம் நீட்டினாள் அம்மா. எனக்கு மிகவும் பிடித்தமான சிற்றுண்டியைச் செய்திருந்த திருப்தி அவள் முகத்தில் நன்றாகப் படர்ந்திருந்தது!

தட்டிலிருந்த பஜ்ஜி காலியாவதற்குள்ளாக, சந்தனக் குழம்பு போன்ற காப்பியைக் கொண்டு வந்தாள். காப்பியை ஆற்றி, கொஞ்சம் கொஞ்சமாக நான் சாப்பிட்டு முடியும் வரை அருகேயே நின்று கொண்டிருந்தாள் அம்மா. என் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள இதுதான் நல்ல சமயமென்று எனக்குத் தோன்றிற்று.

காலியான டம்ளரை அம்மாவிடம் நீட்டியபடியே, "கொல்லைக் கிணற்றில் யாரோ ஒரு பெண் தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்தாளே, யார் அது?" என்று கேட்டேன்.

"சுசீலாவாக இருக்கும். அடுத்த வீட்டுப் பாட்டியின் பேத்தி. பள்ளிக்கூடம் லீவு விட்டதும் இங்கே வந்திருக்கிறாள்."

"அந்தப் பெண் படித்துக் கொண்டிருக்கிறாளா?" என்று கேட்டேன்.

"ஆமாம். ஐந்தாவது பாரம் பரீட்சை எழுதி யிருக்கிறதாம். நல்ல பெண்......"


அம்மா போய் விட்டாள். என் அறைக்குள் நுழைந்து ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டினேன். மணி ஐந்தானதும் கோடி வீட்டுச் சேதுராமன் வந்தான். சட்டையைப் போட்டுக் கொண்டு புறப்பட்டேன்.

காலில் செருப்பை மாட்டிக் கொள்ளும் போது, உள்ளத்தில் ஏதோ ஒரு அழைப்பு. 'இரு வரேன்' என்று அவனிடம் கூறிவிட்டுக் கொல்லைப்புறம் சென்றேன். அவள்-சுசீலா-வேலியில் படர்ந்திருந்த கொடியில் பூத்திருந்த முல்லை மலர்களிடையே, கொடி போல நின்று கொண்டிருந்தாள். கைகள், பரபரப்புடன் மலர்களைப் பறித்துக் கொண்டிருந்தன. கம்மென்று வாசனையைப் பரப்பிக் கொண்டு மலர்ந்திருக்கும் முல்லைக் கொடியிடையே அவளைக் கண்டபோது என் உள்ளம் கிளுகிளுத்தது. வெட்டும் ஒரு பார்வையால் என் இதயத்தைச் சுண்டி விட்டு, மானைப்போல வீட்டினுள்ளே ஓடிவிட்டாள்!

** ** **

நான் கிராமத்துக்கு வந்து நான்கு நாட்களாகி விட்டன. இதற்குள் சுசீலாவைத் தேடி என் கண்கள் ஆயிரம் முறைகள் அலைந்து விட்டன. தினத்துக்கு நூறு தடவைகளாவது கொல்லைப்புறம் சென்றேன். ஏதாவது காரியத்தை வைத்துக் கொண்டு சுசீலாவும் அங்கே வருவாள்!

அம்மாவுக்கு, ஒரு நாள், திடீரென்று ஜுரம் வந்து விட்டது. இது மாதிரி மாதத்துக்கு ஒருமுறை இப்போதெல்லாம் அவ



ளுக்கு வருகிறதாம். ஆனால், நான் வந்திருந்த சமயம் பார்த்து உடம்புக்கு வந்து விட்டதே என்று அம்மாவுக்குச் சொல்ல முடியாத வருத்தம். அப்பா வேறு ஊரில் இல்லை. விவசாய மகாநாடு ஒன்றுக்கு, மிராசுதாரான அவருக்கும் அழைப்பு வந்திருந்தது. அவர் மகாநாட்டிலிருந்து திரும்பி வர நான்கு நாட்களாவது ஆகும்.

சுசீலா தான் உதவிக்கு வந்தாள். அம்மாவுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்தாள். கஷாயம் போட்டுக் கொடுத்தாள். எனக்குச் சமையல் செய்து வைத்து விட்டுப் போய் விட்டாள். நானே எனக்குப் பரிமாறிக் கொண்டேன். சாம்பாரை எடுத்துத் தட்டில் விட்டுக்

கொள்ளும் போது கை தடுக்கிச் சாம்பார் முழுவதும் கொட்டி விட்டது! அளவு தெரியாமல் சாதத்தையும் அதிகம் போட்டுக் கொண்டு விட்டு அப்படியே தட்டில் மீதம் வைத்து விட்டு எழுந்தேன்!

சமையலறையைச் சுத்தம் செய்யப் போன சுசிலா, இந்த அலங்காரத்தை, சுவை குன்றாமல் அம்மாவிடம் வர்ணித்திருக்கிறாள் போல் இருக்கிறது! ஜுரத்தின் வேகத்திலும் அம்மா இந்த ஹாஸ்யத்தை ரஸித்தாள்.

"நான்தான் அந்தப் பெண்ணையே பரிமாறச் சொல்கிறேன் என்றேனே? வேண்



டாம் என்றாயே? சரியாகச் சாப்பிட்டாயோ, இல்லையோ?" என்று சிரித்தபடி கேட்டாள்.

சுசிலாவின் பேரில் எனக்குக் கோபம் பொத்துக் கொண்டுதான் வந்தது. ஆனால் அம்மாவுடன் சேர்ந்து அவளும் சிரித்த போது, அந்தக் குரலினிமையிலே மயங்கி என் கோபம் தானாக அடங்கி விட்டது.

அடுத்த வேளைச் சாப்பாட்டைச் சுசிலாவின் வலக்கரம்தான் பரிமாறிற்று. அன்று ஏனோ நான் நிறைய சாதத்தைச் சாப்பிட்டு விட்டுப் பின்னால் திணறிக் கொண்டிருந்தேன்.

அம்மா உடல் குன்றிப் படுத்த இரண்டாவது நாள். காலையில் பத்து மணிக்கு ஆற்றில் மூழ்கி விட்டு, வீட்டுக்கு வந்து என் அறைக்குள் வந்த நான் திடுக்கிட்டேன். 'என் அறைதானா, அது?' என்ற சந்தேகம் வியப்பாக மாறியது. அறையில் மூலைக்கொன்றாக இருந்த துணிமணிகள் எல்லாம் ஒழுங்காகக் கொடியில் மடித்துப் போட்டிருந்தன. வண்ணானுக்குப் போட வேண்டிய அழுக்குத் துணிகள் தனியே மூட்டை கட்டி வைக்கப் பட்டிருந்தன. அலங்கோலமாக மேஜை மேல் கிடந்த புத்தகங்கள், யுத்த வீரர்களைப் போல, அலமாரியில் வரிசையாக நின்று கொண்டிருந்தன! நான் ஆசைப்பட்டு வாங்கிய பூக் கிண்ணத்தில் என்றுமில்லாத திருநாளாக, மலர்ந்த பூக்கள் இன் முகத்துடன் காட்சி யளித்தன.

இவைகளெல்லாம் சுசிலாவின் வேலைகள் என்று எவரேனும் சொல்லிக் கொடுக்க வேண்டுமா, என்ன?

அன்று மத்தியானம் சாப்பிடும் போது, "இன்று என் அறை ரொம்பவும் அழகாயிருக்கிறது. தேவதை வந்து அலங்கரித்த மாதிரி இருக்கிறது...!" என்று சொல்லி விட்டு, கடைக் கண்ணால் சுசிலாவின் முகத்தைப் பார்த்தேன். மனத்தின் நிறைவு அவள் முகத்தில் ஒளி வீசியது!

அம்மாவுக்கு உடல் நிலை சரியான பின் முன்னைப்போல சுசிலா அடிக்கடி வீட்டுக்கு வருவதில்லை. ஆனால் ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டு அம்மா அவளைக் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தாள்.


** ** **

என் அம்மா ரொம்பவும் நல்லவள். சுசிலாவைக் காணும் போதெல்லாம் என் கண்கள் சந்தோஷத்தால் மலர்வதைக் கண்ட அவள், "சுசிலா நம் வீட்டு நாட்டுப் பெண்ணாகி விட்டால் எனக்கு ரொம்ப நிம்மதியாயிருக்கும்" என்று பேச்சோடு பேச்சாக என்னிடம் கூறினாள்!

சுசிலாவும் என்னைக் கண்டதும் முன் போல ஓடி மறைவதில்லை. ஏதேனும் கதைப் புஸ்தகங்கள் கேட்பாள். கொடுப்பேன். ஏதேனும் ஒரு காரியத்தைச் சாக்கிட்டு, பார்க்கும்போதெல்லாம் நான்கு வார்த்தைகள் பேசி விட்டுப் போவாள்!

அடுத்த வீட்டுப் பாட்டியும் உலகம் தெரியாத மனுஷியல்ல. சுசிலாவின் கருத்தைப் புரிந்து கொண்ட அவளும், சென்னையில் 'உமா அண்ட் ரமா' கம்பெனியில் உதவி மானேஜராக இருந்த தன் பிள்ளைக்குக் கடிதம் எழுதி வரவழைத்தாள்.

என் தந்தை எப்போதுமே பணத்தில் கெட்டி. மேலும், பத்து வேலிப் புஞ்சையின் எஜமானர். அந்த மதிப்பு அவரிடம் எப்போதுமே உண்டு. இருந்த போதிலும், சுசிலாவின் தந்தை, சீர் செனத்திகளைத் தன் நிலைமைக்கு மீறியே செய்ய ஒப்புக் கொண்டதும் அப்பாவும் இணங்கி விட்டார். கல்யாணத்துக்கு நாளைக் குறித்துக் கொண்டு சுசிலாவின் தந்தை போய் விட்டார்.



தஞ்சைமாநகரில் கவின் கலைப் பொருட் காட்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. சித்திரம், சிற்பம் நடனம், நாடகம் முதலிய அருங் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விழா நடந்து வருகிறது. தஞ்சை கலெக்டர் திரு ஆர். எம். சுந்தரம், நீதிபதி கே. எஸ். வெங்கட்ராமன், கலைக்கூட காரியதரிசிகளான திரு எஸ். கோபாலன், திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் முதலியவர்கள் கலைக் காட்சியின் சிறப்புக்குப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை மேலே உள்ள படத்தில் காணலாம்.

நானும் சுசிலாவும் இன்ப உலகில் இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருந்தோம். மாலை வேளைகளில் ஆற்றங் கரை மணல் மேட்டிலும் மாந்தோப்புகளிலுமாகக் கழிந்து கொண்டிருந்தன.

ஆனால், பத்து நாட்களுக்குப் பிறகு சுசிலாவின் தந்தையிடமிருந்து வந்த கடிதம், எங்கள் இறக்கைகளை வெட்டி வீழ்த்திவிட்டது. அவர் பணம் போட்டிருந்த பாங்கி திடீரென்று மூழ்கி விட்டது. போட்டிருந்த பணத்தில் ரூபாய்க்கு நாலணா வீதம் திரும்பக் கிடைப்பது கூடச் சந்தேகம்தானாம். அந்தப் பணமும் ஏறக் குறைய ஒரு வருஷத்துக்குப் பின்னர்தான் கிடைக்குமாம். ஆகவே அவர் ஒப்புக் கொண்ட அளவுக்குச் சீர் செனத்திகளைச் செய்ய இயலாததற்கு வருந்துவதாகவும் அவர் கடிதம் தெரிவித்தது. கடிதத்தைக் கண்டதும் அப்பா, அம்மாவிடம் சீறினார்: "எல்லாம் உன்னால்தான். அந்தப் பட்டணத்து மனிதன் கையாலாகாதவன் என்று சொன்னேனே...! அவனோடு சேர்ந்து, 'பெண் நன்றாயிருக்கிறது' என்று நீயும் பரிந்து பேசினாய்? நம்மோடு சம்பந்தம் செய்து கொள்ள ஆயிரம் ஆயிரமாகப் பணம் உள்ளவனெல்லாம் காத்துக் கொண்டிருக்கிறான். அந்தப் பட்டணத்துச் சம்பந்தமே நமக்கு வேண்டாம்!" என்றார்.

அம்மாவும் நானும் கெஞ்சினோம். ஆனால், வெற்றி அப்பாவுக்குத்தான்.

கல்யாணம் நின்ற பிறகு பெண்ணைக் கிராமத்தில் விட்டு வைப்பது அழகல்ல என்று சுசிலாவின் தந்தை அவளை அழைத்துக் கொண்டு போய் விட்டார். வண்டியில் ஏறும் போது சுசிலா என்னைப் பார்த்தாள். அந்தப் பரிதாபம் நிறைந்த பார்வை...

சுசிலா இல்லாத கிராமத்திலிருக்கவே எனக்குப் பிடிக்கவில்லை. அப்பாவின் விருப்பத்துக்கு எதிராகத் திருச்சியில் ஒரு வேலையைத் தேடிக் கொண்டேன்.

காலம் ஒரு நல்ல மருந்து. அந்த மருந்து ஆற்றாத புண்ணே இல்லை. இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு சென்ற வருஷம்தான் மீனுவின் கரத்தைப் பற்றினேன். கல்யாணத்துக்கு முன் சுசிலாவின் ஞாபகம்அடிக்கடி என் மனத்தை வாட்டும். ஆனால் மீனு வீட்டுக்கு வந்தபின் அவள் என் இதயம் முழுவதையும் அடைத்துக் கொண்டு விட்டாள். மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு இன்றுதான் சுசிலாவைப் பார்க்கிறேன்.

மீனு அருகே வந்து நின்றாள். "நான் இன்னொரு பிரதட்சிணத்தையும் முடித்துக் கொண்டு வந்து விடுகிறேன்!" என்று சொல்லி விட்டுச் சென்று விட்டாள்.

மீனு அப்பால் நகர்ந்ததும் சன்னதியில் நின்றுகொண்டிருந்த சுசிலாவைப் பார்த்தேன். மூடிய அவள் கண்களிலிருந்து நீர்த்துளிகள் உருண்டோடுவதைக் கண்டு திடுக்கிட்டேன். சுசிலா அழுகிறாளா? ஏன்? என் உள்ளமும் உடலும் பதறின.

உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்தேன். விடுவிடென்று சுசிலாவை நோக்கிச் சென்றேன். கண்ணைத் துடைத்துக்கொண்ட சுசிலா, கணவனின் கையைப் பிடித்தபடியே மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தாள்.

"சுசிலா!"

அவள் திரும்பினாள்.

"நீங்களா?"

"நானேதான்."

"சௌக்கியமாக இருக்கிறீர்களா?"

"சுகம்தான். சுசி, நான் கேட்கிறேனே என்று தவறாக எடுத்துக் கொள்ளாதே. நீ இப்போது ஏன் அழுதாய்?"

சுசிலா ஒரு கணம் தயங்கினாள். அவள் கண்கள் கலங்கின.

"இவருக்குச் சில காலமாகச் சித்தப்பிரமை பிடித்திருக்கிறது."

"ஆ!"

"ஆமாம். ஆரம்பப் பள்ளியின் வாத்தியாராக இருந்தார். பிரமை பிடித்ததனாலே



அந்த வேலையும் போய் விட்டது. வீட்டுச் சாமான்களை ஒன்றொன்றாக விற்று இவருக்கு வைத்தியம் செய்து பார்த்தோம். பலன் இல்லை. கடைசியாக, சீனிவாசப் பெருமாள் தான் கதி என்று இங்கே வந்துவிட்டேன். நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள்?"

"திருச்சியில் இருக்கிறேன்..."

"தனியாகவா இருக்கிறீர்கள்?"

பதில் சொல்ல நான் வாயெடுத்தேன்.

"உங்களை எங்கெல்லாம் தேடுவது? உம்— இங்கே வந்து நிற்கிறீர்களே?" என்று கேட்டுக் கொண்டே மீனு அங்கே வந்தாள். பெண்கள் பார்த்துக் கொண்டார்கள்.

தான் போவதற்கு அறிகுறியாகத் தலையசைத்து விட்டுச் சுசீலா நகர்ந்து விட்டாள். 'யார் அது?' என்ற மீனுவின் கேள்விக்கு நான் உதட்டைப் பிதுக்கினேன். 'சித்தப் பிரமை பிடித்தவளோ?' என்று திரும்பக் கேட்டாள் மீனு. பெருமாள் மாடு போலத் தலையை அசைத்து வைத்தேன்.

என் இதயம் ஏனோ இரும்பாகக் கனத்தது! விபரீதமான சம்பவங்கள் எதுவும் நிகழாமல் எப்படியோ ஊர் வந்து சேர்ந்தேன்.

** ** **

அடுத்த நாள் திங்கட்கிழமை.

கறிகாய் வாங்குவதற்காக வாசலுக்கு வந்த என் மனைவியை அடுத்த வீட்டு அம்மாள் பார்த்து விட்டாள்.

"சீனிவாசப் பெருமாளைச் சேவித்தாயா?"

"திவ்யமா சேவை கிடைத்தது, மாமி. பெருமாள் சேவைக்கப்புறம் மனசு நிறைந்து விட்டமாதிரி இருக்கிறது."

"ஆமாம், ஆமாம். குணசேகர புரத்தில் ஏதேனும் வாங்கினாயோ?"

மீனு இலேசாகச் சிரித்தாள்.

"ஒன்றும் வாங்கவில்லை மாமி. கையை வீசிக்கொண்டு போய் வந்து விட்டோம்!"

ஆம். மீனு. கையை வீசிக் கொண்டுதான் போய் வந்து விட்டாள். ஆனால், நான்? மனத்தில் ஒரு மலைச் சுமையை ஏற்றிக் கொண்டல்லவா வந்திருக்கிறேன்!

வேல் விருட்சம் வீழ்ந்தது!

சென்னையை அடுத்த கோடம்பாக்கத்தில் பல ஆண்டுகளாக ஒளி வீசிக் கொண்டிருந்த வேல் விருட்சம் வீழ்ந்து விட்டது! சென்ற ஏப்ரல் மாதம் நாலாம் தேதி கோடம்பாக்கமே 'கோ!' வென்று கதறிக் கண்ணீர் வடித்துக் கதிகலங்கும்படி நிற்கத் திரு சாமுவேல் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தார்; விண்ணுலகு எய்தி விட்டார்; பரமண்டலத்துக்குச் சென்று விட்டார்!



திரு சாமுவேலின் பூதவுடல் மறைந்தாலும் அவர் புகழுடல் மறையாது. அவர் வாழ்வு அவருக்குப் பின் வாழ்வோருக்கு ஒரு இலக்கியம் போன்றது.

திரு சாமுவேல் கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர். 1907-ம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மாங்காடு என்ற கிராமத்தில் பிறந்தார். 1954-ம் ஆண்டு மறைந்தார். நாற்பத்தேழு ஆண்டுகள்தான் வாழ்ந்தார் எனினும், அவர் வாழ்வு ஒரு இலக்கியமாகி விட்டது.

சென்னை நகராண்மைக் கழகப் பள்ளிகளில் பிள்ளைகளுக்கு கல்லறிவு புகட்டும் ஆசிரியராகத் தொண்டாற்றி வந்தார். பின் அத் தொண்டிலிருந்து ஓய்வு பெறக் கருதினார். உபகாரச் சம்பளத்துடன் விலகினார்.

ஓய்வு பெற்ற திரு சாமுவேல் அவர் தன் தொழில் கல்வி அடிப்படையில் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க வேண்டும், குழந்தைகள் கல்வி அறிவு பெற்று வாழ்வதோடு சிறந்த ஒழுக்க முடையவர்களாகவும் வாழ வேண்டும் என்பதில் பெருங் கவலை செலுத்தி வந்தார்.

1943-ம் ஆண்டு சரோஜா பள்ளியை ஆரம்பித்தார். அப்போது அந்தப் பள்ளியில் ஐந்து மாணவர்களும், ஒரு ஆசிரியை மட்டும்தான் இருந்தார்கள். இவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பள்ளி பின்னால் மூன்று ஆரம்பப் பள்ளிகளையும், ஒரு உயர்நிலைப் பள்ளியையும் ஏற்படுத்தி நிலை நிறுத்தும் சிறந்த அமைப்பை உண்டாக்கியது. பாடு பட்டு உயர்ந்து படர்ந்த வேல் விருட்சத்தின் நிழலில், திரு சாமுவேலின் சளியாத உழைப்பில் மேற்படி கல்வி ஸ்தாபனங்கள் தழைத்தோங்கி வளர்ந்தன.

தம் பள்ளிப் பிள்ளைகளின் வளர்ச்சியே தம் வளர்ச்சி யென்றும், தம் பள்ளி ஆசிரிய ஆசிரியைகளின் நல்வாழ்வே தம் லட்சியம் என்றும், அவர்கள் இன்புற்றிருப்பதற்குப் பணி செய்வதே தமது கடமை என்றும் கருதி இரவு பகல் என்று பாராமல் உழைத்து வந்த திரு சாமுவேலின் திடீர் மறைவு அவர்களுக்கெல்லாம் ஈடுசெய்ய முடியாத பெரிய நஷ்டமாகும்.

திரு சாமுவேலின் பிரிவால் வாடும் எண்ணற்ற ஏழை மக்களுக்கும், அவருடைய அருமைக் குமாரர் திரு செல்லதுரை அவர்களுக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



மக்கள் தொண்டுக்கு என்றே தம் உடல், பொருள், ஆவி அனைத்தும் அர்ப்பணம் செய்து வருகிற மனோகரி அம்மையார் என்று என் பெயர் பிரபலஸ்தர்கள் வரிசையில் சேர்ந்திருக்கிறது. என் உருவப் படத்தைப் போட்டு, பத்திரிகைகளும் புகழ்ந்து எழுதிக் கொண்டிருக்கின்றன.

மனிதனின் சுயநலத்திலிருந்து நன்மையும் சில வேளை ஏற்படக் கூடும். என்னைப் பொறுத்த வரையில் அப்படித்தான் நான் நினைக்கிறேன். மன நிம்மதி பெறவேண்டி, இந்தத் தொண்டில் ஈடுபட்டேன். துவண்டு, ஒடிந்து, கசப்பேறிப் போயிருந்த என் மனத்துக்கு இது ஆறுதலாக இருந்தது. அவ்வளவுதான்.

என்னால் நிறுவப்பட்டு, செவ்வனவே நடந்து வருகிற, அந்தப் புனிதப் பெயரைத் தாங்கிநிற்கிற, "பாஸ்கர மன்றம்" கிராமத்தில் இளஞ் சிறுவர் முதற் கொண்டு பெரியோர்கள் வரை இரு பாலாருக்கும் கண் எனப்படும் கல்வியை அளிக்கிறது. ஏட்டுக் கல்வியுடன், தொழிற் கல்வியையும் போதிக்கிறது. சாதி மத பாகுபாடோ, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடின்றி எல்லாரையும் சமமாகவேதான் பாஸ்கர மன்றம் கருதுகிறது. எனவே அதன் சாதனைகள் பல. அதனால் நன்மையடைந்தோர் பலர்.

இத்தனைக்கும் காரணகர்த்தா பாஸ்கரன்தான். இல்லாவிடில் நான் எங்கோ யிருந்திருப்பேன்; என் வாழ்க்கை வேறு எவ்வாறோ போயிருக்கும்.

எதிர் பாராத பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட என் வாழ்க்கைப் பாதை இப்பொழுது நன்மையை நாடிச் செல்கிறது.

பிறர் மகிழ்ச்சியில், பெரும் மகிழ்ச்சி கொள்ளும் நான், என்னுடைய அந்த இன்பம் நிறைந்த நாட்களை எண்ணிக் கொண்டு தானிருக்கிறேன்.

பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் கன்னிப் பருவத்தின் எல்லையில் அடி எடுத்து வைத்து, இளைஞர்களின் மனத்தைத் துவள வைக்கும், மயக்கும் அழகியாய் நான் இருந்தேன்!

அழகிருந்து என்ன! பருவம் இருந்து என்ன! நான் ஏழை வீட்டுப் பெண். பணம் படைத்தவர்கள் என்னை மணக்க விரும்பவில்லை.

உண்மையாகவே என்னை மணக்க விரும்பிய ஒரு சிலரையும் எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் மனித குணம் பெறாதவர்கள்; கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று போகக் கூடியவர்கள். எந்தக் குறிக்கோளுமில்லாது, ஊரைச் சுற்றித் திரியும் சோம்பேறிகளின் கூட்டத்தில் ஒருவனை மணக்க நான் விரும்பவில்லை.

கவலையேன! பெற்ற தாயிருந்தால், இந்நேரம் என்னை இப்படி விட்டு வைத்திருக்க மாட்டாள்! எதையும் சீர் தூக்கிப் பாராது, பருவ மலர் வீணாகி விடக் கூடாது என்று, யார் கழுத்திலாவது என்னைக் கட்டி விட்டிருப்பாள். அவள் இறந்து, மூன்று வருஷங்கள் ஓடி விட்டன. இப்பொழுது தந்தையும் நானும்தான்.

தந்தை வெளியில் வேலைக்குப் போய்ச் சம்பாதித்து வருவார். நான் வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொள்வேன். காலம் ஓடிக் கொண்டிருந்தது.

என் கல்யாணத்தைப் பற்றித் தந்தைக்குக் கவலை இல்லாமலில்லை. ஒருநாள் இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு "அம்மா! உன் கல்யாணம் முடிந்து விட்டால், நான் பேசாமல் கண்ணை மூடி விடுவேன்" என்பார்.

"இருங்கள், அப்பா! கல்யாணத்துக்கு ஒன்றும் அவசரமில்லை. காலம் வரும்; காத்திருப்போம்" என்று நான் சொல்லுவேன்.

அப்படி யிருக்கும் பொழுது, ஒரு நாள் வழக்கம் போலவே பொழுது புலர்ந்தது. அதிகாலையி

லேயே எழுந்திருந்த நான், வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு, இடுப்பில் குடத்தைத் தாங்கி, குளத்தை நோக்கிச் சென்றேன்.

குளத்தில் ஆசை தீர, கை ஓய்ம்படி நீச்சல் அடித்து, குளித்து முழுகினேன். குடத்தில் தண்ணீரை நிரப்பினேன். தண்ணீர்க் குடத்தை இடுப்பில் தாங்கிய வண்ணம், மேலே நிமிர்ந்தேன். ஒரு நிமிஷம் அயர்ந்து போனேன். என்னைப் பார்த்து முறுவலித்துக் கொண்டு, இரண்டு ஆடவர்கள் கரையில் நின்று கொண்டிருந்தார்கள். அப்படி என்னைப் பார்த்துக் கொண்டு அவர்கள் அங்கேயே எவ்வளவு நாழி நின்றார்களோ!

அவர்கள் 'குசு குசு' வென்று ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். என்னைப் பற்றித்தான் பேசினார்களோ, என்னவோ! என் உள்ளத்திலும் சிறிது அச்சம் ஏற்பட்டது.

அவ் விருவரில் ஒருவர் ஊருக்குப் புதிதல்ல; உள்ளூர் வாசிதான். ஆனால் வெளியூரில்தான் வாசம் செய்வார். நினைத்தால் வருவார்; போய் விடுவார். அவருக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம். ஊரில் பெரிய பண்ணையார் ராமநாதன் மகன். எட்டுப் படிப்புக்குத் தலை முழுகிவிட்டு ஊரை விட்டே ஓடி, இப்பொழுது சென்னைப் பட்டினத்தில் ஏதோ ஒரு வியாபாரக் கம்பெனி நடத்தி, கொழுத்த லாபம் அடைந்து, குழந்தை குட்டிகளுடன் குஷியாய் வாழ்ந்து வருகிறார்.

மற்றவரைப் பற்றி எனக்குத் தெரியாது. இதற்கு முன் பார்த்ததுமில்லை. நல்ல வாலிபப் பருவம்! களை சொட்டும் முகம், கம்பீரத் தோற்றம். அழகு என்றால் அழகு. எனக்கு வர்ணிக்கவே தெரியவில்லை, போங்கள்.

இந்தப் புதியவரைப் பார்த்ததும் என் உள்ளம் நெகிழ்ந்தது. என்றுமில்லாத ஒருவித உணர்ச்சி என் உடல் பூராவும் பரவியது. "எனக்கு வரும் கணவன் இவரைப் போலவே இருந்துவிட்டால், நான் பாக்கியசாலிதான்" என்று எண்ணாததெல்லாம் எண்ணினேன். என்னையே அறியாமல், சூழ்நிலையையும் மறந்து, சிலை போல சிறிது நேரம் நின்று விட்டேன். நான் உணர்வு பெற்று, நாணம் மிகுந்து, படியேறி வந்தேன். அப்பொழுதும் அவர்கள் என்னைப் பற்றித் தொடர்ந்து பேசுவது போலத் தெரிந்தது.

"இங்கே வா, அம்மா!" என்று சோமநாதன் என்னைக் கூப்பிட்டார்.

நான் திரும்பிப் பார்த்தேன்.

"முனுசாமியின் மகள் மனோன்மணிதானே நீ! சின்ன வயசில் பார்த்தது. அடையாளமே தெரியவில்லை" என்றார் அவர் வியப்பு மேலிட்டவராய்.


"ஆமாம், நான் மனோன்மணிதான்" என்று சொல்லிவிட்டு வெட்கத்தால் தலை குனிந்தேன்.

"என்ன, பாஸ்கர்! நான் நினைத்தது சரியாகி விட்டது. முனுசாமி எனக்கு வேண்டியவர். அவரிடம் சாயந்திரம் பேசிக் கொள்ளலாம்" என்றார் சோமநாதன். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"என் மனோன்மணி! நீ படித்திருக்கிறாயா! உனக்குப் பாடத் தெரியுமா!" என்றார் பாஸ்கரன் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

"நாலாம் வகுப்பு வரையில் படித்திருக்கிறேன். பாடவும் கொஞ்சம் வரும். கிராமத்துப் பாட்டுகளைப் பாடி வழக்கம்" என்றேன். அவருடைய இனிய முகத்தை ஒரு தரம் பார்த்து விட்டு வெட்கத்தால் நான் தரையை நோக்கினேன்.

"நீ போகலாம்" என்றார் சோமநாதன். நான் வீட்டை நோக்கி நடந்தேன். என் உள்



நால்வர் கூறிய நல் உபதேசங்கள்

சைவமும் தமிழும் தழைக்க, தமிழகத்தில் இறைவன் உறை விடங்கள் தோறும் சென்று தமிழ் மறையால் துதித்து மக்கட் குலத்துக்கு மாசகன்ற சேவை செய்த அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் முதலிய சைவ சமய குரவர்களின் அருள்மொழிகளுள் சிலவற்றை அருஞ் சொல் விளக்கங்களுடன் விளக்கியிருக்கிறார் ஆசிரியர். பக்தி மணங்கமழும் பாக்களினால் பரமனைப் பாடிப் பரவிய அந்த ஞான புருஷர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமும் சுவை மிகுந்த நீந்தமிழில் தீட்டப்பட்டிருக்கின்றன.

சைவப் பற்றும் தமிழ்ப் பற்றும் உள்ள அன்பர்களுக்கு இந் நூல் பெருமகிழ்வளித்தல் உறுதி. தேவார, திருவாசகப் பாக்களின் பெருமையை ஓரளவு அறிந்து கொள்ள இந் நூல் பெரிதும் உதவியாயிருக்கும். பாடல்களுக்கு நயமிகு தமிழில் ஆசிரியர் எழுதியிருக்கும் உரை விளக்கங்கள் தெளிவாகவும் உயர்வாகவும் இருக்கின்றன.

மேற்படி நூலின் அரங்கேற்றம், ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி பரமாத்மானந்தா அவர்கள் தலைமையில், சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயம் நவராத்திரி மண்டபத்தில், 13-4-54 அன்று மாலை மிகவும் சிறப்பாக நடந்தேறியது. இந் நூல் அரங்கேற்று விழாவில் பல அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் : வித்துவான் பாலூர், து. கண்ணப்ப முதலியார் ; பிரசுரம் : விசாகப் பதிப்பகம், வேப்பேரி, சென்னை–7 ; விலை. ரூ. 1-0-0.

ளம் துள்ளி விளையாடியது. பாஸ்கரனின் உருவம் மனக் கண்ணில் நிழலாடியது.

அன்று பூராவும் எனக்கு வேலையில் கவனம் செல்லவில்லை. மாலை நெருங்க நெருங்க, வீட்டுக்கு வெளியில் போய்ப் பார்த்து விட்டு வருவதே என் வேலையாகி விட்டது. முதலில் வெளியில் சென்றிருந்த தந்தை வந்தார். சிறிது நேரம் கழித்து, அவ்விருவருமே வந்து விட்டார்கள்.

"எங்கள் வீடு தேடி ஏன் வரவேண்டும்! அப்பாவிடம் என்ன பேசப் போகிறார்கள்! எனக்குப் படிக்கவும், பாடவும் ஏன் தெரிய வேண்டும்!" என்று என்னையே கேட்டுக் கேட்டு மனம் குழம்பிக் கொண்டிருந்தேன்.

அதற்குள் தந்தை வந்தவர்களை "வாருங்கள், வாருங்கள்" என்று வரவேற்று, அமரச் செய்தார். அவருக்கும் ஆச்சரியமாகத்தா னிருந்தது. "எதுவாக இருக்கும்!" என்ற திகைப்பு அவர் முகத்தில் இழையோடியது போல் தோன்றியது.

"நாங்கள் காரியமில்லாமல் வரவில்லை. உங்களுக்கு நன்மை விளைவிக்கும் நல்ல சேதியைத்தான் கொண்டு வந்திருக்கிறோம்" என்று ஆரம்பித்தார் சோமநாதன்.

"சொல்லுங்கள்" என்றார் தந்தை வியப்போடு.

"நான் சென்னையில் சினிமா ஸ்டுடியோ வைத்திருப்பதை நீங்கள் கேள்விப்பட் டிருப்பீர்கள். சினிமாப் படம் எடுப்பது எங்கள் தொழில். இப்பொழுது புதிதாக ஒரு படம் பிடிக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்.

"நாங்கள் எடுக்கப் போகும் புதுப் படத்துக்கு ஒரு நடிகை கிடைத்து விட்டாள். வேறு யாருமில்லை. உங்கள் மகள்தான். நிறைய வருமானம் கிடைக்கும். நீங்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை. கௌரவமாக மண வாழ்க்கையிலும் ஈடுபடலாம். என்ன சொல்கிறீர்கள்!" என்றார் சோமநாதன்.

மறைவாக நின்று கொண்டிருந்த நான் "நானும் சினிமாவில் நடிக்கப் போகிறேனா!" என்று எண்ணமிடலானேன்.

"என் மகளும் சினிமாவில் நடிக்க வேண்டும் என்கிறீர்கள். எங்கள் வம்சத்தில் இல்லாத பழக்கமாக யிருக்கிறதே! பெண்ணுக்குக் கல்யாணம் வேறு ஆகவேண்டும். ஊரார் என்ன சொல்வார்கள்!" என்றார் தந்தை.

"உங்களுக்கு அந்த யோசனை வேண்டாம். சினிமாவில் குடும்பப் பெண்கள் தாராளமாக நடிக்கிறார்கள். பெரிய பெரிய மனிதர்கள் வீட்டுப் பெண்கள் எல்லாம் நடிக்கிறார்கள். குடும்ப கௌரவத்துக்கு இதனால் எந்த இழுக்கும் சேர்ந்து விடாது" என்று என் தந்தைக்குச் சமாதானமாகச் சொன்னார் பாஸ்கரன்.

என் மனமும் "இத்தகைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கை நழுவ விடக்கூடாது" என்று சிந்தனை செய்தது.

"நீங்கள் இவ்வளவு தூரம் சொல்வதைக் கேட்டு, எனக்கும் இஷ்டமாகத்தா னிருக்கிறது. பெண் இஷ்டத்தையும் கேட்டுச் சொல்கிறேன்" என்று சொல்லி விட்டு என்னிடம் வந்தார் தந்தை.

நானும் "சரி" என்று சொல்லி விட்டேன்.

அப்பாவும் என்னுடைய சம்மதத்தை அப்பொழுது அவர்களுக்குச் சொல்லி விட்டார்.

•• •• ••

கிராமத்தை விட்டு, நானும் தந்தையும் முதன் முதலாகச் சென்னையில் காலடி எடுத்து வைத்ததாம். அங்கு கண்ட ஒவ்வொன்றும் எனக்கு வியப்பை அளித்தது.

சோமநாதன் சென்னையில் நிறுவியிருந்த ஸ்டுடியோ தென்னிந்தியாவிலேயே மிக மிகப் பெரியது. அதன் புகழ் ஒளி எங்கும் பரவியிருந்தது. நடிகர் நடிகை முதல் கணக்கற்ற திறமைசாலிகள் அங்கே யிருந்தனர். இதுவே எனக்கு ஒரு புது உலகம் போலத்தா னிருந்தது. மனத்தில் இனம் தெரியாத ஒருவித அச்சமும் குடிகொண்டது. இருந்தாலும் "சோமநாதன், பாஸ்கரன் இவர்கள் ஆதரவு எனக்கு நிறையக் கிடைக்கும்" என்ற நினைவில் என்னுள்ளே யிருந்த அச்சத்தைச் சிறிது சிறிதாகக் களைந் தெறிய ஆரம்பித்தேன்.

நான் ஸ்டுடியோவில் நுழைந்ததும், மற்ற நடிகர் நடிகைகள் என்னை முறைத்து முறைத்துப் பார்த்தார்கள். ஏதோ முணுமுணுத்தார்கள்.

சோமநாதனேதான் சினிமா டைரக்டர், அவரைச் சும்மா சொல்லக்கூடாது. என்னுடைய முன்னேற்றத்துக்காக அவர் வெகுவாகப் பாடுபட்டார். நான் பாடிய ஒன்றிரண்டு கிராமாந்திரப் பாட்டுகளும் அவரைக் கவர்ந்தன. என்னுடைய சாரீரமும் இசைந்து கொடுத்தது. லய சுத்தத்துடன் கணீரென்று ஒலித்தது.

நான் பாடுவதிலும் ஆடுவதிலும் திறமை பெறுவதற்கு எனக்குச் சிட்சை ஆரம்பமாகியது. தமிழறிவு பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்தார்கள்.


பாஸ்கரன்தான் எனக்குப் பாட்டு வாத்தியார். ஸ்டுடியோவுக்கும் அவர்தான் சங்கீத டைரக்டர். பாட்டில் ஒரு மேதை. அவர் பாடினால் நாம் இந்த உலகத்தையே மறந்து போய் விடு

வோம். அத்தகைய மயக்கம் அப் பாட்டில் இருந்தது. கல்லும் கரைந் துருகும் இனிமை அதிலிருந்தது. இந்த ஏற்பாட்டினால் நான் கொண்ட மகிழ்ச்சிக்குக் கங்குகரை யில்லை.

நாட்கள் ஒன்று, பலவாகக் கழிந்து போயின.

ஆடலும் சரி, பாடலும் சரி. வெகு நன்றாகக் குறுகிய காலத்துக்குள்ளேயே எனக்கு வந்து விட்டன. தெளிவாகப் பேசவும், வசனத்தை உச்சரிக்கவும் தெரிந்து கொண்டேன்.

பாஸ்கரன் என்மீது வைத்திருக்கும் அன்பு எத்தகையது என்பதை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. பாஸ்கரன் பரமசாது; நாணயம்



மிக்கவர்; நல்ல குணசாலி; அழகைப் போல் அறிவும் திறமையும் நிறையப் பெற்றவர்; அவருடைய ஆழ்ந்த உள்ளத்தை எளதில் அறிந்துகொள்ள முடியாது. எனக்கு அதில் இடம் கிடைக்க வேண்டுமே என்ற பிரார்த்தனைதான் எப்பொழுதுமே எனக்கு. "என் வாழ்வு தூய்மை பெற்று, உயர்வு பெற வேண்டுமென்றால், எனக்குப் பாஸ்கரன் உரியவராக வேண்டும்" என்ற நினைவிலேயே நான் மகிழ்ந்தேன்.

இதற்கிடையில் ஒரு நாள் சோமநாதன் என்னைப் பார்த்து "மனோன்மணி — இல்லை மனோகரி. ஆமாம். இன்று முதல் உன்பெயர் மனோகரிதான். நான் புது முறையில் ஒரு படம் 'எடுக்கப் போகிறேன். அதில் நீதான் கதாநாயகி. என்ன தயங்குகிறாய்! உனக்குத் திறமையில்லை என்று யோசிக்க வேண்டாம். வெற்றி நம் பக்கம்தான், தைரியமாக நடித்து விடு!" என்று கூறி எனக்கு உற்சாகமளித்தார். அங்கு பாஸ்கரனும் இருந்தார். என் சம்மதத்தையும், தைரியத்தையும் தெரிவித்து விடுவது போன்று, நான் சிரித்தேன். பாஸ்கரனும் சிரித்தார். சோமநாதன் முகமும் திருப்தியால் மலர்ந்தது.

படப் பிடிப்பு வேலை ஆரம்பமாகியது.

அதே சமயம் அந்தப் புதிய படத்தைப் பற்றி எல்லாப் பத்திரிகைகளிலும் விதம் விதமான விளம்பரங்கள் வெளியாகிக் கொண்டிருந்தன. எல்லா விளம்பரங்களிலும் என்னுடைய பெயர்தான் பிரமாதப் பட்டது.

படமும் முடிந்து, திரையிலும் இடப்பட்டது. எதிர்பார்த்த அளவுக்கு மேல் அது வெற்றியளித்து விட்டது. படத்தை லட்சோப லட்சம் ஜனங்கள் பார்த்தார்கள்; திருப்தியடைந்தார்கள்; மகிழ்ச்சியில் மிதந்தார்கள். டைரக்டர் சோமநாதனைப் புகழ்ந்தார்கள்; எல்லாவற்றிற்கும் மேல் புதிய சினிமா நட்சத்திரம் — முதல் படத்திலேயே சினிமா அபிமானிகளின் உள்ளங்களை ஒருங்கே கவர்ந்த மனோகரியைப் பற்றி எங்கும் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

எனக்கேற்பட்ட குதூகலம் ஒருபுற மிருக்கட்டும். பட முதலாளியும் டைரக்டருமான சோமநாதனும், சங்கீத டைரக்டர் பாஸ்கரனும் அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது!

"மனோகரி! இது எங்கள் வெற்றியல்ல. உன் வெற்றிதான். நாங்கள் எடுத்துக்கொண்ட பிரயாசையும், சிரமமும் பெரிதல்ல. எல்லாவற்றையும் அக்கறையுடன் கவனித்து, திறப்படப் பேசி, பாடி நடித்த உன் சாமர்த்தியத்தைத்தான் மெச்ச வேண்டும். நடிகை என்றால் நீயல்லவோ நடிகை!" என்று பாஸ்கரன் சிரித்துக் கொண்டே பேசினார். கூட இருந்த சோமநாதனும் அவர் சொல்வதை ஆமோதித்தவாறே தாமும் திம்மதி நிறைந்த முகத்தோடு என்னைப் பார்த்துச் சிரித்தார்.

★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★

Britain - An official Hand book

உலகத்திலே சகல துறைகளிலும் மகத்தான முன்னேற்றம் அடைந்துள்ள வல்லரசுகளில் ஒன்றான பிரிட்டனைப் பற்றி என்ன கேள்வி கேட்டாலும் பளிச்சென்று பதில் அளிக்க வேண்டுமா? பிரிட்டனில் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலிருந்து பார்லிமெண்டு வரையில் உள்ள எல்லா ஸ்தாபனங்களையும் பற்றிய விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டுமா? குண்டூசியிலிருந்து அணுகுண்டு வரையில் பிரிட்டனில் உற்பத்தியாகும் சாதனங்களைப் பற்றிப் புள்ளி விவரங்களுடன் தெரிந்து கொள்ள வேண்டுமா? பிரிட்டனைப் பற்றிய எந்த விவரம் வேண்டுமாயினும், பிரிட்டிஷ் சர்க்கார் விளம்பர இலாக்கா தயாரித்துள்ள 334 பக்கங்கள் கொண்ட மேற்படி புத்தகத்திலிருந்து எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

பிரிட்டனில் சர்க்கார் நிர்வாகம், மதம், விஞ்ஞானம், விவசாயம், கலைகள், சமூதாயச் சீர்திருத்தம், தொழில் துறைகள், வர்த்தகம் முதலிய சகல விஷயங்களைப் பற்றிய வரலாறும் புள்ளி விவரங்களும் இந்தப் புத்தகத்தில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

உலகத்தில் உள்ள நாடுகளிலேயே பிரிட்டிஷார் தான் அதிகப் பத்திரிகைகள் வாசிக்கிறார்கள்; ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளியாகும் "News of the world" என்ற பத்திரிகையின் 81,69,820 பிரதிகள் ஒவ்வொரு வாரமும் செலவாகின்றன; உலகிலே வேறு எந்தப் பத்திரிகையும் ஒரே நாளில் இவ்வளவு அதிகப் பிரதிகள் அச்சிடுவதில்லை என்று இந்தப் புத்தகத்தில் பெருமையுடன் குறிப்பிடப் பட்டிருக்கிறது. விஞ்ஞான ஆராய்ச்சிக்காகப் பிரிட்டன் வருஷா வருஷம் இருபத்திரண்டு கோடி ரூபாய் செலவு செய்கிறது என்பதும் இப் புத்தகத்திலிருந்து தெரிகிறது. மொத்தத்தில் இதைப் பிரிட்டனைப் பற்றிய பேரகராதி என்று கூறலாம்.

கிடைக்குமிடம்: British Information Services, Eastern House, Mansing Road, New Delhi 2.

விலை: ரூ. 4-8-0 தபால் கட்டணம் ரூ. 1-2-0.

★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★

நான் எதிர்பார்த்தது பாஸ்கரனிடமிருந்து வந்த பாராட்டைத்தான். அப்பொழுது முதல் ஏதோ ஒரு இன்பபுரியை நோக்கி நான் செல்லுவதுபோலத் தோன்றியது.

முதல் படத்திலேயே கிடைத்த இந்த மகத்தான வெற்றிக்குப் பிறகு நானும் பாஸ்கரனும் நெருங்கி நெருங்கி, உள்ளங்கள் ஒன்றுபட்டு, மனம் விட்டுப் பேசிப் பழகும்படியான சந்தர்ப்பங்கள் நிறைய நிறைய ஏற்பட்டன. பாஸ்கரனின் மனோநிலையும் என்னுடையதைப் போன்றதாகவே இருந்ததை அறிந்தேன். அன்றொரு நாள், காலைப் பொழுதில், 'குளத்தங்கரையில் என்னைச் சந்தித்ததுமே அவர் 'கண்டதும் காதல்' கொண்டு விட்டாராம். நான் என்றென்றும் மணம் குன்றாத காட்டு ரோஜாவாம்; சேற்றில் முளைத்த செந்தாமரையாம்; இருண்ட மேகக் கூட்டத்தில் தோன்றி, ஆனால் மறையாத, வானவில்லாம்; திக்கு திசை தெரியாமல் மனத்தை அலைய விடுபவர்களின் போக்கை நிறுத்தும் கலங்கரை விளக்காம்; பூமியின் அடியில் கிடைக்கும் தங்கச் சுரங்கமாம்; கடலின் அடியில் கிடைக்கும் முத்தாம். இப்படி இன்னும் என்னென்னவோ சொல்லி என்னை வர்ணிக்கத் தொடங்கி விட்டார். மகுடி கேட்டு மயங்கும் பாம்பென மயங்கினேன்; என்னையே மறந்தேன்; "என் தவம் பலித்தது!" என்று மகிழ்ந்தேன்.

இப்பொழுது பாஸ்கரன் எனக்கு வேற்று மனிதரில்லை; என் உள்ளத்தில் ஒன்றாகக் கலந்து விட்ட என் தெய்வம்; என் ஆருயிர்க் காதலன்.

இந்த இன்பச் சூழ்நிலையில் நாட்கள் உருண்டோடிக் கொண்டிருந்தன.

நான் நடிக்கப் போகும் இரண்டாவது படத்திற்கான திட்டங்கள் போடப்பட்டு, அதுவும் பாதி வரையில் எடுக்கப்பட்டு விட்டது.

எங்கள் இருவருடைய காதல் உறவும் செழுமையுடன் வளர்ந்து கொண்டே வந்தது.

மனம் ஒன்றுபட்ட எங்கள் திருமணத்தை, ஒரு மாதம் கழித்து, நல்லதொரு நாளில் நடத்தி விடுவதென்று ஒரு முடிவு ஏற்பட்டது.

**   **   **

ஒரு நாள் பாஸ்கரன் என் வீட்டுக்கு வந்தார்.

"மனோகரி, இன்றைக்கு மாமல்லபுரம் போக வேண்டுமென்று உத்தேசித்து விட்டேன். மாமல்லபுரக் காட்சிகளைக் காணக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அங்கு நம்மையே நாம் மறந்து விடுவோம். பல்லவர்கள் ஆண்ட மகோன்னத நாட்களுக்கே போய் விடுவோம். சிற்பக் கலைக்கு உயிர் கொடுத்த கலைஞர்களைக் கண்டு பேசி உறவாடிக் கொண்டே இருந்து விடுவோம். சீக்கிரம் கிளம்பு, நாழியாகிறது" என்று உற்சாகமாகக்கூறி பாஸ்கரன் என்னை அவசரப்படுத்தினார்.

நானும் உற்சாகம் பொங்கும் உள்ளத்துடன் அவருடன் கிளம்பி விட்டேன்.

பாஸ்கரனே காரைச் செலுத்தினார். நான் அவர் அருகில் உட்கார்ந்திருந்தேன். நீண்டு, வளைந்து ஓடும் பாதையில் வெகு தூரத்துக்கு வெகு தூரம், நானும் அவருமாகத்தான் காரில் இருந்தோம். அந்தப் பாதையின் இருமருங்கும் நிறைந்து, நிழல் தந்து, குளுமையூட்டிய பசுமரங்களும், அவைகளைத் தாண்டி அப்பால் தெரிந்த பல்வேறுபட்ட இயற்கைக் காட்சிகளும், நீண்ட பெரிய யானைகள் படுத்து உறங்குவது போன்ற சிறுசிறு குன்றங்களும் என்னைப் பரவசப்படுத்தின; என் உள்ளத்துக்கு இன்பமூட்டின. மகிழ்ச்சி மிக்கவளாகி மெய்மறந்து போனேன். இப்படி என் னிடத்தில் கரை புரண்டு ஓடிய உற்சாகத்தினால், பாஸ்கரனும் நானும், எங்கள் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி, இன்பம் நிறைந்த இனிய மொழிகளினால், மாறி மாறிப் பேசிக் கொண்டே போனோம். மாமல்லபுரம் கண்ணுக்குத் தென்பட்டதுகூட எங்களுக்குத் தெரியவில்லை. அவ்வளவு உற்சாகம்!

கண்ணைக் கவர்ந்து, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சரித்திரப் பிரசித்திப் பெற்ற மாமல்லபுரத்து மலைக் கோயிலைப் பார்த்தோம்; பஞ்சரதம், பகீரதன் தவம் முதலிய அரிய காட்சிகளைக் கண்டு களித்தோம். அப் பொற்காலத்துச் சிற்பிகளின் கற்பனையையும், கைத்திறனையும் வியந்து வியந்து, எல்லாச் சிற்பங்களையும் கண்ணுற்றோம்; ஆச்சரியப் பட்டோம்; அழகிய சிற்பங்களில் ஆழ்ந்து அமிழ்ந்து போனோம்; மாமல்லபுரத்துக் கடற்கரை மணலில் அமர்ந்து, ஒன்றை ஒன்று தாவிப் போட்டியிடும் அலைகளைப் பார்த்துக் கொண்டே, பேச வேண்டியதைப் பேசிப் பேசி, இன்பமாகவே பொழுதைப் போக்கினோம்.

ஐந்து மணிக்கு, அங்கிருந்து கிளம்ப மனமின்றி, சென்னையை நோக்கிப் புறப்பட்டோம்.


நெஸ்ட்டோமால்ட்
சாப்பிடுவதால் தேகம் திட
கார்த்தமாயிருக்கிறது
அதிக சக்திக்காக, சத்து
உள்ளதும் உடலுக்கு
அவசியமுமான பானம்
. . . விடமின் B_1 சேர்ந்த
மால்டெட் பால்.
NESTOMALT
MALTED MILK
சூடாகவோ, அல்லது
குளிர்ச்சியாகவோ சாப்பிடலாம்.
நல்ல ருசியாயிருக்கும்


ஆரோக்கியமும்
அழகும்
சேர்ந்து போகிறது
வெற்றிக்கு முக்
கியமானது திட
ஆரோக்கியம். மந்தமான
லிவர் மலச்சிக்கல், வாயுப்
பொருமல், அஜீரணம், ஞாப
கமின்மை. மயக்கம் முதலிய
வற்றை உண்டாக்குகிறது. லிவர்
ஜெனை தொடர்ந்து சாப்பிட்டால்
அது லிவரை பலப்படுத்தி பூர்ண
ஆரோக்கியத்தைக்
கொடுக்கும்.
லிவர்ஜென்
லிவர் தொந்தரவுக
ளுக்கு நிவாரணி
ஸ்டாண்டர்ட்
பார்மஸூடிகல்
ஒர்க்ஸ் லிமிடெட்,
கல்கத்தா.

களங்கம்

கேசவன் அண்ணன்; மாதவன் அவனுக்குத் தம்பி. கபடமில்லாமல் பழகிவந்த தம்பியையும் தன் மனைவியையும் குற்றமுள்ள கண்களால் பார்த்து மாசு கற்பித்து அவமதித்தான் கேசவன். இது கேட்டு உள்ளம் வெதும்பிய அவன் மனைவி தன்மீது சுமத்தப் பட்ட களங்கத்தைப் பொறாது நோயுற்றாள். சந்தேகப் பேய் விசுவ ரூபமெடுத்துக் குடும்பத்தையே குலைக்கப் பார்த்தது. நல்லவேளையாக, கோர மரணம், கொலை, போன்ற எத்தகைய விபரீத நிகழ்ச்சியும் நேர்ந்து விடாமல் கதை சுபமாகவே முடிந்து விடுகிறது. ஒரு சிறு கீறல் காயங்கூட ஏற்படுத்தாமல் சந்தேகப் பேய் விலகி விடுவது கதையின் சுப முடிவைக் களை கட்டச் செய்கிறது. மாசு கற்பிக்கப்பட்ட போதும், மாசு நீங்கப் பெற்ற போதும் கதா பாத்திரங்கள் ஜீவனுடன் விளங்கிக் கதைக்குச் சோபை தருகிறார்கள்.

எழுதியவர்: எல்லார்வி; பிரசுரம்: குமுதம் காரியாலயம், சென்னை—10; விலை அணா 6.

நாங்கள் செங்கற்பட்டை அடைய இரண்டு மூன்று மைல் தூரந்தானிருந்தது. காரும் வெகு வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அப்பொழுது சாலையின் நடுவில் ஒரு எருமைக்கடா நின்று கொண்டிருந்தது. பாஸ்கரன் "ஹாரனை"ப் பல முறை அடித்துப் பார்த்தும், அது நகரவேயில்லை. வண்டியை ஒதுக்கி எருமைக் கடாவின் மேல் உராயாதபடி சாலையோரமாக ஓடித்துச் செலுத்தினார். உடனே "படார்" என்று ஒரு பயங்கரச் சத்தம்! இது தான் நான் அறிவேன்!

** ** **

நான் கண் விழித்துப் பார்த்தபோது, செங்கற்பட்டு ஆஸ்பத்திரியில் இருப்பதை உணர்ந்தேன். என் தலையில் கட்டுப் போட்டிருந்தது.

எனக்குச் சரியானபடி நினைவு வந்து, உடம்பு தேறி, சாதாரணமாகப் பேசுவதற்கும் மேலும் முப்பது நாட்களாயிற்று.

என் சுய நினைவில் டைரக்டர் சோமநாதனைப் பார்த்தேன். அவர் எனக்காகப் பரிதாபப் பட்டார்; அவர் கண்கள் கலங்கிப் போயிருந்தன. அவரைப் பார்த்து நான் கேட்ட முதல் கேள்வி "பாஸ்கரன் எங்கே!" என்பதுதான். அவர் மௌனம் சாதித்தார். மீண்டும், மீண்டும் கேள்விகள் பலமாக இருந்ததினால், அவர் உண்மையைச் சொல்லித்தான் ஆக வேண்டியிருந்தது.

"மனோகரி! கார் விபத்தில் உன் தலையில் பலமான அடி! காயத்துடன் உயிர் தப்பி விட்டாய்! ஆனால், அந்தோ, பாஸ்கரன் அங்கேயே காரின் அடியில் விழுந்து நசுக்குண்டு இறந்து போனார். உன்னை மட்டும் அந்த வழியே வந்தவர்கள், ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்திருந்தார்கள். பாஸ்கரன் போய் விட்டார்! என் வெற்றிக்குக் காரணகர்த்தா போய் விட்டார்! என் அரிய அன்பர் போய் விட்டார்!" என்று கூறி அவரும் வாய்விட்டுக் கதறி அழுதார்.

"பாஸ்கரன் இறந்த செய்தியைக் கேட்ட நான் ஐயோ!" என்று அலறி அப்படியே படுக்கையில் அயர்ந்து சோர்ந்து விழுந்து விட்டேன்.

'என்ன ஏமாற்றம்! நான் மட்டும்தானா உயிர் வாழ வேண்டும்? ஒரே இடத்தில் இருவருமே இறந்தொழிந்து போயிருக்கக் கூடாதா!" என்று நான் அழுதேன்; அழுதேன், எல்லையற்ற சோகத்தில் மூழ்கினேன்.

"என் வாழ்வே ஒரு கனவுதானா! இதுவும் இப்படி ஒரு சிதைந்த கனவாகத்தான் போக வேண்டுமா? இதற்குத்தானா நான் இவ்வளவு தூரம் பெயரும் புகழும் பெற வந்தேன்? பட்டிக்காட்டுப் பெண்ணாகவே இருந்திருக்கக் கூடாதா!" என்று எண்ணி வருந்தினேன்.

கல கலவென்று சிரிப்புடன் கூடிய என் வாழ்க்கையில் சோகம் நிரம்பி விட்டது. நான் ஒரு நடைப் பிணமானேன். சென்னை வாசம், குபேர வாழ்வு எல்லாமே எனக்குக் கசந்து போயின. பாஸ்கரன் இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வா!

என்னுடைய இரண்டாவது படம் பாதியிலேயே நின்றது. அதில் என்னை நடிக்கச் செய்து, பூர்த்தி செய்யச் சோமநாதன் இஷ்டமில்லாமலேயிருந்தார். பணம் செலவானது பற்றியும் அவர் கவலை கொள்ளவில்லை. அவர் இப்படி நஷ்டமடைவதில் எனக்கு இஷ்டமில்லை.

அவரை வற்புறுத்தி, படப் பிடிப்பு வேலையை மீண்டும் தொடங்கச் செய்தேன். என் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட விருப்பு, வெறுப்பை மறந்து நடித்தேன். அந்தப் படத்தின் பின் பகுதிகளில் பலவித சோகக் கட்டங்கள் இருந்தன. என் உள்ளத்திலும் சோகம் நிறைந்து போயிருந்ததினால்தானோ என்னவோ, என்னுடைய இரண்டாவது படம் முதல் படத்தையே தூக்கியடித்து விட்டது. ஒரே வெற்றிதான் ஒரே புகழ்தான்! எங்கெங்கும் என் பெயர் பரவி விட்டது. என்ன புகழ் வந்துதான் என்ன! அதன் பிறகுதான் நான் வேறு எந்தச் சினிமாப் படத்திலும் நடிக்கவில்லையே. விதி குறுக்கிட்டு என் உள்ளக் கனவைத்தான் சிதைத்து விட்டதே!

சோமநாதன் உவந்தளித்த மூன்று லட்சம் ரூபாயைப் பெற்றுக் கொண்டு, சென்னை வாசத்திலிருந்தும், சினிமா வாழ்க்கையிலிருந்தும் விடுதலை பெற்று, தந்தையுடன் மீண்டும் கிராமத்துக்கே வந்து சேர்ந்தேன். அன்றொரு நாள் சென்னையை நோக்கிச் சென்ற போது என் உள்ளம் காலியாக இருந்தது. ஆனால் இன்றோ 'பாஸ்கரன்' என்ற நாமத்தைத் தாங்கி நிறைந்திருக்கிறது. "இந்த உள்ள நிறைவோடு நான் உயிர் வாழ்ந்தால் போதும். அப்படி வாழும் போது, செல்வம் மிகுந்து வந்துள்ள என்னால் மக்கள் உய்ந்தால் போதும்" என்று எனக்குத் திருப்தி யளித்தது: என் மன வேதனையை அகற்றியது.

** ** **

பல நாட்கள் எண்ணி, எண்ணித் திட்டமிட்டேன். அதன் விளைவாக "பாஸ்கர மன்றம்" என்ற பெரிய மாளிகை எழுந்தது.

அமரர் பாஸ்கரனுக்கு விருப்பமுள்ள கல்வித் தொண்டில் என் வாழ்நாளையும், பொருளையும் செலவிடச் சித்தமானேன். பெண் குழந்தைகளுக்குக் கல்வியுடன் சங்கீதம், ஆண் குழந்தைகளுக்குப் படிப்புடன் தொழிற் கல்வியும் போதிக்கத் திறமை மிக்கப் பலரை நியமித்தேன். மக்களும் ஆர்வம் காட்டினார்கள். குழந்தைகளும் நிறைய வந்து படித்துப் பயன் பெறுகின்றனர்.

என் கவலையையும் துயரத்தையும் நான் மறந்தேன். ஆனால் பாஸ்கரனின் ஆசை முகத்தையும் அன்பு மொழியையும் நான் மறக்கவில்லை. அமரர் பாஸ்கரன் என் உள்ளக் கோயிலில் நடமாடும் தெய்வமாகி விட்டார்!

Edited. Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press.
No. 20, Dr. Guruswamy Mudaliar Road. Kilpauk. Madras 10.


நாள் முழுவதும்
காலை வேளையில்
புத்துணர்ச்சி
விளையாடின பின்
அளிக்க...
இரவில்
Himalaya Bouquet
குளுமையான, நறுமணம் கொண்ட
ஹிமாலயா புக்கே
பௌடர்களை
உபயோகியுங்கள்
சரும சௌந்தர்யத்திற்கு ஹிமாலயா புக்கே ஸ்னோ
HBP. 11-60 TM

Regd. No. M. 4392

Registered as a newspaper in Ceylon